நவம்பர் 18 - 24, 2007 November 18 - 24, 2007 பக்கங்கள் - 28 20.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

விமானக்கட்டணத்துடன் யாழ் விலை 40.00

# சுடர் ஒளி

THE SUDAROLI வார மலர்



தமிழ்ச்செல்வனின் படுகொலை

சர்வதேசத்தின் பதில் என்ன?

சமஷ்டி:


'உள்ளக சுயநிர்ணய உரிமை' கோட்பாடு

ஐ.நா. பிரகடனத்தால் அங்கீகரிக்கப்பட்டது

# தமிழ்ச்செல்வனின் படுகொலை சர்வதேசத்தின் பதில் என்ன?

## யுத்தம் வெடிக்க உதவுமா? பேச்சுக்கள் ஆரம்பிக்க உதவுமா?

யாழவன்



சர்வதேசத்தின் பிரசன்னத்தில் நோர்வே அரசின் அனுசரணையுடன் கைச்சாத்தாகிய யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்று நடைமுறையில் இருக்கும்போது -

அந்த உடன்படிக்கை காரணமாக சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் முக்கிய பேச்சாளராக விளங்கிய பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு சர்வதேசம் என்ன பதில் கூறப்போகின்றது என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும். சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண வேண்டும் என்று வற்புறுத்தி நிற்கும் சர்வதேசம் –

அந்தப் பேச்சின் முக்கிய தலைவரை இலக்குவைத்து அரச பயங்கரவாதம் செயற்பட்டிருக்கின்றது என்ற உண்மைத் தன்மை சர்வதேசத்திற்கு புரிந்தும் மௌனம் காத்து வருகின்றது.

தெற்கில் ஒரு தலைவர் கொல்லப்பட்டாலோ தாக்குதல் சம்பவம் ஒன்று நடந்தாலோ கொடுக்குக்கட்டிக்



கொண்டு நான் முந்தி நீ முந்தி என்று போட்டிபோட்டுக்கொண்டு கண்டன அறிக்கைகளை விட்டுவரும் சர்வதேச சமூகம் தமிழ்ச்செல்வன் கொலை குறித்து எந்தக் கதையும் இல்லாமல் இருக்கின்றது.

நோர்வே கூட, போர் நிலைமைகளின் விளைவு கவலை கொள்ளவதாக உள்ளது என்று மட்டும் இரு வரிகளில் கூறிவிட்டு மௌனமாக இருக்கின்றது.

தெற்கில் இருந்து நாட்டின் பிரதமர் ரத்னசிறி விக்கிரநாயக்க, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல் ஆகியோர் -

பயங்கரவாதி ஒருவரைக் கொன்றுவிட்டோம் என்று குதூகலித்து அறிக்கை விடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, தெற்கில் வெடிகொளுத்தி சந்தோசம் கொண்டாடுகிறார்கள்.

தெற்கில் ஒரு தலைவர் கொல்லப்பட்டால் வடக்கு, கிழக்கிலோ வெடி கொளுத்துவதும் இல்லை; குதூகலம் கொண்டாடுவதும் இல்லை.

அரசியல் மட்டத்தில் மட்டுமல்லாது, பாமர மக்கள் மத்தியிலும், பயங்கரவாதம் என்ற - தனது ஆட்சியை இழுத்துச் செல்லப் பயன்படுத்தும் வார்த்தையை எவ்வளவு ஊறச்செய்துள்ளது தெற்குத் தலைமை என்பதற்கு இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டாக அமைகிறது.

இந்த நாட்டில் தமிழ்மக்களும் சிங்கள மக்களும் அந்நியோன்யமாக பரஸ்பரநம்பிக்கையுடன் வாழ்ந்துவந்துள்ளனர். காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வந்த தலைவர்கள் தமிழ்மக்களுக்கு எதிரான பாரபட்சக் கொள்கையைப் புகுத்தி தெற்கு மக்களுக்கு இனத் துவேசத்தை தூண்டி அதன் மூலம் ஆட்சிக் கதிரையைப் பிடித்து சுக போக வாழ்க்கையை அனுபவித்து சென்றுள்ளனர்.

ஆட்சியில் இருந்து இறங்கியபின் தாங்கள் விட்ட பிழைகளை உணர்ந்து செயற்பட முனைந்ததையும் பார்க்கிறோம்.

உதாரணத்துக்கு ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்று நடைமுறைக்கு வந்து, அரசு தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்று, பேச்சு உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது.

அப்பேச்சின் பயனாக வடக்கு, கிழக்கை மீள்கட்டுமானம் செய்வதற்காக சர்வதேசத்தின் பிரசன்னத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை முதலில் ஏற்படுத்த இணக்கப்பாடு காணப்பட்டது.

அந்த இணக்கப்பாட்டின் பயனாக இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்க அரசு தரப்பு வரைவு ஒன்றை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்தது. அந்த வரைவின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் தமது உத்தேச சட்டவல்லுநர்களுடன் ஆராய்ந்து ஒரு வரைவை அரசிடம் கையளித்தனர்.

அந்த வரைவு குறித்து அன்றைய ஆட்சியாளரான ரணில் விக்கிரம்சிங்க ஆராய முன்பே, அவரது ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தார் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ரணில் வசம் இருந்த முக்கிய அமைச்சுக்களைப் பறித்து, அரசியல் நெருக்கடியை உருவாக்கி பின் ஆட்சியை தம் வசமாக்கினார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த வரைவு கிடப்பில் போனது. பேச்சுக்களும் நின்று போயின.

பேச்சுக்கள் முடிவுக்கு வரக்காரணமாக இருந்த சந்திரிகா ஆட்சிக் கதிரையில் இருந்து இறங்கியதும், ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தி மீண்டும் எவ்வாறு அரசியலுக்குள் வரலாம் என்று முயற்சி எடுத்துள்ளார்.

தமது அரசியலையே ஒரே இலக்காகக் கொண்ட சந்திரிகா காலம் கடந்த ஞானம் பிறந்து தமிழர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்று கூறி வருகிறார்.

அன்று ரணிலுடன் சேர்ந்து விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பு வரைவை ஆராய்ந்து தீர்வு ஒன் றைக் கண்டிருந்தால், இலங்கை வரலாற்றில் முத்திரை பதித்தவராக வந்திருப்பார்.

இன்று ஆட்சியிலிருந்து இறங்கிய பின் தனது சலுகைகளுக்கும், உரிமைகளுக்குமாக நீதிமன்றத்தை நாடவேண்டிய தேவைகூட அவருக்கு ஏற்பட்டிருக்காது.

இந்த ஒரு விடயம் மட்டுமல்ல இலங்கை யில் ஆட்சிக்குவந்த தலைவர்கள் எல்லோரும் தமது அரசியலுக்கு தமிழர் விவகாரத்தை துரும்பாக பயன்படுத்துவதால்தான் பிரச்சினைக்கு தீர்வு கிட்டாமல் போகிறது.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டால் எந்தத் தலைவருக்கும் சிங்கள மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று நீடித்த கால ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது என்பதுதான் யதார்த்தம்.

இதே போன்று இன்றும் ஆட்சியில் இருப் பவர்களும் பயங்கரவாதம் என்று ஒருபுறமும் சமாதான தீர்வு என்று மருபுறமும் இரட்டை வேடப் போக்கை கடைப்பிடித்து சிங்கள மக்களையும் சர்வ தேசத்தையும் திருப்திப்படுத்திக் கொண்டு ஆட்சியை இழுத்துச் செல்லலாமே தவிர -

இந்த நாட்டின் அமைதியையோ, அபிவிருத்தியையோ கொண்டுவர முடியாது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கிழக்கை மீட்டதுபோல் வடக்கையும் மீட்டு பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து விடலாம் என்று தெற்குத்தலைவர்கள் குதூகலித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எந்தப் பிரதேசத்தைப் பிடித்தும் நாட்டில் அமைதியைக் கொண்டுவர முடியாது. இது உலக வரலாறு.

கிழக்கை முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டதாக தெற்கில் குதூகல விழாக்கள் வைத்துக் கொண்டாட்டங்கள் இடம் பெற்றன. ஆனால் இன்று கிழக்கில் - அங்கு தாக்குதல், இங்கு தாக்குதல் எனத் தினமும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

கிழக்கையோ வடக்கையோ மீட்டு அந்தப்பகுதி மக்களின் மனங்களை தெற்குத் தலைமைகள் வெல்லாவிட்டால் நாட்டில் அமைதி நிலைக்குப் பதில் விபரீதமான விளைவே உருவாகும்.

இந்த உண்மை நிலையைப் புரியாத தெற்குத் தலைமைகள் பேச்சுக்கு தலைமை தாங்கிய தமிழ்ச்செல்வனை படுகொலை செய்துவிட்டுக் குதூகலம் கொண்டாடுகின்றன.

இந்த யதார்த்த நிலையை சர்வதேசம் புரிந்ததாகத் தெரியவில்லை. சர்வதேசத்திடம் இருந்து காத்திரமான எதிர்ப்பு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தமிழர் விவகாரக்குழுவிடமே இருந்து மட்டுமே வந்துள்ளது.

தமிழ்ச்செல்வனின் படுகொலையுடன் சமாதானப்பேச்சுக்கான கதவுகள் படக்கென மூடப்பட்டு விட்டன என்று அந்தக்குழு அறிவித்துள்ளது.

கடந்த எட்டாம் திகதி கிளிநொச்சி வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் லான்ஸ் சொல்பேர்க்கிடம் சர்வதேசத்தின் போக்குக் குறித்து அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழ்ச்செல்வனின் படுகொலை போர்நிறுத்த ஒப்பந்த மீறல் என்று அவரிடம் விவரித்த நடேசன், இலங்கை அரசுக்கு எதிராக அனைத்துலகம் நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.[illegible]ரபாகரனும் இக்கருத்தை வலியுறுத்தி [illegible]வேக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்[illegible]

தமிழ்ச்செல்வனின் படுகொலை போர் நிறுத்த மீறல் என்று சர்வதேசம் அறிவித்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் மட்டுமே சமாதான முயற்சிகள் அடுத்த கட்டத்துக்கு நகரும். இல்லாவிட்டால் போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து இருதரப்பினரும் உத்தியோகபூர்வமாக விலகாமலேயே நாலாம் கட்டப் போருக்கான பாதை திறக்கப்பட்டு விடும் -

"அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் யுத்த நிகழ்ச்சி நிரலுடன் வருகின்றது. அது சமாதானத்துக்கான நிகழ்ச்சி நிரலுடன் வரவில்லை. எனவே அரசு யுத்தத்தை எம்மீது திணிக்குமானால் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம்" என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கத்துக்காக மீண்டும் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தெற்குத்தலைமைகள் முனையுமானால் வடக்கில் மட்டுமல்லாது தெற்கில், வடக்கு - கிழக்கின் எல்லைப் பகுதிகளில் புதிய போர் முனைகள் திறக்கப்படலாம்.

இதற்கு கட்டியம் கூறும் வகையில் தற்போது யால, திஸ்ஸமகாரம பகுதிகளில் புதிய போர் முனையொன்று திறக்கப்பட்டுள்ளது.

புதிய முனைகள் திறக்கப்படும் போது நாலாம் கட்டப்போர் வடக்கு, கிழக்கில் மட்டுப்படுத்தப்படாமல் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படலாம்.

இதைத் தடுத்து நிறுத்த, தெற்குத் தலைமை என்ன செய்யப் போகின்றது? சர்வதேசம் என்ன செய்யப் போகின்றது? அதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

* * *

# Tomorrow's Leaders




## ஒன்றிணைந்து நாம் உலகை வெல்வோம்

நாளைய தலைவர்களுக்கு முடிசூட்டும், செலிங்கோ பிரணாம புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். இச்சந்தர்ப்பம் திறமை மிக்க செலிங்கோ காப்புறுதிதாரர்களின் பிள்ளைகளுக்கானது. உங்கள் பிள்ளை கல்வி, விளையாட்டு, கலை மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் போன்ற துறைகளில் திறமையுடையவர்களாயின் இதற்கு விண்ணப்பிக்க அவர்கள் முழு தகுதி உடையவர்களாவார்கள். உங்கள் செலிங்கோ பிரணாம விண்ணப்பப்படிவங்களை அருகில் இருக்கும் செலிங்கோ லை:.ப் கிளையில் அல்லது 011 2 461 461 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் இன்றே பெற்றுக்கொள்ளலாம்.

2007 செலிங்கோ பிரணாம புலமைப்பரிசில் கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது.

- ஆண்டு 5 - 2006 மற்றும் 2007 - ஒவ்வொன்றும் ரு. 60,000/- பெறுமதியுடைய 50 புலமைப்பரிசில்கள்
- க.பொ.த (சாதாரண தரம்) - 2006 - ஒவ்வொன்றும் ரு. 36,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
- க.பொ.த (உயர் தரம்) - 2007 - ஒவ்வொன்றும் ரு. 72,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
  - ஒவ்வொன்றும் ரு. 10,000/- பெறுமதியுடைய 75 புலமைப்பரிசில்கள்
- தேசிய திறமை விருதுகள் - 2006/2007 - ஒவ்வொன்றும் ரு. 25,000/- பெறுமதியுடைய 10 புலமைப்பரிசில்கள்

நாளைய தலைவர்களுக்கு செலிங்கோ பிரணாம புலமைப்பரிசில்

விண்ணப்பங்கள் 2007 நவம்பர் 30ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

செ லி ங் கோ லை :. ப்

செலிங்கோ இன்சூரன்ஸ்

இல. 134, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே (011) 2 461 461 www.ceylincolife.com

(சென்றவாரத் தொடர்ச்சி)

நேபாள தலைநகரின் மத்தியில் அமைந்துள்ள Royal Nepal Army தலைமை அலவலகத்திற்குச் சென்றோம். மாவோயிஸ்ட் படைமுகாமுக்குச் சென்றபோது காணப்பட்ட கெடுபிடிகள் இங்கு இல்லை. முன்கூட்டியே அனுமதி பெறப்பட்டிருந்ததால், எம்மை அடையாளம் கண்டவுடன் உள்ளே செல்ல அனுமதித்தனர்.

மன்னரின் இனத்தைச் சேர்ந்த சைத்திரியர்கள் மட்டும்தான் தளபதிகளாகவும் உயர் அதிகாரிகளாகவும் இருக்கின்றனர் என்பது தவறு. பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட இனத்தவர், ஏனைய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோரும் பிரிகேடியர்களாகவும், கேணல்களாகவும் இருக்கின்றனர். நான் இன்று அதி உயர் பதவியில் இருக்கின்றேன். நான் சைத்திரியன் இல்லையே'' என்று

இவற்றுக்கெல்லாம் எப்போது விமோசனம் கிடைக்கப் போகிறது என ஏங்குகின்றனர் பாதிக்கப்பட்ட பொதுமக்கள்.

எங்களுடைய சந்திப்புகளுக்கும் உரையாடல்களுக்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது நேபாளத்தின் பிரபல சட்ட மேதையும் சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான டாக்டர் பிஸ்வா கே.மைதாரலி அவர்களுடனான சந்திப்பு

குண்டுகளை வீசுகின்றது. தமிழ் மக்கள் கடத்தப்படுகின்றனர், காணாமல் போகின்றனர். சிறுபான்மை தமிழ் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன் என்றெல்லாம் சர்வதேச அரங்கில் பதியப்பட்டுள்ளது.

இதனாலேயே சிறுபான்மை தமிழர்கள் விடுதலை வேண்டி ஆயுதம் ஏந்தி போராட்டத்தில் குதித்துள்ளனர். இது பலமிக்க

# இரட்டை வேடத்தில் இந்தியாவும் இழுபறிக்குள் நேபாளமும்

ஓர் ஆயுதப் பாசறை போன்றோ அல்லது கரடுமுரடான தோற்றமோ இல்லை. மிகவும் அழகான இயற்கை சூழலில் மிகவும் ரம்மியமான ஓர் ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் செல்வது போன்ற பிரமை ஏற்பட்டது.

இதேபோன்று, நமது நாட்டின் இராணுவ முகாம்களுக்கும், இராணுவத் தலைமையகத்திற்கும் பலமுறை சென்றுள்ளோம். இங்கே சிரிக்கத் தெரியாதவர்களும் கதைக்க விரும்பாதவர்களும் வேண்டாவெறுப்புடன் அளந்து பேசுகின்றனர்.

ஆனால், நேபாள இராணுவத் தலைமையகத்தில் எம்மை எதிர்கொண்ட அனைவருமே இருகரங்களையும் கூப்பி 'நமஸ்கார்' என்று கூறி இன்முகத்துடன் வரவேற்றனர்.

தினசரி ஆயுதங்களுடன் வாழ்ந்தாலும் மிகவும் சாதாரணமாகப் பேசுகின்றனர். ஒவ்வொருவருடைய முகத்திலும் என்ன உதவி செய்யவேண்டும் என்று கேட்பதைப் போன்ற முகபாவம். இனிமையானவர்கள். தளபதிகள் முதல் படைச் சிப்பாய்கள் வரை அப்படியே பழகினர்.

இராணுவத் தளபதி ஜெனரல் ரமீந்திரசெத்ரி சுயமாக நடமாட முடியாத நிலையில் இருந்தார். ரிமோட் கொன்ட்றோல் சக்கர நாற்காலியில் அமர்ந்த வண்ணமே இராணுவ நிர்வாகங்களை மேற்கொள்கின்றார். மாவோயிஸ்ட்டுகளுடன் இடம் பெற்ற தோதலின் போது ஒரே நாளில் இரண்டு தடவைகள் தாக்குதலுக்கு உள்ளாகி இடுப்புக்கு கீழ் செயலிழந்து விட்டது. இதனை ஓர் இழப்பாகவோ அல்லது குறையாகவோ காட்டிக் கொள்ளவில்லை. மிகவும் தைரியமாக இருக்கின்றார்.

நாம் சென்றபோது அவர் சிறிது சுகவீனமுற்றிருந்தார். அப்படியான நிலையிலும் நேரடியாக எம்முடன் சில நிமிடங்கள் உரையாடிவிட்டு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார். அது அவருடைய பெருந்தன்மையை வெளிப்படுத்தியது.

தொடர்ந்து இரண்டாம் நிலை அதிகாரியும் இராணுவப் பேச்சாளருமான பிரிகேடியர் லெப்டினன் கேணல் நரேஷ்பட் எம்முடன் உரையாடினார்.

''நாம் மாவோயிஸ்ட்டுகளை தோற்கடிக்கவில்லை. அவர்களும் வெற்றியடைந்துவிடவில்லை. ஒரே உறைக்குள் இரண்டு கத்திகள் இருக்க முடியாது. ஒரே நாட்டில் இரண்டு இராணுவங்கள் இருக்கக் கூடாது. சமாதானம் ஏற்பட வேண்டும். பொதுமக்கள் நிம்மதியாக இருக்க வேண்டும். சகஜநிலை திரும்ப வேண்டும் என்ற உடன்பாடு காணப்பட் டதாலேயே நாம் முகாம்களில் தங்கி உள்ளோம்.

நாட்டின் பாதுகாப்புக்கு பொறுப்பானவர்கள் நாங்கள். இப்பொழுதும் மன்னரின் மாளிகை உட்பட பிரதமர், நாடாளுமன்றம் மற்றும் கேந்திர நிலையங்களுக்கு நாம் பாதுகாப்பு வழங்கி வருகின்றோம். அங்கே தடியுடன் நிற்க முடியாது. அதற்காக நாம் ஆயுதத்துடன் நடமாடுகிறோம் என்று குற்றம் சாட்ட முடியாது.

நாம் மன்னருக்கு ஆதரவானவர்கள் அல்லர். நாம் தேசிய இராணுவம். மன்னர் அதிகாரத்தில் இருந்தபோது அவரது கட்டளைப்படி செயற்பட்டோம். நாடாளுமன்ற அதிகாரம் என்றால் நாடாளுமன்றத்தின் கட்டளைப்படி செயற்படுவோம்.

இராணுவம் நாட்டைப் பாதுகாப்பது. யார் அதி காரத்தில் இருக்கின்றாரோ அவருக்கு விசுவாசமாக இருக்க வேண்டியது தேசிய இராணுவத்தின் கடமை. அதன்படி செயற்படுகின்றோம்.

விளக்கம் அளித்தார் பிரிகேடியர் கேணல் நரேஷ்பட்.

அவர் இலங்கை பற்றி நன்கு அறிந்து வைத்துள்ளார். இலங்கை வடக்கு, கிழக்கு என ஒரு குறிப்பிட்ட பிரதேசங்களில்



சக்கர நாற்காலியில் இருந்து
வழி நடத்தும் நேபாள இராணுவத் தளபதி
ரமீந்திர செத்ரி



லெப்டினன் கேணல் நரேஷ்பட்

புலிகள் முகாம் அமைத்து சண்டையிடுகின்றனர். எனவே, இலங்கை இராணுவம் அப்பிரதேசங்களைக் குறிவைத்து யுத்தம் நடத்துகின்றது. குண்டு வீசுகின்றது. புலிகளின் பிரதேசம் அடையாளம் காணப்பட்டு வேட்டையாடப்படுகின்றது.

ஆனால், இங்கு மாவோயிஸ்ட்டுகள் அப்படி அல்ல. நாட்டில் எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். டாக்டர்களாக, மாணவர்களாக, வழக்கறிஞர்களாக, வர்த்தகர்களாக, சீருடை அணிந்தவர்களாக பரந்து காணப்படுகின்றனர். கிளர்ச்சியில் ஈடுபடுகின்றனர். இப்படியான நிலையில் யார் மீது குண்டு போடுவது? யாரை இனம்கண்டு அழிப்பது? கிளர்ச்சியாளர்களை ஒருபோதும் இராணுவ நடவடிக்கையின் மூலம் அழித்துவிட முடியாது. நாம் கண்ட அனுபவம் இது. இலங்கைக்கும் பொருந்தும்.

இராணுவ நடவடிக்கையின் போது மனிதப்படுகொலைகள், கற்பழிப்புகள் என்பன இடம் பெறவில்லை என்று மறுக்கவில்லை. இவ்வாறான செயல்களில் ஈடுபட்ட பலர் இராணுவத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டனை அனுபவிக்கின்றனர். மேலும் பலர் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இப்படியான செயல்களை எவராலும் அனுமதிக்க முடியாது. மனித உரிமை மீறல்களில் எவர் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர் தண்டிக்கப்பட வேண்டியவர்தான்.

மவோயிஸ்ட்டுகளைப் பற்றிக் கூறும்போது அவர்கள் மீண்டும் ஆயுதம் தூக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை உண்டு. சமாதானப் பேச்சுகள் மூலம் நிரந்தரமான தீர்வு காண வேண்டும் என்பதே எனது ஆவல்'' என்றும் அவர் வெளிப்படையாக கூறினார்.

நேபாள இராணுவத் தளபதிகளின் இந்தக் கூற்று சிந்திக்க வேண்டியது.

ஆட்கொலை, கற்பழிப்பு மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட மற்றும் மனித உரிமைகளை மீறிய இராணுவத்தினர் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் விசாரணைகள் தொடர்கின்றன என்று கூறினார்.

நமது நாட்டில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கற்பழிப்புக்கள், மனித உரிமை மீறல்கள் எத்தனை எத்தனை?

என்றே கூற வேண்டும்.

சிறந்த சட்ட மேதையான இவர் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நன்கு அறிந்தவர். கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின்போது சர்வதேச கண்காணிப்பாளராகவும் பணியாற்றியவர். அது மட்டுமன்றி இலங்கையில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டவர். காலஞ்சென்ற கலாநிதி நீலன் திருச்செல்வம், கமலசபேசன் (முன்னாள் சட்டமா அதிபர்) ஆகியோரின் நண்பர்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு மாநாட்டிலும் விசேட ஆய்வாளராக கலந்து கொண்டு உரையாற்றியவர்.

நேபாள உயர்நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள சட்டத்தரணிகள் சங்கத் தலைமையகத்தில் இவரை சந்தித்தோம்.

வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசும் சுபாவம் கொண்டவர்.

இலங்கை, நேபாளப் பிரச்சினைகள் பற்றி நேரடிப் பரிச்சயம் உள்ளவர்.

இரா.புத்திரசிகாமணி

நேரடியாகவே விசயத்துக்கு வந்து விட்டார். ''இரண்டு நாடுகளிலும் ஆயுதம் ஏந்திய குழுவினர் போராட்டம் நடத்துகின்ற போதும், போராட்டத்தின் நோக்கம், இலக்கு மாறுபட்டதே.

நேபாளத்தில் ஒரு தனிப்பட்ட மனிதனிடம் நாட்டின் நிர்வாகம் குவிந்து கிடக்கின்றது. மன்னர் என்ற போர்வையில் சர்வாதிகாரம் நடக்கிறது. மக்கள் அடிமைப் படுத்தப்பட்டிருந்தனர். இந்த மன்னரின் அதிகாரம்மதிக்கப்பட வேண்டும். ஜன நாயக அரசு, நாட்டு மக்களால் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட மக்கள் நாடாளு மன்றம் உருவாக்கப்பட வேண்டும்என்பதே போராட்டத்தின் நோக்கம்.

இங்கே பல்லின மக்கள் ஒன்று கூடி மன்னர் ஆட்சிக்கு எதிராகப் போராடுகின்றனர்.

இலங்கை நிலை அப்படி அல்ல. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக நாடாளுமன்றம் இயங்குகின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியும் இருக்கின்றார்.

ஆனால், மூவின மக்கள் வாழ்கின்ற போதும் பெரும்பான்மை இனத்தவர்கள் சிறுபான்மையினரை ஆள்கின்றனர். பெரும் பான்மையினருக்கு உள்ள அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்கு தமது பிரதேசத்தை ஆளும் உரிமை கிடையாது.

இலங்கை இராணுவம் தமிழ் மக்கள் மீது

பெரும்பான்மை அரச இராணுவத்துக்கும் சிறுபான்மை தமிழர் படையணிக்கும் இடையிலான யுத்தம். இதனால் நாட்டில் அமைதி சீரழிந்துவிட்டது.

தனியான தமிழ்நாடு என்பது சாத்தியப்படாத ஒன்று. ஆனால், சமஷ்டி முறையில் அதிகாரங்களை தமிழர்களுக் பகிர்ந்தளிக்க வேண்டும். பல்லின மக்க வாழும் நாட்டில் ஒற்றை ஆட்சிமுறை என்பது ஏற்க முடியாது. இலங்கையில் ஒற்றையாட்சி முறை என்று பிடிவாதம் பிடித்தால் அங்கே தொடர்ந்து இரத்தக் க இடம்பெறுவதை தடுக்கவே முடியாது. அதேவேளை, இராணுவ நடவடிக்கையி மூலம் தீர்வு காணவும் முடியாது. இனப் பிரச்சினை புரையோடிப் போகும். எனவே இலங்கை அரசும் தீர்வு காண வேண்டும் என்று கூறி விடை அளித்தார் கலாநிதி பிஸ்வா கே. மைதாரலி.

இலங்கையைப் பொறுத்தவரையில் நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டுள்ளது. ஆனால், நோபாளம் அப்படி அல்ல. சீனா, இந்தியா, பாகிஸ்தா ஆகிய நாடுகள் நேரடியாக நிலத் தொடர்புகளைக் கொண்டுள்ளன.

எல்லைப் பிரதேசங்களில் இந்நாடுகளின் பாதிப்பும், தாக்கமும் நிறையவே உண்டு. ஆரம்பத்தில் இந்தியாதான் மாவோயிஸ்ட்டுகளை ஊட்டி வளர்த்துவிட்டது. ஆனால், இப்பொழுது அப்படிய்ல்ல. மாவோயிஸ்ட்டுகள் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் தொடர்புகளை வளர்த்துள்ளனர் என்ற தகவல் இந்தியாவி நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதாவது, இப்பொழுது நேபாளத்தில் இந்தியாவின் கை ஓங்கி உள்ளது. இது கடைசிவரை அப்படியே நிலைத்திருக்க வேண்டும். அங்கு சீனாவும், பாகிஸ்தானு காலூன்றிவிட இடமளித்துவிடக்கூடா என்ற சுயநலம் தான் இந்தியாவின் மாற்றத்துக்குக் காரணம்.

நிலத் தொடர்புகள் உடைய இந்தியா தான் இப்படி என்றால், சிறிதும் நிலத் தொடர் புகள் அற்ற அமெரிக்காவும் இங்கே மூக்கை நுழைத்துள்ளது. அமெரிக்கத் தூதுவர் ஒரு கவர்னரைப் போலவே செயற்படுகின்றார்.

பொதுவாக இந்தியாவினதும் அமெரிக்காவினதும் தலையீடுகளை நோபாள மக்கள் விரும்பவில்லை. சுயமான சுதந்திர மக்களாட்சி, தமக்கென ஒரு அரசியல் அமைப்பு சாசனம், சுதந்திரமான நாடாளுமன்றம் உருவாக்கப்படவேண்டும் என்பவையே அனைத்து மக்களினதும் ஆவல் என்கிறார் டாக்டர் மைராலி.

இவ்விடயத்தில் நமது நாட்டில் இந்தியாவின் நிலைப்பாட்டை சிறிது ஆராய்வோம். தமிழ் மக்கள் மீது பாசம் கொண்டதைப் போன்று இந்தியா விமானத்தில் இருந்து உணவுப் பொதிகளைப் போட்டது. பின்னர் அமைதிகாக்கும் படை என்ற பெயரில் தமிழ் போராளிகளையும், அப்பாவி மக்களையும் அழித்தது. பல இளம் பெண்களை சீரழித்தது.

யாரைப் பாதுகாக்க வந்ததோ அவர்களையே அழிக்க ஆரம்பித்து கடைசியில் மூக்குடைபட்டு இந்தியா திரும்பியது.

இன்றைய நிலை என்ன? பட்டினியால் துடிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய மருந்து வகைகளைப் படகுகள் மூலம் கொண்டுவர முற்பட்டவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

அதேவேளை, தார்மீக யுத்தம், மனிதாபிமான படை நடவடிக்கை என்று கூறிக் கொண்டு தமிழ் மக்களைஅழித்து ஒழிக்கும் இலங்கை இராணுவத்திற்கு ராடார்களையும் அதிநவீன ஆயுதங்களையும், இராணுவத்

(24ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி: 'உள்ளக சுயநிர்ணய உரிமை' கோட்பாடு ஐ.நா.பிரகடனத்தால் அங்கீகரிக்கப்பட்டது

"உள்ளக சுயநிர்ணய உரிமை என்று அரசமைப்புச் சட்டங்களிலோ, அரசியல் விஞ்ஞானத்திலோ எதுவும் இல்லாதபோது அது பற்றி அன்ரன் பாலசிங்கம்தான் ஏதோ சதா கூறிக்கொண்டிருக்கின்றார்'' - என அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியமை குறித்து சீற்றமுற்ற பாலா அண்ணன், அது குறித்து எனக்கு குட்டி 'லெக்ஸர்' ஒன்றையே தொலைபேசியில் வழங்கினார் என்று கூறினேன் அல்லவா?

அது குறித்து பின் நாட்களில் அவரது பதிவுகளையும் வைத்துக்கொண்டு, அவரது வார்த்தைகளிலேயே அவற்றை வாசகர்களுக்குத் தர விரும்புகிறேன்.

ஜனரஞ்சக வார இதழ் ஒன்றின்



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி மாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்தபோது....

வாசகர்களுக்கு இது கொஞ்சம் கனமான அரசியல் பாடம் என்றாலும், இப்போதைய அரசியல் சூழ்நிலையில் புலிகளின் மதியுரைஞர் வகுத்த தந்திரோபாய திட்டம் குறித்து அவரது விளக்கத்தை நீங்கள் அறிந்திருப்பது, இந்த அரசியல் போக்குகளை நீங்கள் உணர்ந்து எடைபோட சற்று உதவியாக இருக்கும் என்பதால் கொஞ்சம் கவனம் எடுத்து - சிரத்தையுடன் - பாலாவின் விளக்கத்தைப் புரிந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன். பாலா கூறிய விளக்கம் இதுதான்:-

'சுயநிர்ணய உரிமை' என்பது வளர்ந்து வரும் ஒரு கருத்துருவம். பரிணாமம் பெற்று வரும் ஒரு கோட்பாடு. சர்வதேச

## ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர் - VIII

சட்டத்துறையில் புத்தாக்கம் பெற்றுவரும் ஒரு விதியாகவும், சர்வதே மனித உரிமை நியமமாகவும் இது கொள்ளப்படுகின்றது.

சுயநிர்ணய உரிமைக் கோட்பாடனது ஆரம்பத்தில் மேற்குலக வல்லரசுகளின் குடியேற்றத்திற்கு அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்பட்டது. பிரத்தியேகமாகக் குடியேற்ற நாட்டு மக்களின் அரசியல் சுதந்திரத்திற்கான தகைமையை நிர்ணயிப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டுக்குப் பின்பு இக்கோட்பாடு புத்தாக்கம் கண்டது. இவ்வாண்டிலேயே ஐ.நாவில் ஒரு புதிய பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. 'அரசுகள் மத்தியில் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் நிலைநாட்டுவது பற்றிய சர்வதேச சட்டவிதிகள்' என்ற ஐ.நா.பிரகடனமே நிறைவேற்றப்பட்டது. இப்பிரகடனத்தில் சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியக அம்சங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு, அக்கோட்பாடு புதிய அர்த்த பரிமாணங்களைப் பெற்றது.

'சுயநிர்ணயமும் சம உரிமை விதிகளும்' என்ற தலைப்பில் இப்பிரகடனத்திலுள்ள ஒரு விதி கீழ்கண்டவாறு கூறுகின்றது.

''ஐ.நா.சாசனத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் 'சம உரிமைகளும் மக்களது சுயநிர்ணயமும்' என்ற விதிக்கு இணங்க, எல்லா மக்களும், வெளிப்புறத் தலையீடு எதுவுமின்றி, தமது அரசியல் தகைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கும் தமது பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சியைப் பேணுவதற்கும் உரிமை உடையவர்களாவர். இந்தச் சாசனத்தின் கட்டுப்பாடுகளுக்கு அமைய ஒவ்வொரு அரசும் இந்த உரிமைக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது''

(இங்கு 'மக்கள்' என்பது ஒவ்வொரு 'மக்கள் கூட்டத்தையும்' குறிக்கின்றது என்பதைக் கவனத்தில் கொள்க)

1970 ஆம் ஆண்டின் ஐ.நா. பிரகடன விதிகள் சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியக அம்சங்களைத் தெளிவாகக் காட்டுகின்றன.

சுயநிர்ணய உரிமையானது வழமையான உள்ளீடாக, அதாவது ஓர் அரச கட்டமைப்புக்கு உட்பட்டதாக நிறைவு பெறவேண்டும். ஐ.நா. சாசனத்தின் விதிகளுக்கு இசைவாக, ஒவ்வொரு அரசும் தனது ஆட்சிக்கு உட்பட்ட மக்களுக்கும் சம உரிமையும், சுயநிர்ணய உரிமையும் வழங்கக் கடமைப்பட்டிருக்கின்றது.

இதனையே உள்ளக சுயநிர்ணய உரிமையாக ஐ.நாவின் 1970 ஆம் ஆண்டுப் பிரகடனம் எடுத்தியம்புகின்றது.

சுதந்திரமான, இறையாண்மையுடைய அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை இப்பிரகடனம் உறுதிப்படுத்துகின்றது. ஆனால், அதேவேளை, பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை வலியுறுத்தும் அரசுகள் சில தகைமைகளைப் பெற்றிருக்கவேண்டும் என்கிறது இப் பிரகடனம். அதாவது, எல்லா மக்களுக்கும் சம உரிமைகளையும், சுய நிர்ணய உரிமையையும் வழங்கி, இன,மத வேறுபாடின்றி அந்நாட்டின் உள்ள மக்கள் சமூகத்தினர் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அரசுக்கு மட்டுமே பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் தகுதியும் தகைமையையும் உண்டு என்கிறது இப்பிரகடனம்.

- இவ்வாறு குறிப்பிட்ட மதியுரைஞர் பாலா கனடாவில் கியூபெக் மாநிலத்தின் பிரிவினைப் பிரச்சினையை கனடாவின் உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது, 1970 ஆம் ஆண்டின் ஐ.நா. பிரகடனத்தின் அடிப்படையிலும் மற்றும் சர்வதேச நியமங்களினதும் அடிப்படையிலும் அதைக் கவனத்தில் எடுத்துத் தீர்ப்பளித்தை விலாவாரியாக விவரித்தார்.

ஒருதலைப்பட்சமான பிரிவினையைப் பிரகடனம் செய்யும் பிரத்தியேகச் சூழ்நிலை பற்றிய கனேடிய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கீழ்கண்டவாறு அமைகிறது என்றார் பாலா:-

''அரசியல் சுதந்திரத்தைப் தேர்ந்தெடுக்கும் அல்லது நிறுவிக்கொள்ளும் உரிமையான வெளியக சுயநிர்ணய உரிமை இருவகுப்பினரான மக்களுக்கு (குடியேற்ற) ஆட்சியின் கீழ் உள்ள மக்களுக்கு அல்லது அந்நிய ஆதிக்கத்தின் கீழ் உள்ள மக்களுக்கு, உரித்தாகும்.

ஏகாதிபத்திய வல்லரசிடமிருந்து உறவை முறித்துக்கொண்டு, தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்குக் குடியேற்ற நாட்டு மக்களுக்கு உரிமையுண்டு என்பது இப்பொழுது விவாதத்திற்கு இடமற்ற உண்மையாகி விட்டது.'

'குடியேற்றத்துக்கு வெளியான சூழ்நிலையை எடுத்துக்கொண்டால் 'ஒரு மக்கள் சமூகம்' அந்நிய அடக்குமுறைக்கும் ஆதிக்கத்துக்கும், சுரண்டல் முறைக்கும் ஆளாகும்போது வெளியக சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டலாம்.

'ஒரு தலைப்பட்சமான பிரிவினைக்கு சுயநிர்ணய உரிமையைப் பாவிக்கும் மூன்றாவது சூழ்நிலை பற்றியும் சில மதியுரைஞர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த மூன்றாவது சூழ்நிலை பற்றிப் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டபோதும், ஒரு மக்கள் சமூகம் தனது உள்ளக சுயநிர்ணய உரிமையை அர்த்தபூவமான முறையில் அடைவதற்கு தடை ஏற்படுமானால் இறுதி வழிமுறையையாகப் பிரிந்து செல்லும் உரிமையைப் பிரகடனப் படுத்த அம்மக்களுக்கு உரிமை உண்டு''

- எனக் கனேடிய நீதிமன்றம் சுட்டிக்காட்டுகிறது என்றார் பாலா.

- இதற்கு மேலும் பாலா விளக்குகின்றார். அவர் கூறுகின்றார்:-

சுயநிர்ணய உரிமையின் உள்ளக வெளியக அம்சங்கள் ஒன்றோடு ஒன்று இணையப் பெற்று இருக்கின்றன.

மக்களின் சம உரிமைகளும், சுயநிர்ணய உரிமையும் உள்ளீட்டாக நிறைவு செய்யப்படுவது அரசுகளின் கடப்பாடு என்பதை ஐ.நா. பிரகடனங்கள் வலியுறுத்தியுள்ளதை நாம் பார்த்தோம்.

ஓர் அரசின் கட்டமைப்புக்கு உள்ளேயே இந்த உரிமைகள் (சம உரிமையும் சுயநிர்ணய உரிமையும்) நிறைவு காணப்பட்டால் மட்டுமே ஓர் அரசானது பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தமுடியும்.

ஆனால், ஒருமக்கள் சமூகத்திற்கு அதன் உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு, அரசாட்சியிலிருந்து ஒதுக்கப்பட்டு, அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டால், அம்மக்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமைக்கு, அதாவது பிரிந்து சென்று அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டும் உரிமைக்கு உரித்துண்டு.

- வித்தி -

உள்ளக சுயநிர்ண உரிமை மறுக்கப்பட்டு, அரச அடக்கு முறைக்கு ஆளாகும் மக்கள் வெளியக சுயநிர்ணய உரிமைக்கு உரித்தா னவர்கள் என்பதை, 1970 இன் ஐ.நா. பிரகட னத்தை யும் கனேடிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் மேற்கோள் காட்டி நிறைய ஆய்வுப் பிரசுரங்கள் வெளியாகியுள்ளன.

சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியகப் பரிமாணங்களின் உறவுநிலையை ஆதாரமாகக் கொண்டே விடுதலைப் புலிகளின் கொள்கை நிலைப் பாட்டைப் பரிசீலனை செய்யவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாநிலத்தில் வாழும் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் சமூகமாக அ[illegible]ள். ஒரு[illegible]


மனோதத்[illegible]
(GENER[illegible]
இளம் வயதில் வாலிபத் தூ[illegible]
குறைவு, சக்தி குறைவு, [illegible]
குறைவுடன்[illegible]
◆ஆரம்ப மன நோய்களை[illegible]
◆ஆஸ்மா, நீரிழிவு, தலை[illegible] போதல், மாதவிடாய் [illegible] வைத்தியம் உண்டு.
பிரபல[illegible]
SEXUAL D[illegible]
மனித உறுப்புக்க[illegible] ஏற்படுவது இயல்[illegible] (பிறவியிலேயே [illegible]
◆ அளவுக்கதிகமாக வி[illegible]
◆ கனவிலும் நினைவி[illegible]
◆ உடல்பலவீனம்[illegible]
உறுப்பு சிறுத்[illegible]

சுடர் ஒளி
நவ.18 - நவ.24. 2007
8.5, ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பாக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## இனப்பிரச்சினையும் சர்வதேச சமூகமும்

இலங்கையில் அரச படைகள் அப்பட்டமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றன என்றும்-

கைது செய்யப்படுபவர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்றும்-

ஆள் கடத்தல்கள், பாலியல் வல்லுறவுகள் இடம் பெறுகின்றன என்றும்-

இவற்றைத் தடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றும்- சர்வதேச சமூகம் சமீப காலமாக இலங்கை அரசு மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்து, இங்குள்ள நிலைவரங்களை நேரில் கண்டும் கேட்டறிந்தும் கொண்ட அதிகாரிகள், ராஜதந்திரிகள், தூதர்கள் ஆகியோரின் கணிப்பீடே தற்பொழுது சர்வதேச சமூகத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது என்று நம்பப்படுகிறது.

தமிழர் தாயகம் மீதான தாக்குதலை பயங்கர வாதத்துக்கு எதிரான போர் என்று கூறி இனியும் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாது. அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜன நாயகக் கட்சி வேட்பாளராகத் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்பைப் பெற்றுள்ள கிளாரி கிளிண்டன் சமீபத்தில் வெளியிட்டிருந்த கருத்து, சர்வதேச சமூகம் மேலும் ஏமாறும் நிலையில் இல்லை என்பதை தெளிவுபடுத்துகிறது.

ஆனால் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு எப்படி இருந்தாலும் அதனைத் தூக்கி எறியும் போக்கைக் கடைப்பிடித்து வரும் மஹிந்தர் அரசு விடுதலைப் புலிகளை யுத்தம் மூலம் தோற்கடிப்பதிலும் தென்னிலங்கைப் பேரினவாதம் ஏற்றுக் கொள்ளும் தீர்வு ஒன்றை தமிழ் மக்கள் மீது திணிப்பதிலும் உறுதியாக இருந்து வருவது தெளிவு. அது மட்டும் அல்ல சர்வதேச சமூகத்தையே திட்டித் தீர்க்கும் அளவுக்கும் இலங்கையின் பொறுப்புள்ள அமைச்சர்கள் நடந்து கொண்டது சமீபகால வரலாறு.

இந்த வரிசையில் தான் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சமீபத்தில் தமது கண்டனத்தை வெளியிட்டிருக்கிறார். ஐ.நா. நிறுவன அதிகாரிகளை திட்டித் தீர்த்திருக்கிறார்.

''ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் உட்பட சர்வதேச கண்காணிப்பு அமைப்புகள் அனை... ஒட்டு மொத்தமாக ஒரு தலைப் பட்... ...ப்படு ...

# அரசை அச்சுறுத்தி அடிபணிய வைக்கத் தயாராகும் மு.கா.!

மஹிந்த அரசின் மூன்றாவது வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அடுத்த மாதம் 14ஆம் திகதி இடம்பெற உள்ளது. இந்த வாக்கெடுப்பின் போது தமக்கு ஆதரவாகவும் எதிராகவும் கிடைக்கவுள்ள வாக்குகளை உறுதிப்படுத்திக்கொள்வதில் ஆளும் தரப்பும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

தேசிய அரசியலில் எழுந்திருக்கின்ற இத்தகைய இக்கட்டான சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக்கொள்வதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முனைப்புக்காட்டி வருகின்றது. இந்த சூழ்நிலையில் அரசு தன்னுடன் பேரம்பேசுவதற்கு முன்வரவேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் எதிர்பார்க்கின்றது.

### ஏன் இந்த அவலம்?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் விருப்பமின்றி-



நிர்ப்பந்தம் காரணமாகவே தன்னை இணைத்துக்கொண்டது என்று அதன் ...தேசியத் தலைவரும், அமைச்சருமான ...ஹக்கீம் அடிக்கடி கூறிவருகின்றார்.
... அரசில் சிறிலங்கா முஸ்லிம் ...கட்சிக்கும், தனக்கும் உரிய ...- மரியாதை- ...ரப்படவில்லை என்பது ...ின் ஆதங்கமாக ...ு. இதனையும் அவர் ...ங் கமாகத் ...னக்கு அதிகாரம் ...மைச்சுப் பதவியே ... அவர் ...இதற்கெல்லாம் ...தனை ...இணைந்து ...று தலைவர் ...கிறார்.
...வ

அவர்களின் இத்தகைய கருத்துக்களை அக்கட்சியின் தவிசாளரும், அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் முற்றாக மறுத்துரைத்து வருகின்றார்.

### தலைமைக்கு பஷீர் கொடுக்கும் சூடு!

சிலவாரங்களுக்கு முன் சக்தியின் மின்னல் நிகழ்ச்சியில் அதன் தொகுப்பாளர் சிறிரங்கா, மு.கா. தலைவர் ஹக்கீமின் கூற்றைச் சுட்டிக்காட்டி எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு தவிசாளர் பஷீர் சேகுதாவூத் அளித்த பதில் தலைவருக்கு சூடு கொடுக்கும் வகையில் அமைந்திருந்தது.

அதாவது, கட்சியில் ஏற்படவிருந்த இன்னொரு பிளவைத் தடுப்பதற்காகவே அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் சேர்ந்து கொண் டது என்று தலைவர் ரவூப் ஹக்கீம் கூறு கிறார் என்றால் அது அவருடைய அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையின் வெளிப்பாடே யன்றி நியாயமான - ஏற்புடைய கருத்தல்ல என்று தவிசாளர் பஷீர் அடித்துக் கூறினார்.

மேலும் தான் இக்கருத்தை முற்றுமுழுதாக மறுப்பதாகவும், தலைவரின் இத்தகைய நிலைப்பாட்டுடன் தனக்கு அறவே உடன்பாடு கிடையாது எனவும் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

### உடைவு மு.கா.வுக்கு மட்டும் சொந்தமானதா?

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மின்னல் நிகழ்ச்சியிலும் பஷீர் சேகுதாவூத் தனது நிலைப்பாட்டை உறுதி செய்தார். அதேவேளை, அரசுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை எதுவுமின்றி சேர்ந்து கொண்டதற்கான நியாயமான காரணங்களை அவரால் முன்வைக்க முடியவில்லை.

கட்சிப்பிளவு-உடைவு என்பது முஸ்லிம் காங்கிரஸுக்கு மட்டும் சொந்தமானது என்பது போல் ஊடகங்கள் அபிப்பிராயம் வெளியிடுவது தவறு எனவும் அவர் கவலை தெரிவித்தார்.

ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலும் பாரிய பிளவுகள் ஏற்பட்டுள்ளன. ஏன் கட்டுக்கோப்பு நிறைந்த- சக்தி மிக்க கட்சி என வர்ணிக்கப்படுகின்ற ஜே.வி.பியில் கூட இப்போது உடைவு ஏற்பட்டிருக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அடிக்கடி பிளவுபடுகின்றதே, அதனால் கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்படுகிறதே என்று சிறிரங்கா எழுப்பிய கேள்விகளுக்கு தவிசாளர் பஷீர் சேகுதாவுத்திடமிருந்து உரிய பதில்கள் வெளிப்படவில்லை.

### அதிகரிக்கும் முரண்பாடுகள்

அரசுடன் சேர்வதற்கான தீவிர முயற்சிகளில் பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸுடன் தவிசாளர் பஷீர் கைகோத்துச் செயற்பட்டார் என்கின்ற அபிப்பிராயத்தையும், இதன் மூலம் கட்சிக்கும் தலைமைத்துவதுக்கும் துரோகமிழைப்பதற்கு அவர் முற்பட்டார் என்கின்ற குற்றச்சாட்டையும் முற்றுமுழுதாக மறுத்துரைக்கவேண்டிய தேவை அவருக்கு இருந்து வருகிறது.

இதனால்தான் கட்சியில் இன்னொரு உடைவைத் தவிர்ப்பதற்காகவே அரசுடன் இணைந்தோம் என்கின்ற தலைமையின் நிலைப்பாட்டை தவிசாளர் பஷீர் சேகுதாவூத் அடியோடு மறுத்து வருகிறார். இதன் மூலம் தலைமைத்துவத்தின் சம்மதமின்றி - பின் கதவால் சென்று அரசுடன் சேர்வதற்கு முயற்சிக்கவில்லை என்பதையும், மு.கா. அரசுடன் இணைந்து கொண்டமைக்கு



தம் போன்றோரின் நிர்ப்பந்தங்களோ, அச்சுறுத்தல்களோ இருக்கவில்லை என்பதையும் சொல்லாமல் சொல்ல முற்படுகிறார்.

இப்படி தலைமையின் கூற்றை மறுத்துரைப்பதன் மூலமே தம் மீதான குற்றச்சாட்டுக்களைத் தகர்த்தெறிய முடியும் என அவர் கருதுகின்றார். இதன்மூலம் தனது அரசியல் தூய்மையை அமைச்சர் பஷீர் சேகுதாவூத் நிரூபிக்க முற்பட்டிருக்கின்றார். எது எவ்வாறாயினும் அரசுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டதைத் தொடர்ந்து அக்கட்சிக்குள் கருத்து முரண்பாடுகளும் பனிப்போர்களும் அதிகரித்துச் செல்கின்றன.

### அரசுக்கு விசுவாசம்

மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமின் அனைத்து வகையான கருத்துகளுடனும் அதன் செயலாளர் நாயகமான உப பயிற்செய்கை பிரதி அமைச்சர் எம்.ரி.ஹஸனலி மாத்திரமே

**அஸ்லம் எஸ்.மௌலானா**

உடன்பட்டுச் செல்வதாக அறியமுடிகிறது.

முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய நான்கு எம்.பிக்களும், அரசியல் அதியுயர் பீடத்தின் ஒரு பகுதியினரும் தலைமையின் சமகால அரசியல் நிலைப்பாடுகளுடன் ஒத்துப்போக மறுத்து- முரண்பட்டே செல்கின்றனர் எனத் தெரியவருகிறது.

கட்சியின் தலைவரும், செயலாளரும் அரசைக் கடுமையாக விமர்சித்துக் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆனால், ஏனைய எம்.பிக்களும் கட்சி முக்கியஸ்தர்கள் சிலரும் அரசுக்கு நூறு வீத விசுவாசத்துடன் செயற்பட்டு

(07ஆம் பக்கம் பார்க்க)

பிரான்ஸிலிருந்து
பரணி கிருஷ்ணரஜனி
எழுதிய
'குழந்தைகள் மீதான அரச பயங்கரவாதத்தைத் தோலுரிக்கும் It is a Kfir'
என்ற
ஆய்வுக் கட்டுரையின்
இரண்டாவது பாகம்
அடுத்த வாரம் வெளிவரும்.

# அரசை அச்சுறுத்தி....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர். அத்துடன் தலைமைத்துவத்தின் போக்கை அவர்கள் மறைமுகமாகக் கண்டித்தும் வருகின்றனர் என அறியமுடிகிறது.

இந்த நான்கு எம்.பி.க்களுள் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் இம்முறை முதல்தடவையாக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராக நியமனம் பெற்றிருக்கிறார். ஏனைய மூவரும் முதன்முறையாக பிரதி அமைச்சர்களாக நியமனம் பெற்றிருக்கின்றனர்.

**கனிந்துவரும் சந்தர்ப்பம்**

தாம் படாதபாடுபட்டு இப் பதவிகளைப் பெற்றிருக்கும் நிலையில் அரசை சீண்டி, வீண் வம்புக்குள் மாட்டி, தமக்கான வரப்பிரசாதங்களைக் குறுகிய காலத்திற்குள் இழக்கவேண்டுமா என இவர்கள் அஞ்சுகின்றனர்.

இவர்களுள் ஒருவர் மாத்திரமே மக்களால் தெரிவு செய்யப்பட்ட எம்.பியாவார். ஏனைய மூவரும் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் ஆவர். கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே ஐ.தே.க. வழங்கிய தேசியப் பட்டியல் எம்.பி. பதவிகளுக்கு தலைவர் ரவூப் ஹக்கீமினால் இவர்கள் நியமனம் செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகையினால் அடுத்தமுறை நாடாளுமன்ற ஆசனம் உறுதியில்லாத சூழ்நிலையில் தற்போது தமக்குக் கிடைத்திருக்கும் அமைச்சுப் பதவிகள் மூலம் கிடைக்கும் வரப்பிரசாதங்களை முழுமையாக அனுபவிக்கவே இவர்கள் விரும்புவர். இதனால் தான் தலைமைத்துவத்துடன் அவர்கள் ஒத்துப்போக மறுக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அரசை அச்சுறுத்தி பேரப் பேச்சுக்கு இழுக்கும் ரவூப் ஹக்கீமின் திட்டம் வெற்றியளிக்குமா என்பது சந்தேகமே. பட்ஜட் வாக்கெடுப்பில் அரசின் அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்கள் சிலர் எதிர்த்து வாக்களிக்கவுள்ளனர் என்று வெளியாகியுள்ள தகவல்களும், ஜே.வி.பி. அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டாது என்ற செய்தியும் மு.கா. தலைவர் ஹக்கீமுக்கு பெரும் உற்சாகத்தை அளித்திருக்கிறது என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஐ.ம.க. கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி.விஜயதாஸ ராஜபக்ஷவின் கட்சித் தாவல் அரசுக்கு அபாய அறிவிப்பைச் செய்திருக்கிறது.

**திட்டம் புஷ்வாணமாகுமா?**

அரசு எதிர்நோக்கியுள்ள பட்ஜெட் வாக்கெடுப்பு நெருக்கடியை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திகொள்வதற்கு மு.கா. தலைவர் ஹக்கீம் கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்றார். பட்ஜட் வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்போம் என அச்சுறுத்தி அரசை அடிபணிய வைக்க அவர் தீட்டும் திட்டம் வெற்றியளிக்கவேண்டுமாயின் மு.காவின் ஆறு வாக்குகளும் தலைவர் ஹக்கீமின் பொக்கற்றுக்குள் இருப்பது அவசியமாகும்.


ஆனால் இதில் நான்கு வாக்குகள் ஏலவே ஜனாதிபதி மஹிந்தவின் சால்வைக்குள் அகப்பட்டிருக்குமானால் ரவூப் ஹக்கீமின் திட்டம் வெறும் புஷ்வாணமாகவே போகும் என்பதில் சந்தேகம் கிடையாது.

மு.கா. தலைவர் ஹக்கீம் பட்ஜட்டை எதிர்த்து வாக்களிப்பதற்கு முற்பட்டாலும் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் போன்றோர் அரசை ஆதரிப்பதில் உறுதியாக உள்ளனர் என்று அமைச்சர் எம்.எஸ்.அமீரலி கூறிய கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கதே.


## நிரூபித்துக் காட்டும் என் மலையாள மாந்திர சக்தி

அதிசயம் ஆனால் உண்மை



46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது, எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் மேலும் எனது மாந்திரிக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப் தளம். www.drpksamy.com. குறிப்பாக மாந்திரிக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே.

**வெளிநாட்டவர்களுக்கு விசேஷ 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு. 0094 112470615**

**ஜேர்மன் அன்பரின் மடல்:** மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, சிறி துர்க்கை அம்மாளின் கிருபையாலும் தங்கள் ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700 கிலோமீற்றர் அப்பால் இருந்தவண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல்:** *எண்ணியவள் என்னிடம் வந்து சேர்ந்தாள்*- பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு என்னை வெறுத்து என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர்க் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோசத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல்:** *39 வயதில் அதிசயத் திருமணம்*- பெரு மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணம் நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்குப் பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானகோடி நன்மைகள்.

**குருநாகல் அன்பரின் மடல்:** *நெடுநாளாகத் தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி*- தெய்வ கடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்குத் திருமணம் தடைப்பட்டவண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பண்டாரவளை அன்பரின் மடல்:** *தீராத தலைவலி தீர்ந்துவிட்டது*- மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியை குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**பிரான்ஸ் அன்பரின் மடல்:** *குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி*- அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஐயா, வெளிநாட்டுக்குச் செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத் தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்கு பிரான்ஸிலிருந்து கடிதத்தை நன்றியாக எழுதுகின்றேன். என்றுமே உங்களை மறவேன்.

**இத்தாலி அன்பரின் மடல்:** *சந்தேகத்தால் பிளவுபட்ட காதல் வெற்றி*- வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய இருந்த சமயம் மீண்டும் சந்தோசமாகச் சேர்ந்தது உங்களால்தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல்:** *போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்*- அன்புக்குரிய ஐயாவுக்கு எனது கணவரை நீண்டநாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்திற்கு ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல்:** *ஜாதகத்தில் கூறியது பலித்தது*- மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்கவந்தபோது வெளிநாடு செல்வது பற்றியே அறியாதிருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக் கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன். என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்:** *அதிசய அக்னி குண்டல பூசை*- மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேடமாக நடைபெறும் அக்னி குண்டல பூசையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மைத் துன்பத்திலிருந்து காத்து வருகின்றமைக்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா.

**Prof. P.K.SAMY (J.D.G.A.N.) JP ஐயா**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO- 162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO- 13.
0112470615, 0112 342463, 001234246 4 Fax: 0094 11 2344831
நுவரெலியாவில் என் நிறுவனம்- துர்க்காதேவி ஆலயம்- இல.33, கண்டி வீதி நுவரெலியா.
Tel: 052 2222508



# வீட்டிலிருந்து ஆங்கிலம் கற்க இலகு வழி

# ENGLISH HOME STUDY PACK

வீட்டிலிருந்தே மிக சரளமாக ஆங்கிலம்
எழுத, வாசிக்க, பேச, பயிற்சி பெற
**ENGLISH HOME STUDY PACK** ஐ கற்று
**Dip in English Level 1, Level 2**
சான்றிதழ்களைப்
பெற்று பயன்பெறுங்கள்.

**காலம் 45 நாட்கள்**

**HOME STUDY PACK ஒன்றை பெறுவது எப்படி?**

நீங்கள் Study Pack ஐ பெற விரும்பின் உங்கள் Name, Address, Age & T.P.No என்பவற்றை

**SMS** செய்யுங்கள்: **0777 806 606**

அல்லது **T.P** மூலம் அழையுங்கள். **Post Card** இல் எழுதி அனுப்புங்கள்.
பொதி தபால் மூலம் உங்களுக்கு அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு
அனுப்பி வைக்கப்படும். பின்னர் ரூ.1250/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

அல்லது

ரூ.1100/= வங்கி ஒன்றில் **Romzan, Director Jei** என்ற பெயருக்கு வைப்பு செய்து வங்கி கிளையையும், வைப்பு செய்த நேரத்தையும் அறிவியுங்கள். **Study Pack** எமது முகவர் மூலம் உங்கள் வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும்.

**Commercial - 84 - 8001- 6370, Peoples - 0032 - 0014 -7562 - 520, HNB - 4157 - 3850 - 2904 - 0001**

## HOME STUDY PACK
## ஒன்றில் அடங்குபவை....?

- 15 ஆங்கில பேச்சுப் பயிற்சிப் புத்தகங்கள்.
- ஆங்கில, தமிழ் அகராதி.
- அழகிய Hand Bag.
- ஆங்கில பேச்சுப் பயிற்சி Vidio CD.
- ஆங்கில, தமிழ் அகராதி Audio CD.
- 15 பாடப் புத்தகங்களிலும் காணப்படும் பயிற்சிகளுக்கு விடைகளை தெளிவாக Jei, Answer Sheet ,எழுதி அனுப்ப வேண்டும். பயிற்சிகள் திருத்தப்பட்டு மீண்டும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## JEI JOB BANK
மூலம் தொழில் வாய்ப்பு

பாடநெறியை சிறப்பாக நிறைவு செய்யும் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் பெற உதவி மற்றும் சிபார்சுகள் Jei Job Bank மூலம் செய்யப்படும்.

**COLOMBO - KANDY**
**GAMPAHA - KALUTARA**
மாவட்டங்களில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களின் **Home Study Pack** வீட்டுக்கே வந்து தரப்படும்.

## யாருக்காக...?

ஆங்கிலம் கற்க நேரம் இல்லை என ஏங்கும் தொழில் புரிபவர்கள், ஆங்கிலம் கற்க ஆசைப்படும் மாணவர்கள், ஆங்கிலம் கற்க ஆசையிருந்தும் நேரம் இல்லாத இல்லத்தரசிகள், 16 வயதுக்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புக்காக காத்திருக்கும் இளைஞர் யுவதிகள் என அனைவரும் கற்கலாம்.

பாடநெறி முடிவில்
**Diploma in English**
**Level 1 & Level 2**
இரு சான்றிதழ்கள் வழங்கப்படும்

**அழையுங்கள்**
**0814-92 91 93**

1 Study pack




2 Certificates






# JEI INSTITUTE

**P.O.Box. 119, Kandy. Tel: 0812- 201 433, 0777- 806 606**



# வசூல் ராஜாக்களாக தனியார் மருந்தகங்கள்!

# யாழ்ப்பாணத்தில் மருந்துப் பொருட்கள் யானை விலை, குதிரை விலையில்...!



குடாநாட்டில் உள்ள தனியார் மருந்தகங்கள் சிலவற்றில் மருந்துப் பொருள்களின் விலை 5,6 மடங்கு அதிகரித்த அளவில் உள்ளதாக நோயாளர்களும் பொதுமக்களும் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறை தனியார் மருந்தகங்களுக்கு சாதகமாக அமைந்துவிடுகின்றது. இதனை வைத்துகொள்ளை இலாபம் அடிக்கும் முயற்சியில் சில குடாநாட்டு மருந்தகங்கள் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ். அரச அதிபர் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி அதனை ஒரு சீரான முறைக்கு இப்போது கொண்டு வந்துள்ளார். இதனால் தனியார் வியாபாரிகள் உட்பட அனைவரும் ஓரளவு நியாய விலையில் பொருள்களை விற்பனைசெய்வதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்த நடவடிக்கை தனியார் மருந்தகங்கள் மீது மேற்கொள்ளப்படாமையால் அவை தாம் நினைத்தவாறு மருந்து விற்பனையில் ஈடுபட்டுவருகின்றன.

தனியார் மருந்தகங்களின் – பொருள்களுக்கான விலையிடல் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என்பது யாருக்குமே தெரியாது.

யாழ். குடாநாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னால் சுமார் எட்டுக்கும் மேற்பட்ட தனியார் மருந்தகங்கள் காணப்படுகின்றன. இவற்றைவிட மாவட்ட வைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலைகள், சுற்றயல் கூறு வைத்திய சாலைகள் காணப்படுகின்ற பல பகுதிகளிலும் இத்தகைய தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் காணப்படுவதுடன் முக்கிய வீதிகளில் பிரபல்யம் மிக்க பகுதிகளிலும் மருந்து விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன.

குடா நாட்டில் மொத்தமாக 37 இற்கும் 40இற்கும் இடைப்பட்ட தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் காணப்படுவதாக சுகாதாரத் திணைக்களத்தின் புள்ளி விவரங்களில் இருந்து அறியவருகின்றது.

வலி. வடக்கு – 01, வலி.தெற்கு – 03, வலி.தென் மேற்கு – 03, வலி. மேற்கு – 04, தென்மராட்சி – 04, கரவெட்டி – 01, பருத்தித்துறை – 01, வலி. கிழக்கு – 03, நல்லூர் – 03, யாழ்ப்பாணம் – 18 எனப் புள்ளி விவரங்கள் காணப்படுகின்றன.

இந்த தனியார் மருந்தகங்கள் இப்போது எந்த விதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் நினைத்த மருந்தை நினைத்த விலைகளில் விற்பனை செய்கின்றன. அரச வைத்தியசாலைகளில் எவ்வாறான மருந்துகளுக்குத் தட்டுப்பாடோ அந்த மருந்துகளின் விலை இந்தத் தனியார் விற்பனை நிலையங்களில் 6,7 மடங்காக அதிகரித்து விடும்.

ஏ – 9 பாதை மூடப்பட்ட பின்னர் யாழ். குடாநாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். ஒரு புறத்தே இனம் தெரியாத கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல் என்பன கடந்த 14 மாதங்களாக தொடர்ந்த வண்ணம் உள்ளன.

## விரைவில் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை அவசியம்

மறுபுறத்தே பொருள்களின் விலை நினைக்க முடியாத அளவுக்கு மலைபோல் உயர்ந்துகொண்டே இருக்கின்றது. நாளுக்கு நாள் தொழில் இழந்து வருமானம் இன்றித் தவிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

தொழில் இல்லை, வருமானம் இல்லை, பொருள்களின் விலை அதிகரிப்பு, சத்துணவுப் பற்றாக்குறை ஆகியவற்றினால் நோய்கள் தொற்றிக் கொள்ள நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.


ஆஸ்மா, குருதியமுக்கம், நீரிழிவு, உளத்தாக்கம், மாரடைப்பு போன்ற நோய்களுக்கான மருந்துவகைகளைக் குடாநாட்டில் எளிதாகப் பெற்றுக்கொள்ள முடியாது. அரச வைத்திய சாலைகளிலும் அவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் தனியார் மருந்தகங்களுக்குத்தான் கொண்டாட்டம்.

ஏ – 9 பாதை மூடப்பட்டதன் பின்னர் மருந்து வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனை நீக்குவதற்கு யாழ். அரச அதிபரும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மேற்கொண்ட முயற்சி கவனமாக பிரதேச செயலாளர்கள் மூலம் மருந்தகங்கள் தெரிவுசெய்யப்பட்டு விற்பனை விலை குறிப்பிட்டு பட்டியல் பார்வைக்கு வைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் மருந்துப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்தவேளையில், பிரதேச செயலர் ஒருவர் பனடோல் வாங்குவதற்காக ஒருவரை ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டு மருந்து விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட தனியார் மருந்தகம் ஒன்றுக்கு அனுப்பிவைத்தார். அங்கு பனடோல் குறித்த விலையிலும் பார்க்க நான்கு மடங்கு அதிகரித்த விலையில் பிரதேச செயலருக்கே விற்கப்பட்டது.

இதே போன்று ஆஸ்மாவுக்குப் பயன்படும் வென்ரோலின் குளிகை வாங்குவதற்காகப் பொதுமகன் ஒருவர் தனியார் மருந்தகம் ஒன்றுக்குச் சென்றார். குறிப்பிட்ட வென்ரோலின் குளிகைக்கு பட்டியலில் போடப்பட்டிருந்த விற்பனை விலை 25சதம். எனினும் அவர் வாங்கியவிலை ஒரு ரூபா இருபத்தைந்து சதம்.


உரிய பட்டியலைப் பார்த்து விலை வேறுபட்டதற்கான காரணம் கேட்ட போது உரிய மருந்தகத்தில் நின்றவரினால் கூறப்பட்ட பதில் ''வைத்தியரின் துண்டு இல்லை. அதனால் தான் இந்த விலை.'' இவ்வாறுதான் இன்று குடாநாட்டில் உள்ள சில தனியார் மருந்தகங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.



, HOSPITAL ROAD, JAFFNA
Dispensing Chemists Druggists & Grocers

Name: ______________ Date: 06/11

| Qty. | Description | Rate | Amount |
|---|---|---|---|
| 10 | Vit-C | | 05 |
| 10 | Indocid. 25mg | | 08 |
| 10 | Piriton | | 02 |
| | 14146 Total | | 15 |



Cash Memo சிலம்பம்

PHARMACY & GROCEREY
Hospital Road, Jaffna.
Mr. ........ 06/11 200..8

| Qty | Description | Rate | Rs. | Cts. |
|---|---|---|---|---|
| 10 | [illegible] | | 10 | - |
| 10 | Vit C | | 10 | - |
| 10 | Piriton | | 10 | - |
| | | | 30 | - |
| | 3683 30 | | | |

வைத்தியரிடம் சென்று துண்டு வாங்கிக்கொண்டுவந்து இந்தக் குளிகையைப் பெறுவதாக இருந்தால் அன்று தொழிக்கு செல்லும் கூலி 500ரூபாவை இழக்க நேரிடும். அது மட்டுமன்றி வைத்தியருக்கு கட்டணம் 250ரூபாயிலிருந்து 350ரூபாவரை மொத்தம் 750ரூபாவை அவர் இழக்கவேண்டும்.

இந்தத் தனியார் மருந்தகங்களில் இந்த விலையிடல் தொடர்பான முரண்பாட்டைத் தெளிவு படுத்தும் வகையில் ஒரு சிறந்த உதாரணத்தை ஆதாரத்துடன் இங்கே தருகின்றோம்.

பொதுமகன் ஒருவர் குறிப்பிட்ட மூன்று மருந்துக் குளிகைகளை வாங்குவதற்காக யாழ். நகரப்பகுதிக்கு சென்றார். முதலில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் போதனா வைத்தியசாலைக்கு எதிரே அமைந்துள்ள பிரபல

**— வில்லவன் —**

மான மருந்தகம் ஒன்றுக்குச் சென்று10 பிறிட்டோன், 10 விற்றமின் 'சி', 10இன்டோசிற் குளிகைகளை வாங்கினார். மூன்றுக்கும் சேர்த்து மொத்தம் 15 ரூபா அவரிடம் அறவிடப்பட்டு பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டது. அதே தினத்தில் இன்னொருவர் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் முன்னைய நபர் குளிகைகளை வாங்கிய தனியார் மருந்தகத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் பஸ்நிலையத்துக்கு சமீபமாக உள்ள மருந்தகத்தில் அதே குளிகைகளை அதே தொகையில் வாங்கினார். 10 பிறிட்டோன், 10விற்றமின் 'சி', 10இன்டோசிற் என்ற தொகையில் வாங்கப்பட்ட அந்த குளிகைகளுக்கு 30ரூபா கட்டணமாக அறவிடப்பட்டு பற்றுச் சீட்டும் வழங்கப்பட்டது.

யாழ். நகரத்தில் சுமார் 50 மீற்றர் இடைவெளியிலேயே 15ரூபா விலை வித்தியாசம் என்றால் நகருக்கு வெளியே ஏனைய இடங்களில் இது எவ்வாறு இருக்கும் என்பதை வாசகர்கள் ஊகித்து அறிந்துகொள்வார்கள்.

எனவே நொந்து போயுள்ள மக்களை மேலும் ஏறி மிதிக்கும் வகையில் செயற்படும் தனியார் மருந்தகங்கள் ஒரு நியாயமான விலையிடலை விரைவில் மேற்கொள்ளவேண்டும். கேட்பதற்கு யாரும் இல்லை என்ற மமதையில் விலையிடல் மேற்கொள்ளவதை உடன் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

அரச அதிபர் உட்பட உயர் அதிகாரிகள் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு தனியார் மருந்தகங்களையும் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும்.

தடிமனுக்குப் பாவிக்கப்படும் 'இன்ஹேலர்' (Inhaller)என்ற மூக்கில் வைத்துச் சுவாசிக்கும் மருந்தை வெளியுறை (Cover) அகற்றிய நிலையில் விற்பனை செய்கின்றார்கள். காரணம் கேட்ட போது இப்போது அப்படித்தான் வருகிறது என்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. அந்த இன்ஹேலரின் பாவனைத் திகதி முடிவடைத்துவிட்டது. அதில் ஒட்டப்பட்டுள்ள பாவனைத்திகதி குறித்த ஸ்ரிக்கரை அகற்றுவதற்காகவே வெளியுறையும் அகற்றப்பட்டிருக்கிறது.

இவற்றை வாங்கிப் பாவிப்பதன் மூலம் மேலும் நோய்கள் அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளே அதிகம்.

எனவே இவ்வாறான மருந்தகங்களில் திடீர் சேதனைகள் நடத்தப்பட்டுப் பாவனைக்குதவாத மருந்துகள் அழிக்கப் படவேண்டும்.

எனவே மக்களின் அன்றாட வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ள இந்த விடயத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது. அதனை உரியவர்கள் திறம்படச் செய்வார்களா என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

★



# மோர்னிங் சிக்னஸ்!

ஆஸ்கார் விருது பெற்ற ஹொலிவுட் கறுப்பழகி ஹாலோ பெப்ரி இந்த ஆண்டு முடிவதற்குள் எப்படியும் கர்ப்பமடைந்துவிட வேண்டும் என்று விரும்பினார். புதுசாய் மாட்டிய போய்பிரண்ட் கேப்ரியல் ஆப்ரியின் காதில் ஏதோ ரகசியமாய் சொன்னார். அதைக் கேட்டு வாயெல்லாம் பல்லாகிய அந்தக் காதலன் ''கவலைப்படாதே கண்ணு... அதுக்கு நான் தயார்'' என்று வாக்குக் கொடுத்தான். பையன் படுசூரன்தான். பின்னே? அம்மணி இப்போது நாலு மாச கர்ப்பமாம்! ''என்னை கருத்தரிக்க வைத்தால் கல்யாணம் கட்டிக்கிறேன்!'' என்பதுதான் ரகசியமாய் ஹாலே பெப்ரி சொன்னது! கர்ப்பிணிகளுக்கு எப்போதும் காலை வேளைகளில் தலை சுற்றல், வாந்தி என்று உபத்திரவம் இருக்கும். இதை மோர்னிங் சிக்னஸ் என்பார்கள். ஏன் கர்ப்பம் தரித்தோம் என்று இப்போது நொந்து கொள்வார்கள் பெண்கள். ஆனால் ஹாலே பெப்ரிக்கு இந்த மோர்னிங் சிக்னல் படு ஸ்வீட்டாய் இருக்காம்! பின்னே? இது அவரே விரும்பியதாச்சே!



# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்



# அழகியின் வெட்கம்!

பல ஆயிரம் மைல்கள் பறந்து வந்து பட்டத்தை தட்டியிருக்கிறது ஒரு பஞ்சவர்ணக்கிளி. பெயர் சில்வியா பிரிசில்லா பியர்ல்ஸ் எலிசோண்டா. பெயர் கரடுமுரடாக இருந்தாலும், ஆளைப் பார்த்தால் ஐந்து நிமிடத்தில் 50தடவையாவது பிழையில்லாமல் உச்சரித்துவிடுவீர்கள். இவர்தான், இந்த ஆண்டின் 'மிஸ் இன்டர்நேசனல்!' அறுமுது நாட்டு அழகிகளை பின்னுக்குத் தள்ளி, தனது நாட்டுக்கு இந்தப் பட்டத்தை முதல் முறையாகக் கவ்விப் போயிருக்கிறது இந்த மெக்ஸிக்கோ கிளி.

''நான் கொஞ்சம் அமைதியான, அதிகமாக வெட்கப்படும் பெண். ஆனால், ஜாலியாக இருக்க வேண்டும் என்றால் என்னை யாராலும் மிஞ்ச முடியாது. தம்பி, தங்கைகளுடன் சேர்ந்து போகுமளவுக்கு விளையாடுவேன். தோட்டத்தில் பாட்டியின் மடியில் தலைவைத்து தூங்குவது ரொம்பவே பிடிக்கும். அப்படி தூங்கும் போது 'நீதாண்டி இந்த உலகின் மகாராணி' என்று அடிக்கடி பாட்டி சொல்வார். அதைக் கேட்டுக் கொண்டே கனவு காண ஆரம்பித்துவிடுவேன். இப்போது நிஜமாகவே நான் ராணி தானே?'' என்கிறார் பியர்ல்ஸ், பொசு பொசு கன்னத்துடன்.



# இலவச கல்லறை

இந்தக் காலத்தில் மனிதன் செல்லமாக வளர்க்கும் நாய்களுக்கான வசதிகள் பெருகிக் கொண்டே போகின்றன. ஸ்பெஷல் நாய் பாத்ரூம், நாய் பியூட்டி சலூன்கள், ஸ்பெஷல் நாய் உணவுகள், நாய் ஷாம்புகள், நாய் செண்டுகள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த வசதிகளில் இப்போது நாய்களுக்கென்றே தனிக் கல்லறையும் சேர்ந்திருக்கிறது.

இந்திய மாநிலமான மத்திய பிரதேசத்தில் நௌஷாத் ஹுசேன் இந்தக் கல்லறையைத் தன் வீட்டுத் தோட்டத்தில் அமைத்திருக்கின்றார். இவர் ஒரு நல்ல நாய் பயிற்சியாளரும் -ஆவார். இந்தக் கல்லறையில், பணக்காரனின் செல்ல நாய்கள் புதைக்கப்படுகின்றன. இது வரைக்கும் இங்கே 30 நாய்களைப் புதைத்திருக்கின்றார்கள். நாயின் உடலுக்கு கோடித் துணியுடுத்தி, அதைக் கல்லறையில் படுக்க வைத்து அதில் உப்பு, கற்பூரம், பன்னீர் மற்றும் சந்தனம் போன்ற பொருட்களும் வைக்கப்படுகின்றன. 'இந்து' முறைப்படி நாய்க்கு ஈமக்கிரியைகள் செய்யப்பட வேண்டுமென்று யாராவது கேட்டுக் கொண்டால், அதன் மேல் போர்த்தியிருக்கும் கோடித்துணியின் ஒரு பகுதியைத் கொள்ளி வைத்து அதை எரித்துவிட்டு, பிறகு உடல் கல்லறையில் புதைக்கப்படுகின்றது.

நௌஷாத் இந்தச் சேவையை எந்தவிதச் சுயநலமுமின்றி செய்து வருகிறார். இதற்கென அவர் பணம் வாங்குவதில்லை. அவர் நகரின் எல்லா நாய் டாக்டர்களுக்கும் தன் போன் நம்பரை கொடுத்து வைத்திருக்கிறார். இந்தச் சேவையில் அவருடைய மனைவி மற்றும் புதல்வரும் சேர்ந்து ஒத்துழைக்கின்றார்கள்.



# நியாத்துக்காக நிர்வாணமா...?

மேற்கு நாடுகளைப் போன்று இந்தியாவிலும், பெண்கள் நிர்வாணப் போராட்டத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

ராஜ்கோட்டில் ஜூலை மாதம் கணவனின் கொடுமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பூஜா சௌஹான் என்ற பெண் வெறும் உள்ளாடைகளோடு ரேங்கோர்ஸ் வீதியில் நடந்து போனது இந்தியா முழுவதும் பெரும் சர்ச்சைக்குரிய விஷயமாகிவிட்டது.

ஓகஸ்ட் மாதம் அகமதாபாத் நகரில் ஒரு சம்பவம் நடைபெற்றது. ஷாஹ் ஆலம் பகுதியில் நசீம் பானுனே என்பவருடைய குடும்பம் தாக்கப்பட்டது. பொலீஸில் புகார் கொடுத்தும் எந்தவித நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. 3 மகள்களும் வெட்ட வெளியில் நிர்வாணமாக இருக்க முயற்சி செய்தனர். தக்க சமயத்தில் பொலிஸ் வந்து அவர்களைத் தடுத்து விட்டது.

அகமதாபாத்தில் உள்ள ஓடவ் பகுதியை சேர்ந்த அசுபகன் மக்வாணி என்பவர் தமது முறைப்பாடு குறித்து பொலிஸ் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் பொலிஸ் கமிஷனர் அலுவலகத்தில் அரை நிர்வாண நிலையில் இருக்கப் போவதாக மிரட்டல் விடுத்தார். இதே பகுதியைச் சேர்ந்த சீனியர் இன்ஸ்பெக்டர் பி.டி.ஜாலா அவரை கைது செய்து பிறகு விட்டுவிட்டார்.

உண்மையில் எம்மை பாதுகாக்கும் பொறுப்பு யாருடைய கையில் இருக்கிறது?

எம்முடைய நீதி முறைகள், நிபந்தனை மற்றும் சட்ட அமைப்பை கையில் வைத்திருக்கும் காவல் துறையினர் சும்மா இருப்பதால் எத்தனையோ அப்பாவிகள் குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டியதாகிறது.

தற்போது குஜராத் முழுவதும் பெண்களுக்கான நியாயம், பாதுகாப்பு மீது அதிக நம்பிக்கை கொண் டுள்ள அவர்கள் தெரிந்தோ தெரியா மலோ சமூகத்திடம் அனுதாபம் பெற எல்லை தாண்டவும் தயாராக இருக்கிறார்கள். அதன் விளைவு தான் நீங்கள் படித்த சம்பவங்கள்.

இந்திய பெண் வழக்கறிஞர் நம்ருதா முன்ஷி இது பற்றி கூறுகையில், ''சட்டம் எப்போதும் உணர்ச்சிவசப் படுவதில்லை. அது எப்போதும் உண்மை மற்றும் சத்தியத்தை மட்டுமே பார்க்கிறது. ஒவ்வொரு பெண்ணின் மனமும் வெவ்வேறாக இருக்கிறது. ஆனால், ஆடையை அகற்றுவதால் மட்டும் பெண்ணுக்கு நீதி கிடைத்து விடாது. அவர்கள் விரும்பினால் மனரீதியான மற்றும் உடல் ரீதியான கொடுமைகளுக்கு சட்டத்தின் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ள முடியும். இதற்கு உறுதுணையாக ஏதேனும் ஒரு நடுநிலையான அமைப்பு அதாவது என்.ஜி.ஓ.க்கள் செயற்படலாம்'' என்றார்.

இது குறித்து அரசு சாரா அமைப்புக்களின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சய் தவே கூறுகையில்,

''ஆடைகளைக் களைவதன் மூலம் மக்களின் கவன ஈர்ப்பைப் பெற்று விடலாம் என நினைப்பது ஆரோக்கியமான விஷயமல்ல. ஆனால், இப்படி செய்யும் பெண்கள் கேவலமானவர்கள் என நினைப்பதும் தவறு. அதுபோன்ற பெண்கள் அவமதிப்புக்குரியவர்கள் அல்லர். இதைப் பார்த்து மற்றப் பெண்கள் இப்படி செய்ய முயற்சிக்கக் கூடாது. எனவேதான் இப்படிப்பட்ட பெண்களுக்கு புரிய வைக்க வேண்டும்.''



''எதுக்குய்யா கையைத் தடவறே?''

''நீங்கதானே ஊசி போட்டதும் கையை தடவி விடச் சொன்னீங்க...''



''டாக்டரை மாப்பிள்ளையா செலக்ட் பண்ணினது தப்பாப் போச்சு!''

''ஏன்?''


''பெண் பார்க்க வர்றீங்களா என்று கேட்டா '48 மணி நேரம் கழிச்சுத்தான் சொல்ல முடியும்' என்று சொல்றாரு!''



''உனக்குக் குளிர் ஜுரமா! ஜுரத்தை மட்டும்தான் என்னால் நிறுத்த முடியும்!?''

''ஏன் டாக்டர்?''

''இது குளிர் காலமாச்சே?''



''உடம்பைக் குறைக்கணும் என்றால் வயிற்றைக் காயப் போடணும் என்று சொன்னாங்க, அதான்!''



''இந்த நடிகைக்கு வாயிலேயும், கால்லேயும் எப்படி அடி பட்டிச்சு?''

''வாய்க் கால்ல தவறி விழுந்துட்டாங்க!''



''மாடு சரியா பால் கறக்கலை என்று சொன்னியே... டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போய் காண்பிச்சியா?''

''காண்பிச்சேன்... அவர் ஏகப்பட்ட பணத்தைக் கறந்துட்டாரு!''



# மறைந்தும் மக்கள் மனங்களில் வாழும் எம்.ஜி.ஆர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். இறந்து ஏறக்குறைய 19 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனாலும், இன்றும் தமிழ்நாட்டிலிருக்கும் திரையரங்குகளில் அவரின் திரைப்படங்களை வெளியிட்டால் கூட்டம் அலைமோதுகின்றது. திரைப்படங்கள் வெறும் பொழுதுபோக்குக்காகவே உருவாக்கப்படுகின்றன என்று அநேகமானோர் வலுவிழந்த காரணங்களை கூறினாலும் கூட, மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை பொறுத்தவரை சினிமாவின் மூலம் மக்கள் மனங்களில் நீங்காத இடத்தினைப் பிடிக்க அதை ஒரு கருவியாக பாவித்தார் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

எம்.ஜி.ஆர். ஆரம்பத்தில் திரைப்படங்களில் சிறு சிறு வேடங்களில்தான் தோன்றி நடித்தார். சதிலீலாவதி திரைப்படத்தில் சிறு வேடத்தில் 1936இல் தோன்றி நடித்த இவர் தொடர்ந்து 'இரு சகோதரர்கள்', 'மாயா மச்சீந்திரா', 'அசோக்குமார் ஸ்ரீ முருகன்', 'பைத்தியக்காரன்', 'அபிமன்யூ', 'மோகினி', என்று அடுத்தடுத்து படங்களில் தோன்றி நடித்தாலும் அனைத்திலும் சிறு வேடங்களிலேயே நடித்தார். 1947இல் ராஜகுமாரியிலும் 1950இல் மந்திரிகுமாரியிலும் கதாநாயகனாக நடித்தார். இரண்டும் வெற்றிப் படங்களாக அமையவே தன்னுடைய நடிப்பும் பாணியும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் இவர் அதிக அக்கறை செலுத்தினார். அதாவது, வெறுமனே வந்தோம், நடித்தோம், கணிசமாக பணத்தைப் பார்த்தோம் என்பதிலெல்லாம் இவருக்கு உடன்பாடு கிடையாது. தன்னுடைய நடிப்பு இப்படித்தான் இருக்க வேண்டும், மக்கள் தன்னிடம் எதை எதிர்பார்க்கின்றார்களோ அதை அளவாக கொடுப்பது மட்டுமல்ல தன்னுடைய கொள்கைகளை மிதமாக அவர்களுக்கு அளித்திட வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர்.உறுதியாக இருந்தார்.

இவர் திரைப்படங்களில் குடிகாரனாகவோ, புகைப்பிடிப்பவராகவோ தோன்ற மாட்டார். பெண்களை அவமானப்படுத்தம் விதமாக அல்லது அவர்களின் கற்புக்கு பங்கம் ஏற்படும் விதமாக நடந்துகொள்ளமாட்டார்.

எம்.ஜி.ஆர். 1936 முதல் 1978 வரையிலான திரைப்படங்களில் நடித்தார். இவர் நடித்த 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' படம் தமிழின் முதல் முழு நீள கலர் படமாகும். 'மர்மயோகி' ஏ சான்றிதழ் படம். 'கலையரசி' விஞ்ஞான கற்பனைப் படம். 'மலைக்கள்ளன்' ஜனாதிபதி பரிசு பெற்றப் படம். 'ரிக்ஷாகாரன்' படத்தில் நடித்தமைக்காக 'பாரத்' விருது கிடைத்தது.

இவர் மொத்தமாக 134 திரைப்படங்களில் நடித்திருக்கிறார். இவற்றில் ஒருசில திரைப்படங்களைத் தவிர மற்றைய யாவும் வெற்றிப்படங்களாகும். இவற்றில் தாய்ப் பாசம், நாட்டுப்பற்று, கடமை தவறாமை, சத்தியம், சகோதர பாசம் போன்றவை பல நல்ல பண்புகள் அடங்கிய கதைகளாகவே அமைந்திருக்கின்றன.

எம்.ஜி.ஆர். பொதுவாக தன் திரைப்படங்களில் தன்னை நல்லவனாக, வல்லவனாக பத்து பேரை ஒரே தடவையில் அடித்து வீழ்த்தும் வீரனாக காட்டிக்கொண்டாலும் ரசிகர்கள் அதை மிகையாக எண்ணியதில்லை. உதாரணமாக 'வேட்டைக்காரன்', 'பெரிய இடத்துப் பெண்', 'முகராசி', 'குடியிருந்த கோயில்', 'அடிமைப்பெண்', 'உலகம் சுற்றும் வாலிபன்' என்று பல திரைப் படங்களில் இவர் வீரமிக்கவராக சித்திரிக்கப்பட்டிருந்தார். அதுமட்டுமல்ல, எம்.ஜி.ஆர். தன்னுடைய சிகை மற்றும் உடையலங்காரத்தில் அதிக அக்கறை காட்டினார். இவரை திரையில் பார்க்கும் சாமான்யன் தன் இதய தெய்வமாக நினைக்குமளவுக்கு இவர் தன்னுடைய அனைத்து நடவடிக்கைகளையும் மிக சிறப்பாக மேம்படுத்திக் கொண்டார். தமிழக தாய்மார்களின் அமோக ஆதரவு எம்.ஜி. ஆருக்கு இருந்ததற்கு காரணம் அது இவரின் நடிப்புக்காக இல்லை. இவரின் சரியான ஆளுமைக்காகத்தான்.

எம்.ஜி.ஆரின் வாழ்க்கையை இரண்டு விதமாக பிரிக்கலாம். 1972க்கு முன் 1972க்குப் பின். அதாவது, 1972க்கு முன் இவர் தன் திரையுலக சாதனைகள் மூலமாக ரசிகர்களின் அமோக ஆதரவினை பெற்றுக் கொண்டார்.

ஆனால், 1972க்குப் பின் கலைஞர் கருணாநிதி மற்றும் அவர் சார்ந்த தி.மு.க. வின் மேல் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக இவர் தீவிர அரசியலில் ஈடுபட்டார்- தன்னுடைய திரைப்படங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அ.தி.மு.க. கட்சியின் கொள்கை களை இடம்பெறச் செய்தார்.

'நடிகர் திலகம்' சிவாஜி கணேஷன் தன் பண்பட்ட நடிப்பால் ரசிகர்களை கவர்ந்த போதும் அவரால் அரசியலில் பெரியளவில் வரமுடியவில்லை. சொந்தமாக கட்சியொன்றை ஆரம்பித்து கையை சுட்டுக் கொண்டார். ஆனால், எம்.ஜி.ஆரின் கதையே வேறு. அவரின் பெரிய மூலதானமே ரசிகர்கள்தான். அடுத்தது எம்.ஜி.ஆர். ஒரு துணிச்சல்காரர். எதையும் எதிர்கொள்ளக்கூடிய தைரியசாலி. சினிமாவிலும் சரி அரசியலிலும் சரி அவர் எதிரிகளை மிகவும் லாவகமாக துணிச்சலும் புத்திசாலிதனமும் கொண்டு சமாளித்து வென்றார். அண்மையில் வெளியான சூப்பர் ஸ்டார் ரஜனிகாந் நடித்து சக்கைப்போடு போடும் 'சிவாஜி' யில் ஒரு வசனம் வருகின்றது. ''நான் சிவாஜியில்ல... எம்.ஜி.ஆர்.'' இந்த வசனம் ரஜினி வாயிலிருந்து வந்ததும் ரசிகர்கள் ஆரவாரம் செய்கின்றார்கள். எழுந்து நின்று கை தட்டுகின்றார்கள். மறைந்த எம்.ஜி.ஆரின் உருவத்தை திரையில் இப்போது பார்த்தாலும் புல்லரிக்கின்றது. அவர் பெயரைச் சொன்னாலே ஓர் உற்சாகம் தோன்றுகிறது. அதுதான் எம்.ஜி.ஆர்.

அந்தக் காலங்களில் தீபாவளி, பொங்கலுக்கு எம்.ஜி.ஆர். நடித்த திரைப் படங்கள் திரையரங்குகளில் வெளியிடப் படும்போது எங்கும் திருவிழா கூட்டமாகவே இருக்கும்... எத்தனை ஆண்டுகள் ஆனாலும், 'நான் ஆணையிட்டால் அது நடந்துவிட் டால்' என ஆடிப்பாடி அதேபோல வாழ்ந்தும் காட்டிய எம்.ஜி.ஆரின் நினைவுகள் மாறாது மறையாது. இதுதான் உண்மை.!

**பாலா சங்குபிள்ளை**

## பேனா நண்பர்கள்



பெயர் :கே.திலிபரன்
வயது: 17
முகவரி:பிற்றாத் மலை கீழ் பிரிவு, அப்புத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை,கிரிக்கெட், வானொலி.



பெயர் : சு.கணேசமூர்த்தி
வயது: 27
முகவரி: பூம்புகார், கல்மடு, வவுனியா.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர் : எம்.எப்.எம்.மிஸ்காத்
வயது : 22
முகவரி: 820, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை.
பொழுதுபோக்கு: வாசிப்பு, விளையாட்டு.



பெயர் : எஸ்.தேவநாயகம்
வயது : 22
முகவரி: பிற்றாத் மலை கீழ் பிரிவு, அப்புத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, இணையம், கிரிக்கெட்.



பெயர் : விக்கினேஸ்வரன்
வயது : 20
முகவரி: 9/10, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை,கவிதை, வானொலி.

## பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.




கதவின் முன் நின்று சற்று நேரம் ஆகியும் அது திறந்துகொள்ளவில்லை. அலுப்புடன் பட்டனை அழுத்தினான்.

''தாங்கள் யார்?'' என்று கதவின் மேல்புறத்திலிருந்து ஆண் குரல் ஒலித்தது.

''டேய் சேகர், நான் தாண்டா! ஆத்மா! கதவைத் திற!''

''ஓ, மன்னிக்க வேண்டும்.'' உடனே கதவு விலக்கிகொண்டது.

உள்ளே அறை முழுவதும் காலியாக இருந்தது. நுழைந்தான்.

''மன்னிக்க வேண்டும் மதிப்புக்குரிய எஜமானரே! வாயிற் பக்கம் என் சென்ஸர் வேலை செய்யவில்லை. அஸ்ட்ரா கொம்பெனிக்குத் தகவல் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள்.''

சுவரின் அந்தரங்கத்தில் பதிந்திருந்த மெத்தை மெலிதாக வெளிவந்து பொருத்திக் கொள்ள, ஆத்மா அதில் உட்கார்ந்துகொண்டான்.

''நித்யா எங்கே?'' என்றான்.

''நித்யா யூரோவிஷனுக்குச் சென்றிருக்கிறார். பதினெட்டு முப்பதுக்கு வருவாரென எதிர்பார்க்கிறேன்.''

ஆத்மா சோம்பல் முறித்துக்கொண்டான்.

''இன்று உங்கள் அலுவலகத்தில் வெப்பம் எப்படி இருந்தது? குளிர்சாதனத்தை இணைக்கட்டுமா?''

''இதோ பார், இந்த வெட்டி மரியாதை எல்லாம் வேண்டாம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். என்வீட்டில் எனக்கு உபசாரம் செய்ய நீ யார்?'' என்றான் எரிச்சலுடன்.

''முதல் கேள்விக்குப் பதில் ஒன்பது தடவை. இரண்டாம் கேள்விக்குப் பதில் நான் உங்கள் அடிமை.''

''உன்னுடன் நான் என்ன பேச? பதினாறு கேள்விகள் கேட்டாலும் ஒவ்வொன்றாகப் பதில் சொல்வாய்?''

''இருநூற்று ஐம்பத்தாறு கேள்விகள் வரை என்னால் என் பஃபர் ஞாபகத்தில் அடுக்கிக்கொள்ள முடியும்.''

''அடுக்கிக் கொள். எனக்கு ஸோமா கலந்து கொடு.''

''இதோ உடனே தருகிறேன் எஜமானரே! அதுவரை ஸின்த்தெட்டிக் வியோலா வாசிக்கட்டுமா? க்யூபிவிஷன் போடட்டுமா?''

''இல்லை வேண்டாம். சற்று நேரம் சும்மா இரு, போதும்.''

''எவ்வளவு நேரம்?''

''போச்சுடா! நிமிஷக்கணக்கில் சொல்ல வேண்டுமா? இதோ பார்!''

''எங்கே பார்க்க வேண்டும்?''


''இதோ பார் என்றால் கவனி என்று பொருள்.''

''பார்ப்பதற்கு?''

''அதற்கும் 'இதோ பார்' தான். சமயத்துக்குத் தகுந்தாற்போல் அர்த்தம் பண்ணிக்கொள்.''

''நல்லது எஜமானரே!''

எஜமான், அடிமை,சேகர்! இவனை... இதை எதற்காக வாங்கித் தொலைத்தோம் என்று தோன்றியது ஆத்மாவுக்கு. அஸ்ட்ரா கம்பெனியிலிருந்து வந்த விற்பனை இளைஞனின் ஆசை வார்த்தைகளில் மயங்கிப்போய் இந்தச் சனியனை வாங்கித் தொலைத்துவிட்டேன். எதை எடுத்தாலும் பதில் சொல்கிறது. இயந்திர பதில்! எல்லாம் நித்யாவால்தான் வந்தது. என்ன சொன்னான் விற்க வந்த அந்தச் சின்னப் பையன்? ''சேகர்.... சே...கர்... சேவை செய்யும் கொம்பியூட்டர். இது ஓர் ஆளில்லை. மெஷினில்லை, ஓர் அமைப்பு! கொம்பியூட்டர் இருபத்தியோராம் நூற்றாண்டின் முன்னேற்றத்தின் உன்னதம்! சேகர் உங்கள் வீடு எங்கும் விரவி இருப்பான். சமையல் அறையில், படுக்கை அறையில், படிப்பு அறையில்- எங்கும் எங்கும் பதிந்த அதன் சென்ஸர்கள் உங்கள் ஆணைகளைப் பெற்றுக்கொண்டு அதன் மத்திய கொம்பியூட்டருக்கு அனுப்பும். கொம்பியூட்டர் உடனே அந்த ஆணையைச் செயல்படுத்திச் செய்திகள் கொடுக்கும். உதாரணமாக... ஸ்ரீமதி நீங்கள் கவனிக்க வேண்டும். சேகர் எனக்கு ஒரு கப் ஸோமா வேண்டும் என்று எந்த அறையி லிருந்து சொன்னாலும் போதும். உடனே கொம்பியூட்டர் சமையல் அறையில் மைக்ரோ அவனுக்குச் செய்தி சொல்லித் தேவையான கார்போ சேர்த்து இனிப்புச் சேர்த்து ஸோமா தயாராகிவிடும். சேகரின் கொம்பியூட்டரில் ஞாபக அடுக்கில் நம் தினப்படி வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை விஷயங்களும் பதிந்திருக்கின்றன. உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவான். உங்கள் அன்றாட





நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்துவான். உங்கள்...யார் இந்த அழகான பையன்? உங்கள் மகனா? இவனுக்குப் பாடம் சொல்லித்தருவான்.... நீங்கள் பார்க்க வேண்டும் நம்புவதற்கு. மன்னிக்கவும், சேகரை நீங்கள் பார்க்க முடியாது. சேகரின் எலெக்ட்ரோனிக்ஸ் முழுவதையும் உங்கள் வீட்டுச் சுவர்களின் அந்தரங்கத்தில் பதித்துவிடுவோம்! ஒவ்வோர் அறையிலும் பதிந்த ஒலிபெருக்கிகள். சென்ஸர்கள். அவைதான் சேகரின் உதடுகள், கண்கள், காதுகள், அவன் மூளை ஒரு கொம்பியூட்டர்!''

''சசி வீட்டில் கூட ஒன்று வாங்கி இருக்கிறார்களாம்!'' என்றாள் நித்யா.

''என்ன விலை?'' என்றான் ஆத்மா.

வாங்கியாகிவிட்டது. இணைத்தாவிட்டது. எத்தனை அபாரமான சௌகரியங்கள்.... நித்யாவுக்கு எனக்கு, பாபுவுக்கு... இருந்தும் அது வந்த தினத்திலிருந்து ஆத்மா அதை வெறுத்தான்!அதன் அழகான குரலை... அதன் பவ்யமான மறுமொழிகளை... அன்பும் பராமரிப்பும் கவனமும் கலந்த அதன் திறமையை. ஏன் என்று ஆத்மாவுக்கு சொல்லமுடியவில்லை.

''சேகர்!'' என்றான்.

''என்ன எஜமானரே!''

''உனக்கு அஸ்ட்ராவில் எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்கள்?''

''எனக்கு சம்பளம் இல்லை.''

''ஏன்?''

''நான் மனிதன் இல்லை.''

''பின்னே நீ யார்?''

''நான் உங்கள் அடிமை.''

''நானும் நீயும் சமம்''

''சமத்துவத் தத்துவங்கள் கி.பி. 2018இல் கொளுத்தப்பட்டன. கம்யூனிஸ...''

''நிறுத்து. மறுபடியும் பாண்டியத்தியத்தைக் காண்பிக்காதே... சேகர், ஒரு கவிதை சொல்லேன்.''

''எங்கே ஒரு பொழுதில் இரத்த வானின் கீழ்''

''இது ஒன்றுதான் உனக்குத் தெரியுமா? வேறு சொல்லேன்.''

''பொழுதில் வேறு எங்கோ கீழ் வானின் ரத்தம்''

''சே! நீ ஒரு மோசமான கவிஞன். சேகர், பல சமயம் எனக்கு உன்மேல் வெறுப்பாக இருக்கிறது.''

''நல்லது எஜமானரே!''

''நீ ஒரு மனிதனோ என்று சந்தேகம் வருகிறது.''

''நான் மனிதன் இல்லை. அஸ்ட்ராவின் சிஸ்டம் 318.''

(18ஆம் பக்கம் பார்க்க)

# மியாமி கரைதனில் சிதறிய கடலலைகள்



மெக்சிக்கோவின் டெபால்சிங்கே நகரம். அரசியல்வாதியான மெண்டோசாவும் திருமதி மெண்டோசாவும் அவர்களது மகளும் மியாமி ரெஸ்டோரண்டில் சேரிவாசிகளான சொசிமோ, பற்றிஸ் இருவரினாலும், பொலிஸ் அதிகாரி மெக்டொனாலினால் பணம் கொடுக்கப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். அச்சம்பவத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் பற்றிஸ் காருடன் எரியுண்டு போகிறான். பின்னர் மெக்டொனால் சொசிமோவை கொல்ல முயல்கிறான். தப்பியோடிய சொசிமோ பற்றிஸின் மனைவி டுமாச்சியுடன் கானகத்தே மறைந்து வாழ்கின்றான். அவர்கள் இருவரையும் தேடி காட்டுக்குள் சென்ற பத்திரிகையாளரான ரீட்டா அவர்களை சந்திக்கின்றாள். ரீட்டா காட்டுக்குள் இருந்தவாறு தகவல்களை காதலன் ஜோன்சனுக்கு அனுப்புகிறாள். இந்நிலையில் பொலிஸார் அவர்களுக்கு வலைவிரிக்கின்றனர். பொலிஸாரின் கண்களில்மண்ணைத் தூவிவிட்டு சொசிமோ, ரீட்டாவை ஜோன்சனிடம் சேர்ப்பிக்க அழைத்துச் செல்கிறான்.

இனி....

## தொடர்-8

ரீட்டாவும், சொசிமோவும் வேகமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். இரவின் சிறகுகள் விரிந்து வருகின்றன. கானகம் இருட்டாகிவிட்டது. வெளியுலகம் வெளிச்சமாகவே இருக்கிறது.வானில் கடும் சிவப்பின் கோலம்.

கடல் அலைகள் இரத்தப் பிரவாகமெடுப்பன போல் உருண்டு உருண்டு முன்னோக்கி வந்து கரை மோதிச் சிதறுகின்றன. செங்கதிரோன் பெரியதோர் அக்கினிப் பிழம்பாக கடலுக்குள் மூழ்கிக் கொண்டிருந்தான். கடல் அதனை முழுமையாக விழுங்கி விடுவதன் முன்னர் கானகத்தை விட்டு வெளியில் வந்துவிட வேண்டும். அப்போதுதான் ரீட்டாவால் ஜோன்சனை கண்டு பிடித்து, பொலிஸ் காரர்களின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு தப்பிச் செல்ல முடியும்.

அதுமட்டுமல்ல- டுமாச்சி கானகத்தில் தனியாக இருக்கிறாள். சொசிமோ திரும்பிச் சென்று அவளுடன் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ரீட்டா ஓடிக்கொண்டே நினைத்தாள். 'இங்குள்ள நிலைமையை மிகவிரைவாக வெளியுலகுக்கு தெரியப்படுத்த வேண்டும். நூற்றுக்கணக்கான ஏழை மக்களின் பிரச்சினை இது. யாரோ ஒரு பொலிஸ் அதிகாரியின் இலாபங்களுக்காக இவர்கள் பலிக்கடாவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அரச மேல் மட்ட அதிகாரிகளைச் சந்திக்க வேண்டும். உண்மைகளைச் சொல்ல வேண்டும். துரித கதியில் இவை நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் அங்குமிங்குமாக சிதறியோடி பயத்துடன் மறைந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களை மறுபடியும் அவர்களின் குடில்களுக்கு சென்று வாழ்வதற்கு வழிவகுக்க முடியும்....!'

இவ்வாறு ரீட்டாவின் எண்ணங்கள் மின்னல் வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அவர்கள் படபட வென ஓடிக்கொண்டிருந்தார்கள். மரம் செடி கொடிகளுக்கிடையியே குனிந்தும், நிமிர்ந்தும், வளைந்தும் லாவமாக ஓடுகிறார்கள்.

''ரீட்டா! நாம் எந்த திசையில் ஓடிக்கொண்டிருக்கிறோம் என்று உனக்கு தெரிகிறதா?''

''இல்லை. எனக்கு ஒன்றும் தெரியவில்லை.''

''இந்தப்பக்கமாக ஓடினால் ஓடைக்கரையின் இன்னொரு திசை வந்துவிடும். அதிலே இறங்கி ஒரு கிலோமீற்றர் தூரம் நடந்தால் பிரதான வாகனப் பகுதியின் வடக்குத் திசை வந்துவிடும்''

''ஐயோ! அது ஆபத்தானது ஆயிற்றே''

''இல்லை ஒரு ஆபத்தும் இல்லை.''

''எப்படி சொல்வாய்?''

''எனக்குத்தான் இந்த இளிச்சவாய் பொலிஸ்காரர்களை நன்றாத் தெரியுமே.''

''என்ன தெரியும்?''

''சனம் எங்கே நடமாடுகிறதோ அங்கே தான் அவர்கள் துப்பறியும் வேலை செய்வார்கள்.''

ரீட்டா சிரித்தாள்.

அவன் கூறிய விதத்தை வெகுவாக ரசித்தாள். ரசிப்பதை அவனும் கவனித்தான். திடீரென அவன் முகம் மாறியது, கவலையின் மேகங்கள் சூழ்ந்தன.

''ஆனால் இந்த ஓடைக்கரை, அதன் இந்த வடக்குத் திசை என் வாழ்வில் பெரிய களங்கமானது. இறைவன் என்னை மன்னிக்கமாட்டான்.''

அவன் குரல் தளதளத்தது.

ரீட்டா அதிசயமுடன் திரும்பிப் பார்த்தாள்.

''ஆமாம் ரீட்டா! இந்த இடத்தில் தான் பல அப்பாவிகளை நான் கண்டம் துண்டமாக வெட்டி எறிந்து இருக்கிறேன்.''

நாலு பணம் கிடைக்கும் என்றால் ஆடு மாடுகள் என்ன மனிதர்களையும் வெட்டிக் கொல்லலாம். இது பாவகாரியம் என்று அவன் என்றுமே நினைத்ததில்லை. மிருகங்கள் தமது இரைக்காக இன்னொரு பலம் குறைந்த மிருகத்தைக் கொல்கின்றன. இதில் என்ன பாவ புண்ணியம் வேண்டிக் கிடக்கின்றது என்றுதான் அவன் நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தான்.

'இழப்பு' என்பது மகாபெரும் துயரம் என்பதை அவன் என்றுமே உணர்ந்ததில்லை. நாம் கொல்பவர்களுக்கு சொந்தங்கள் உண்டு. பாசங்கள் உண்டு, உணர்வுகள் உண்டு என்பதை உணரும் சந்தர்ப்பம் இப்பொழுதுதான் அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மெக்டோனால்

தனக்கு வாழ்வு கொடுப்பவன், இரை தருபவன் தெய்வத்துக்கு சமமானவன் என்றுதான் சொசிமோ நினைத்திருந்தான்.

ஆனால், அதே மெக்டோனால் தனது பாசத்துக்கும் நேசத்துக்கும் உரியவர்களை மிகமிக கொடூரமாக வெட்டி எறிந்ததை அவனால் தாங்கமுடியவில்லை.

பாசத்தின் விலை என்ன என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தான். பாசம் என்பது மனித குலத்தை கட்டிப் பிணைத்து வைத்திருக்கின்றது என்ற உண்மை அப்பொழுதுதான் அவனுக்கு உறைத்தது.

அவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

அதே! மரங்களினூடாக நெளிந்து, சலசலத்துச் செல்லும் ஓடையின் வெளிச்ச முகம் தெரிகிறது.

அவர்கள் நின்றார்கள்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குகின்றது.

சட்டென ரீட்டாவின் கையை இறுக்கிப்பிடித்த சொசிமோ அவளை பின்னுக்குத்தள்ளி, பர்வதமென வளர்ந்து கிளை படர்த்திக் கொண்டிருந்த மரமொன்றின் பின்புறம் மறைவாக நிற்கச் செய்தான். பின்னர்- அதற்கு முன்னால் உயரமாக வளர்ந்து விட்டிருந்த தென்னை மரத்தில் விசுக்! விசுக்! கென ஏறினான். அங்கிருந்து-

வெகுதொலைவுவரை அவனால் பார்க்க முடிந்தது. வாகனவீதியின் வடக்குப்பக்கம் கூட தெளிவாகத் தெரிந்தது. அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

இரண்டு இளநீர்காய்களை வெட்டிக்கொண்டு மளமளவென இறங்கினான். சரக் சரக்கென அவற்றை சீவிய சொசிமோ ஒன்றை ரீட்டாவிடம் நீட்டி குடிக்கும்படியாகச் சொன்னான்.

அவன் மற்றதைப் பருகினான்.

ஆ!எவ்வளவு இதமாக இருக்கிறது. ஓடிக்களைத்த விதிர் விதிர்க்கும் உடம்புக்கு அமிர்தம் பருகினாப்போல் புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

''ரீட்டா! இனிமேல் உன் சாமர்த்தியம்தான்.''

''என்ன சொல்கிறாய்?''

''இந்த ஓடைவழியக உன்னை கூட்டிப்போவேன். இங்கே ஒரு பொலிஸ்காரனையும் காணவில்லை. நாம் அதன் தொங்கலுக்குப் போய் விடலாம். மொபைலை எடுத்து ஜோன்சனுக்கு அழைப்பைக் கொடு''

ரீட்டா போனை எடுத்தாள். மிக விரைவாக எஸ்.எம்.எஸ். செய்தாள்.

தொடர்பு கிடைத்துவிட்டது.

''எந்த இடம் எனக்கு எதுவும் தெரியவில்லை. சரியாகச் சொல்.''

சொசிமோவிடம் அவள் கேட்க அவன் சொன்னான்.

''பழங்காலத்து தேவாலயமொன்று இருக்கிறது. அங்கே நில் , இன்னும் சில நிமிடங்களில் வந்துவிடுவேன்.''

தகவல் பறந்துவிட்டது.

அவர்கள் ஓடைக்கரைக்கு வந்துவிட்டார்கள். அப்பொழுது- ரீட்டாவின் தொலைபேசியில் எஸ்.எம்.எஸ். க்கான அழைப்பு 'ளைங்' கென்றது.

''தேவாலயம் பக்கமாக வந்துவிட்டேன். அங்கே பொலிஸ் வாகனம் ஒன்று நிற்கிறது.!''

ரீட்டாவின் முகத்தில் திகில் படர்ந்தது. 'ஐயோ! காரியம் கெட்டுவிடுமோ' வென்று படபடத்தது.

''என்ன? என்ன?''

சொசிமோ பதட்டமுடன் கேட்டான்.




''பொலிஸ் நிக்கிறதாமே''

அவள் சொன்னாள்.

''பரவாயில்லை. ஜோன்சனை பைக்கை நிறுத்திவிட்டு தேவாலயத்துக்குள் போகச்சொல்''

தகவல் பறந்தது.

அவர்களும் ஓடத்தொடங்கினார்கள். ஓடையில் நீர் முழங்கால் அளவு சள சள வென்றோடுகிறது. நீரில் இறங்காமல் கரையோரமாக, மரங்களிடையே ஓடினார்கள்.

பாதையின் ஓரம் ஒரு நூறு யார் தொலைவில் தெரிந்தது. அவர்கள் நீரில் இறங்கினார்கள். நீரின் மீதாகவும் மரங்களும், செடிகளும், கொடிகளும் படர்ந்து அந்த இடம் இருளாகவும், வெளியில் தெரியாமலும் இருந்தது.

அங்கே பதுங்கிக் கொண்டார்கள்.

தேவாலயம் தெரிகிறது. அதன் முகப்பில் மங்கலாக விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. மாலை ஆராதனையின் ஒலி அங்கிருந்தது மெதுவாக தவழ்ந்து வருகின்றது.

தேவாலயத்தின் முன்பாக பொலிஸ் வாகனம் நின்று கொண்டிருக்கின்றது. வேறுசில வாகனங்களும் மோட்டார் சைக்கிள்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுடன் ஜோன்சனின் வண்டியும் இருப்பதாக ரீட்டா சொன்னாள்.

அனைவரும் ஜெபத்தில் கலந்து கொண்டிருக்கக்கூடும். அப்பிரதேசத்தில் வாழ்பவர்கள் இந்த தேவாலயத்துக்குச் செல்வதில்லை. சில வருடங்களுக்கு முன்னர் இந்த தேவாலயத்தில் ஒரு மத குழுவினர் ஒன்றாக கூடி தற்கொலை செய்து இறந்து கிடந்தனர். இதனால், பயந்துவிட்ட பிரதேச மக்கள் அங்கு செல்வதில்லை. கொஞ்சம் தொலைவிலுள்ள விசயம் அறியாதவர்கள் மட்டுமே கலந்து கொள்வர். ஆராதனை களின்போது சாதாரண ரோந்து பொலிஸார் தமது வாகனத்துடன் தேவாலயம் முன்பாக தரித்து நிற்பார்கள். இங்கே வாகனத்தி லிருப்பவர்கள் அவர்களாகவே இருக்க கூடும் என்று சொசிமோவுக்குத் தோன்றியது. அவன் சொன்னான்.

''நாங்கள் இன்னும் கொஞ்சம் முன்னால் போவோம். தேவாலயத்தின் பின்புறமாகவே ஓடை செல்கிறது. அங்கிருந்து ஜோன்சனுக்கு தகவலை கொடுப்போம்''

ரீட்டா தலையை ஆட்டினாள். இப்போது- முழங்காலளவு நீரினுள் இறங்கி நடக்கவேண்டியிருந்தது. அவர்கள் பின்புறத்துக்கு வந்துவிட்டார்கள். ஆனால், அங்கிருந்து முன்பக்கத்தை பார்ப்பது கஷ்டாகவிருந்தது. மிகவும் புதர் மண்டிக் கிடந்து இருள் மயமாகிவிட்டிருந்தது.

ரீட்டா மொபைலை எடுத்தாள்.

சட்டென கால் தடுமாறியது. ஒரு கல்லின் மேல் மோதியதால் தடுமாற்றம் ஏற்பட்டது. தடுமாற்றத்தில் போன் கீழே விழுந்து விட்டது. நீருக்கடியில் சென்றுவிட்ட அதனை கண்டுபிடிக்க கஷ்டமாக இருந்தது.

ரீட்டா அங்குமிங்கும் துளாவினாள், கிடைக்கவில்லை.

அவள் கலவரமடைந்துவிட்டாள்.

தேவாலயத்தின் முன்புற நிலைமையை அவதானிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்த சொசிமோவுக்கு பின்னால் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

''சொசிமோ போன் நீரில் விழுந்து விட்டது!''என்ற ரீட்டாவின் குரலைக்கேட்க, அவன் வேகமாக அவள் அருகில் நகர்ந்தான்.

நீருக்கடியில் கூர்மையாகப் பார்த்து கைகளை உள்ளே நுழைத்து துளாவினான். கிடைத்தது.

ஆனால், அது இயங்கவில்லை. ரீட்டா பல முயற்சிகளை செய்தாள். முடியவில்லை.

''சரி கவலையை விடு '' என்று கூற சொசிமோ தனது இறுகக் கட்டியிருந்த சின்ன பொதியொன்றை அவிழ்த்து, அதற்குள்ளிருந்து போனொன்றை எடுத்தபோது அவள் பிரமித்துபோனாள்.

''போனா? ஏது?''

''இது மெக்டோனால் தந்தது. இதன் மூலமே என்னுடன் தொடர்பு கொண்டு கொலை செய்வதற்கான தகவலை

(18ஆம் பக்கம் பார்க்க)




**அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!**

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் 11ஆவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

**இவ்வாரப் பரீட்சையையொட்டி, எப்பத்திரிகையிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர், முதல்முறையாக ஆரம்பித்து வெற்றிநடைபோடுகின்றது.**

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றையதினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்கு முன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள்களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடிதஉறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

**கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் படிமுறைப் பரீட்சை -11 (Steping Exam - 11) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.**

| | யாழ் மாணவர்களுக்கு மட்டும்.. |
|---|---|
| ஆசிரியர்,<br>கல்விச்சுடர்,<br>சுடர் ஒளி பணிமனை,<br>இல.85,<br>ஜயந்தமல்லிமாராச்சிமாவத்த,<br>கொழும்பு-14. | ஆசிரியர்,<br>கல்விச்சுடர்,<br>உதயன் பணிமனை,<br>இல.365,<br>கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். |

## "எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே!

எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

## பாராட்டப்படும் கல்விச்சுடர் மாணவச்செல்வங்கள்

**படிமுறைப் பரீட்சை - 09 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



| R.தர்மேஸ் | N.கிருசாகரி | டன்ஸ்டன் ஹென்றிக் | M.சர்ஜூன் | H.நுஹா |
|---|---|---|---|---|
| 185 (மன்னார்) | 181 (கல்முனை ) | 174 (கல்முனை-01) | 170 (மாவனல்ல) | 151 (நிந்தவூர்-16) |

| | | |
|---|---|---|
| S.றிப்தாஸ்<br>167 (நிந்தவூர்-19) | M.மின்னத் ஹசீமா<br>156 (நிந்தவூர்-15) | U.பாத்திமா ஷிப்றத்<br>155 (நிந்தவூர்-12) |
| K.பாக்கிஹா<br>155 (நிந்தவூர்-13) | S.சஸ்னி<br>158 (நிந்தவூர்) | F.சமீஹா<br>151 (நிந்தவூர்) |
| F.சிப்னி<br>148 (நிந்தவூர்-02) | பாத்திமா றிஸ்வானா<br>140 (நிந்தவூர்) | W.அப்தால்<br>140 (நிந்தவூர்) |

### மாணவர் கவனத்திற்கு!

உங்களுடன் போட்டிபோட ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகள் இருப்பதால் கவனமாகப் படித்து, விளங்கி விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். வினாத்தாளின் வலதுபக்க மேல்மூலையில் உள்ள விவரங்களைத் தயவு செய்து தெளிவாகப் பூர்த்தி செய்வதோடு, படிமுறைப்பரீட்சை வினாத்தாள்களைச் செய்து அனுப்பும் போது, உங்கள் தெளிவான புகைப்படம் ஒன்றையும் அதனுடன் இணைத்து எமக்கு அனுப்பி வைக்கவும்.

-கல்விச்சுடர் ஆசிரியர்-

சுடர் சிந்தனை:- "நாளைக்கு என்று எதையும் தள்ளிப்போடாதே - ஏனெனில், நாளை என்பது உனக்குச் சொந்தமில்லை"

## படிமுறைப் பரீட்சை - 11 நேரம்: 1 மணி

மாணவர் பெயர் : ........................................
முகவரி : ........................................
கற்கும் பாடசாலை/ : ........................................
கல்வி நிலையம் : ........................................
தொலைபேசி இலக்கம் : ........................................

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1-5 வரையான வினாக்களுக்கு விடை தருக.

தரம் 4இல் கல்விகற்கும் மாணவர்கள் பௌர்ணமி தினத்தன்று மாலை மன்னார் கடற்கரைக்குச் சென்று பல காட்சிகளை அவதானித்தார்கள். அங்கு அவர்கள் ஓடி ஆடி மகிழ்வுடன் அப் பொழுதைக் கழித்தார்கள். மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும் காட்சியும், பல படகுகள் கடலில் உலாவி வரும் காட்சியும் கடலை அலங்கரித்தன. அபிநாத் கொண்டு சென்ற பட்டத்தை மாணவர்கள் ஒன்றுசேர்ந்து ஏற்றி மகிழ்ந்தார்கள். பட்டம் மேலே செல்வதைக் கண்ட பௌர்ணிமா கைகொட்டிச் சிரித்தாள். கடற்கரையின் அருகிலுள்ள புல் வெளியில் கழுதைகள் புல் மேய்ந்துகொண்டிருந்தன. இயற்கை எழில் கொஞ்சும் நகரமாக மன்னார் நகரம் விளங்கியது. நகரத்தின் மத்தியில் மாவட்டச் செயலகம், நீதிமன்றம், அரச திணைக்களங்கள், சந்தை என்பன காணப்பட்டன.

1) எத்தனையாம் வகுப்பு மாணவர்கள் கடற்கரைக்குச் சென்றார்கள்?

........................................

2) எவை கடலை அலங்கரித்தன?

........................................

3) பட்டத்தைக் கொண்டுவந்த மாணவன் யார்?

........................................

4) உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

........................................

5) அஃறிணைப் பெயர்சொல் 2 எழுதுக.

1. .................... 2. ....................

02. பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துப் பதங்களைத் தருக.

1. கரை - ....................
2. புன்னகைத்தாள் - ....................
3. மாலை - ....................
4. குறிக்கோள் - ....................

03. பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துப் பதங்களைத் தருக.

1. அங்கு - ....................
2. பல - ....................
3. மேலே - ....................
4. மெய் - ....................

04. கீழ்வரும் சொற்றொடர்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. அதி விரைவாகப் பயணம் செய்ய உகந்தது.

A B C



2. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி,

A B C



3. அதிக பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லக்கூடியது,


A B C



4. வைத்தியசாலையைக் குறித்துக்காட்டும் குறியீடு,

A B C






காமாலை (Jaundice) ஏற்படுதல் என்பவையும் பித்தக் கற்களால் ஏற்படும்.

அல்ட்ரா சவுண்ட் ULTRA SOUND ஸ்கான், CT ஸ்கான் மூலம் இவற்றை கண்டறிய முடியும். நீங்கள் முதலில் ஒரு

கழுவுப்பட்டு வெளியேறுகிறது. அவற்றின் வெற்றிடத்தை நிரப்பத்தான் இந்த சிகிச்சை என்றார். விளக்கம் தருக.

பதில்: உங்கள் வைத்தியர் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. ஆனால், உங்களுக்கு விவரமான விளக்கத்தை அளிக்காததால் குழப்பமடைந்துள்ளீர்கள். எமது குடலில் எமக்கு உதவுகின்ற நுண்ணுயிர்கள் குடிகொண்டிருக்கின்றன. இவை பற்றிரீயாக்கள் Bacteroides என்னும் நுண்ணுயிர் வர்க்கமாகும்.



# நிறைமாதத்தில் எடைகுறைந்து குழந்தை பிறந்தால் பாதிப்பு ஏதும் உண்டா?



கேள்வி: பெண். வயது 48. எனக்கு அடிக்கடி சமிபாட்டுக் குறைவு, வயிறு உப்புதல் ஏற்படுகின்றன. சில வேளைகளில் வலது பக்க விலா அடியில் வலி ஏற்படுகின்றது. அவ்வேளையில் வாந்தியும் ஏற்படுகின்றது. வயிற்றில் புண் என்று எத்தனையோ சிகிச்சை செய்தும் பலனில்லை. பரிகாரம் கூறவும்.


பதில்: சரியானபடி பரி சோதனை செய்யாமல் வயிற்றுப் புண் என்று அனுமானிப்பதும், சிகிச்சை பெறுவதும் தவறு. உங்கள் வயது மற்றும் நீங்கள் சொல்லும் குணம் குறிகளை வைத்து கணிக்கும்போது, அநேகமாக உங்களுக்கு பித்தப்பை அழற்சி அல்லது பித்தப்பையில் கற்கள் உருவாகி அதனால் ஏற்படும் அழற்சி காரணமாக இருக்கலாம். 40வயதை அடைந்த பெண்களுக்கு - அவர்கள் பருத்து இருப்பின் பித்தப்பை கற்கள் ஏற்படுவது சாத்தியம் என்பார்கள்- Fat, Forty, Female என்றால் பித்தப்பை பிரச்சினை என்று, நாற்பது வயது பெண்களுக்கு ஏற்படும் சமிபாட்டுக் குறைவுக்கு மருத்துவர்கள் காரணம் கற்பிப்பார்கள்.

பித்தப்பை என்பது கல்லீரலில் இருந்து உற்பத்தியாகும் சமிபாட்டுக்கு உதவும் சுரப்பை சேமித்து வைக்கும் பை. பித்தப்பை கற்கள் என்பது - பித்தப்பையில் ஏற்படும் படிமானத்தால் (Sediments) உருவாகும் கற்கள் போன்ற திண்மப் பொருட்கள்.

உட்கொள்ளும் உணவில் கொழுப்புச்சத்து அதிகமாக இருப்பது, உடல் பருமனாக உள்ளவர்கள் திடீரென்று உடல் இளைத்து மெலிவது, கருத்தடை மாத்திரைகள் அதிகம் உபயோகிப்பது போன்ற காரணங்களால் பித்தப்பை கற்கள் உருவாகலாம். ஆண்களை விட பெண்களுக்கு இந்த பித்தகற்கள் உருவாகும் சாத்தியம் அதிகம். இதற்கு பெண் ஹோர்மோன்கள்தான் காரணம் என்று நம்பப்படுகின்றது. இது தவிர வேறு காரணங்களுக்காக - பித்தப்பை அழற்சியுறும்போது- பித்தக் கற்கள் நாளடைவில் உருவாக வாய்ப்பு உண்டு.

பித்தக் கற்களால் முதல் ஏற்படும் குணம் வாயுத் தொல்லை. வயிறு உப்புதல், சாப்பிட்டபின் - வயிற்றின் மேற்பாகத்தில் வலது பக்கத்தில் வலி ஏற்படுதல் பின்னர் நாளடைவில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஸ்கான் பரிசோதனையில் பித்தப்பை கற்களை கண்டறியலாம். அதே வேளையில் உங்கள் குணங்குறிகள் வயிற்றுப்புண்களாலும் ஏற்படும் சாத்தியக் கூறுகள் உள்ளதால் - Endoscopy பரிசோதனையும் இங்கு அவசியமாகின்றது.

பித்தப்பையில் கற்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டால் சத்திரசிகிச்சை செய்வது நல்லது. பித்தக்கற்களை-மருந்துகளால் கரைக்கவும் முடியும். ஆனால், நிறைய கற்கள் இருந்தால் - சத்திரசிகிச்சையே சிறந்தது. இன்று Laposroscopy முறையில்




- வயிற்றை கிழிக்காமல் பித்தப்பை கற்களை அகற்றும் சத்திரசிகிச்சை பிரபலமடைந்து வருகிறது.

கேள்வி: எனக்கு சமீபத்தில் திடீரென்று வயிற்றோட்டம் ஏற்பட்டது. தொடர்ந்து 3 நாட்கள் கஷ்டப்பட்டேன். வைத்தியம் செய்து சுகமாகினேன். சிகிச்சையின் போது எனது மருத்துவர் தினமும் இருவேளை, 'யோகட்' (Yogurt) சாப்பிடச் சொன்னார். காரணம் கேட்டபோது வயிற்றோட்டத்தின் போது குடலில் உள்ள பற்றீரியாக்கள்

இவற்றில் Lactobacilli, Enterococus, Bacteroide என்பவை பிரதானமானவை. இவை வெளியிலிருந்து உணவுகள் மூலம் குடலினுள் வருகின்ற - நோய்தரும் நுண்ணுயிர்கள் குடல் சுவர் மூலம் உடலினுள் உட்செல்வதை தடுக்கின்றன. அதுதவிர சமிபாட்டுக்கு உதவுவது மட்டுமல்லாமல் B Complex விற்றமின்கள், விற்றமின் K என்பவற்றை உற்பத்தியாக்குகின்றன. இன்று இவை எமது எதிர்ப்புச்சக்தி (Immune System) உருவாக்கத்திலும் பெரும் பங்கு வகிப்பதாக அறியப்பட்டுள்ளது. தொடர்ச்சியான வயிற்றோட்டத்தின் போது- இந்த பற்றீரியாக்கள் குடலிலிருந்து வயிற்றோட்டத்துடன் வெளியேற்றப்பட்டு விடுகின்றன. எனவே, வயிற்றோட்டம் நின்ற பின்னும் - குடல் பழைய நிலைக்கு வருவதில்லை. உணவு சமிபாடு அடையாமல் சிலவேளைகளில் அப்படியே வெளியேறிவிடுகின்றது.

Yogurt மற்றும் இளம் புது தயிர் என்பவற்றில் Lactobacilli உள்ளது. பால் சம்பந்தமான உணவுகளில் இந்த பற்றீரியாக்கள் உள்ளன. இவற்றை வயிற்றோட்டம் குறைந்தபோது- கொடுத்தால் - அவை குடலில் இழந்துபோன பற்றீரியாக்களை மீள் ஈடு செய்யும் என்ற நம்பிக்கையில்தான் மருத்துவர்கள் தயிர், யோகட் என்பவற்றை கொடுக்கிறார்கள். இங்கு நான் இளந்தயிர் என்று முன்னர் குறிப்பிட்டதையும் விளக்க வேண்டும். தயிர், நாள்பட நாள்பட புளித்து அமிலத்தன்மை அதிகரிக்கும்போது- அதில் உள்ள பற்றீரியாக்கள் அழிந்து விடுகின்றன. எனவே தான் இளம் தயிர் பரிந்துரைக்கப்படுகின்றது.

இன்று இந்த பற்றீரியாக்களை மாத்திரை வடிவில் தருகின்றார்கள்- எனவே தயிர் - யோகட் அவசியமில்லை.

கேள்வி: எனது குழந்தை பிறந்து இரண்டு மாதம் ஆகின்றது. குழந்தையின் நிறை 2.2கி.கிராமாக இருந்தது. குழந்தையைப் பரிசோதித்த டாக்டர் குழந்தை நிறைமாதத்தில் பிறந்தாலும் எடை குறைந்திருக் கின்றதென்று கூறி- குழந்தையின் பராமரிப்பில் மிகுந்த கவனம் எடுக்கும்படி அறிவுறுத்தினார். ஏன் எனது குழந்தை நிறைகுறைந்து பிறந்தது- நிறைகுறைந்த குழந்தைக்கு பாதிப்பு ஏதும் உண்டா?

பதில்: உங்கள் குழந்தையின் நிறை - அதாவது, கர்ப்பகாலத்து வயதுக்கு - நிறை மாத குழந்தைக்கு உரிய நிறையிலும் குறைந்ததாக உள்ளது. இதனை Low Birth weight for Gestational Age or small for Gestational Age என்று குறிப்பிடுவார்கள். நிறைமாதக் குழந்தை எதுவும் 2.5 கி.கிராம் எடைக்கு கீழே இருந்தால் இந்தப் பிரிவில் அடங்குகின்றது. இதற்கு கர்ப்ப காலத்தில் தாய் போஷாக்கு குறைவு, தொற்றுகள், குழந்தைக்கு ஏற்பட்டுள்ள பிறவிக் குறைபாடுகள், Genetics அதாவது பரம்பரை அலகு காரணிகள், கர்ப்ப காலத்தில் தாய் உபயோகித்த மருந்துகள், தாய் புகைபிடித்தல், மது அருந்துதல், போதை மருந்து பாவனைகள் உள்ளவராக இருத்தல், அடிக்கடி கர்ப்ப காலத்தில் எக்ஸ்ரே எடுத்தல், கர்ப்ப காலத்தில் ஏற்படும் உயர் இரத்த அழுத்த நோய் என்பவை காரணங்களாக காட்டப்பட்டுள்ளன.

இப்படி குறை நிறையில் நிறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகள் மெலிந்து, சோர்ந்து, உலர்ந்த சருமத்தோடு தசைவலு இல்லாமல் - தோல் சுருங்கி- காணப்படும். இவற்றுக்கு சரியான கவனம் எடுத்தால் சாதாரண குழந்தையாக வளரும் என்றாலும், குழந்தை பிறந்தவுடன் குழந்தை மருத்துவர் அதனை பரிசோதித்து, எதுவித பிறவிக் குறைபாடுகள் இல்லை என்பதை கண்டறிய வேண்டும். உங்கள் குழந்தையை, மருத்துவமனையில் வைக்காமல் உடனடியாக கவனமாக பார்த்துக் கொள்ளச் சொல்லி மருத்துவர் அனுப்பியதால் - குழந்தைக்கு எதுவித பிறவி நோயும் இல்லை என்பது நிரூபணமாகிறது. சரியான போஷாக்கு ஊட்டி வளர்த்தால் உங்கள் குழந்தை தேறிவிடும். குழந்தையை நேரடியாக ஒரு குழந்தை வைத்தியரிடம் காட்டி அதற்குரிய போஷணை, உணவு முறைகளை அறிந்து- ஊட்டி வர - குழந்தை நன்றாக வளரும்- கவலை வேண்டாம்.

‘வேதா’
அருண் விஜய் - ஷீலா



# தங்கர் பச்சான் இய

தங்கர் பச்சான் இயக்க, அதில் விஜய் நடித்தால் எப்படி இடிக்கும்? தங்கர் படத்தில் நடிக்
விஜயை வைத்து படத்தை இயக்குவேன் என்று தங்கரும் கூறியுள்ளார். தங்கர்ச்சான் இ
ரூபாய் நோட்டு’ என்ற படம் உருவாகியுள்ளது. தங்கர் பச்சான் எழுதிய ‘ஒன்பதுரூபாய்
ஜோடியாக அர்ச்சனா நடித்துள்ளார். நாசர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். தீபாளிக்கு இ
பல படங்கள் வெளிவந்துள்ளதாலும் திரையிட திரையரங்குகள் கிடைக்காத காரணத்தினா
ஓடியோ வெளியீடு சென்னையில் உள்ள கர்நாடக சபாவில் நடந்தது. பெரும் நட்சத்திரக்கூட்
த்னம், கலைப்புலி தானு, விஜய், சத்தியராஜ், அர்ச்சனா, பரத்வாஜ், வைரமுத்து உள்ளிட்ட
விஜய் சீ.டியை வெளியிட மற்றவர்கள் அதைப் பெற்றுக்கொண்டனர். பாரதிராஜா பேசுகை
யாளங்களையும், கிராம மக்களின் வாழ்க்கையையும், கிராம மக்களின் முகங்களையும் பு
விட்டார்’’ - என்றார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட விஜய் பேசுகைல்:- ரஜி
வாழ்நாள் கனவாகும். தங்கரின் ‘ஒன்பது ரூபாய் நோட்டு’ படத்தின் பாடல்களைக் கே
என்ற ஆசை எனக்கு வந்துவிட்டது. எனக்காக இல்லாமல், அவருடைய பணியிலே
பொதுவிடயங்களையும் கலந்து என்னை நடிக்கக் கூப்பிட்டால் கண்டிப்பாக நான் அ
‘‘நாம் இந்த மண்ணின் மக்கள். நமது அடையாளங்களை வெளிக்கொண்வரும் ப
காக்க வேண்டிய கடமை எமக்கு உள்ளது. என்னைப் பே
அவர் ஆரம்பித்து வைத்த நல்ல விடயகளைத்
அவரும் தமிழ்க் கலாச்சாரத்த கைவிட்
உருவாக்கி அவரை நடிக்கவைப்பே

# ஷெரில் இனி சுனையா!

கப்டன் விஜயகாந்த்துக்குச் ஜோடியா ‘அரசாங்கம்’ படத்தில் நடிக்கும் அழகுப் பூங்கா ஷெரில் பெயரை, சுனையா என்று இயக்குநர் மாதேஷ் மாற்றிவிட்டார். விஜயகாந்த் நடிக்கும் 150ஆவது படம் ‘அரசாங்கம்’. அதை அவரது மைத்துனர் சுதீஷ் தயாரிக்கிறார். மாதோஷ் இயக்குகிறார். இதில் கப்டனுக்கு ஜோடியாக நவ்னீத் கௌர் நடிக்கிறார். 2ஆவது ஜோடியாக சமீபத்தில் ஷெரிலையும் இணைத்துள்ளனர். ஷெரிலின் இயற்பெயர் ஷெரில் பின்டோ. இந்தப் பெயருடன் நடக்க வந்தால் சரியாக இருக்காது என்று விஜயகாந்த் கருதினார். நல்ல பெயராக வையுங்கள் என்று இயக்குநரிடம் கூறியுள்ளார். இதையடுத்து மாதேஷ் பல்வேறு இணையத் தளங்கள், புத்தங்களை அலசி ஆராய்ந்து இறுதியில் சுனையா என்ற பெயரை தேர்வு செய்தார். இப்பெயருக்கு விஜயகாந்தும் சரி சொல்லி விட இப்போது ஷெரில் சுனையா ஆகிவிட்டார். தனது பெயரை மாற்றிய விவகாரம் ஷெரிலுக்கு பின்னர் தெரிய வந்ததாம். பெயரில் என்ன இருக்கிறது. அதையா ரசிகர்கள் பார்க்கப் போகிறார்கள் என்று பெயர் எப்படியிருந்தாலும் எனக்கு பரவாயில்லை என்றார். அதுமட்டுமல்ல பெயர் மாற்றியதிற்காக வருத்தப் படாத ஷெரில், விஜயகாந்த்துக்கும், இயக்குநருக்கும் தனித் தனியாக நன்றி சொல்லிக் கொண்டாராம்.



அசின்

# தமிழுக்கு

இந்தியத் தந்தைக்கும், சிங்கள
மாம். தமிழ் சினிமாவுக்கே தா
குயிலான பூஜா, பிந்து வளர்
வினர்கள்தான் இலங்கையில்
மொழிப் படங்களில் நடித்து
மாதங்களுக்கு முன் பூஜா ந
ஆன அந்தப் படத்தைத் தொ
போது பாலாவின் ‘நான் கட வ
கூறுகையில் [illegible] அ
குநரை இதுவரை [illegible] பார்த்
கனவு வேடம். அ[illegible] நான் சி
என்ற நம்பிக்கை எனக்கு இரு

# சூர்ய

சிவாஜி க
ஆர்வம்
களில்
க

‘பில்லா’ நயன்தாரா - நமீதா



# ரஜினி பி
# வெளிவரு

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தின் பிற
துள்ள ‘பில்லா’ திரைக்கு வருகி
விஷ்ணுவர்த்தன் கைவண்ணத்
ரஜினி வேடத்தில் நடித்துள்
வேடத்தில் நமீதாவும் நடித்
துறையினர் மத்தியில்
தப் படத்தை ரஜினிக்கு
பேச்சோடு நிற்காமல் உ
செய்கிறார்கள். அதாவது,
‘பில்லாவை’ திரைக்குக் கொ
இருந்தது. ஆனால், பின்னர் த
சமர்ப்பிக்கும் வகையில் அவரது
கள். சூப்பர் முடிவு.

## ...இயக்கத்தில் விஜய்

...ர் படதில் நடிக்க ஆர்வமாக இருப்பதாக விஜய் கூறியுள்ளார். கண்டிப்பாக ...தங்கர்ச்சான் இயக்கத்தில், சத்தியராஜ் படு சிறப்பாக நடித்துள்ள 'ஒன்பது ...ன்பதுநபாய் நோட்டு' கதைதான் திரைப்படமாகியுள்ளது. சத்யராஜுக்கு ... தீபாளிக்கு இந்தப் படம் திரைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், வேறு ... காரஎத்தினாலும் தள்ளிப்போய்விட்டது. இந்த நிலையில் இப்படத்தின் ...நட்சதிரக்கூட்டம் இந்த விழாவில் கலந்துகொண்டது. பாரதிராஜா, மணி ...த்து .ள்ளிட்ட பல திரையுலகப் பிரபலங்கள் இதில் கலந்துகொண்டனர். ...திராஎ பேசுகையில் - ''தமிழ் கிராமங்களின் தொலைந்து போன அடை ...கங்களையும் புதுப்பொலிவுடன் மீண்டும் சினிமாவில் பிரபலப்படுத்தி ...சுகைல்:- ரஜினி, சத்யராஜ் ஆகியோருடன் நடிக்க வேண்டும் என்பது ...டல்களைக் கேட்டபின்னர், அவருடைய இயக்கத்தில் நடிக்க வேண்டும் ...டய பணியிலேயே ஒரு கதையைத் தயார் செய்து, ரசிகர்களுக்காக சில ... நான் அதில் நடிக்கத் தயார்' ' - என்றார். தங்கர் பேசுகையில் - ...காண்வரும் பணி எம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளது. நமது கலாசத்தை பாது ... எண்னைப் போன்ற படைப்பாளிகளுக்கு பாரதிராஜா தான் குரு, முன்னோடி. ...விடங்களைத்தான் நாங்கள் பின்பற்றி வருகிறோம். ஆனால், சமீபகாலமாக ...ரத்ந கைவிட்டுவிட்டார். அடுத்து விஜய்க்கா ஒரு கலாசாரக் கதையை ...டிக்கவைப்பேன்'' - என்று உறுதியளித்தார்.

## 'சேது சமுத்திரத்தில்' கார்த்திகா

நிஜக் கதைகளை படமாக்குவதில் புகழ்பெற்றுவருபவர் சஞ்சய் ராம். முதலில் 'தூத்துக் குடி' படத்தை இயக்கினார். பின்னர் 'வீரமும் ஈரமும்' என்ற படத்தை இயக்கி சமீபத்தில் வெளியிட்டார். இந்த நிலையில் 'சேது சமுத்திரம்' என்ற பெயரில் புதிய படம் ஒன்றை இயக்க வுள்ளார் சஞ்சய் ராம். முதல் இரு படங்களை விடவும் இந்தப் படத்திற்கான கலைஞர்கள் தேர்வு மற்றும் கதை குறித்து அதிக கவனம் செலுத்தப்போகிறாராம் ராம். இதுகுறித்து அவர் கூறுயவையாவது:- ''கடந்த சில மாதங்களாக இந்தத் திட்டம் நாடு முழுவதும் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இதில் மிகுந்த கவனம் செலுத்தி கலைஞர்களை தேர்வு செய்யவுள்ளேன். கதையிலும் கூட சர்ச்சைகள் வந்துவிடாமல் கவனமாக இருக்கிறேன்'' - என்றார். இப்படத்தில் நாயகனாக சரவணன் நடிக்கவுள்ளார். 'வீரமும் ஈரமும்' படத்திலும் சரவணன்தான் நாயகன் என்பது நினைவிருக்கலாம். இவருடன் முரளியும் படத்தில் இருக் கிறார். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் முரளி இப்படத்தில் நடிக்கவுள்ளார். 'தூத்துக்குடி' படத்தின் மூலம் அறி முகமான கார்த்திகா, சின்ன இடைவெளிக்குப் பிறகு மீண் டும் இப்படத்தில் நடிக்கிறார்.

## ...க்கு முதல் இடம் பூஜா

...தக்கும், சிங்களத் தாய்க்கும் பிறந்தவரான பூஜாவுக்கு, தமிழ் சினிமாதான் முக்கிய ...னிமாவுக்கே தான் முக்கியத்தும் தருவதாக கூறுகிறார் பூஜா. சிங்களத்து சின்னக் ... பிறந்து வளர்ந்ததெல்லாம் பெங்களூரில்தான், அவரது தாத்தா, பாட்டி மற்றும் உற ...இலங்கையில் உள்ளனர். பெங்களூரில் இருந்தபடி தமிழ், மலையாளம் போன்ற ...களில் நடித்து வந்த பூஜா தற்போது சிங்களத்திலும் நடிக்க ஆரம்பித்துள்ளார். சில ...முன்பு பூஜா நடித்து வெளியான 'அஞ்சலிகா' நல்ல வெற்றி பெற்றது. சூப்பர் ஹிட் ...டத்தைத் தொடர்ந்து தற்போது இரு சிங்களப் படங்களில் நடித்துள்ளார் பூஜா. தற் ...ன் 'நான் கடவுள்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் பூஜா. அது குறித்து பூஜா ...லாவிடமிருந்து நிறையக் கற்றுக்கொண்டேன். பாலா போன்ற ஒரு இயக் ...பார்த்ததேயில்லை. அவ்வளவு அருமையாகப் பணியாற்றுகிறார். இது எனது ...அ... நான் சிறப்பாக செய்துகொண்டிருக்கிறேன். எனது நடிப்பு பாராட்டுப் பெறும் ...க எனக்கு இருக்கிறது'' - என்றார்.

## ...சூர்யாவின் நவ அவதாரம்

சிவாஜி கணேசன், கமல்ஹாசனைத் தொடர்ந்து சூர்யாவுக்கும் அவதாரம் எடுக்க ஆர்வம் வந்துவிட்டது போலும். ஏயாரெல் விளம்பரத்தில் ஒன்பது விதமான வேடங் களில் கலக்கலாகத் தோன்றி நடத்துள்ளார் சூர்யா. நவராத்திரி படத்தில் சிவாஜி கணேசன் ஒன்பது வேடங்களில் வந்திருந்தார். இப்போது அதையும் தாண்டி 'தசாவதாரம்' படத்தில் கமல்ஹாசன் பத்து வேடங்களில் கலக்கிக் கொண் டிருக்கிறார். 'கந்தசாமி'யில் விக்ரம் பெண் வேடம் உட்பட நான்கு வித மான வேடங்களில் வரப்போகிறார். இந்த வரிசையில் தற்போது சூர் யாவும் இணைந்துள்ளார். ஏயா ரெல் நிறுவனத்தின் புதிய விளம் பரத்தில் சூர்யா, ஒன்பது விதமான வேடங்களில் நடித்துள்ளார். இந்த விளம்பரம் ஒரு நிமிடம்தான் வருகிறது. ஆனால், சூர்யா வின் அசத்தலான வேடங்களால் விளம்பரம் வெகுவாகப் பிர பலமாகிவிட்டது. தமிழ் மற்றும் தெலுங்கு ரி.விகளை இந்த சூர்யா விளம்பரம்தான் இப்போது கலக்கிக்கொண்டிருக்கிறது.

## ...பிறந்தநாளன்று ...வருகிறது பில்லா

...ந்த்தின் பிறந்தநாளான டிசம்பர் மாதம் 12ஆம் திகதி அஜித் நடித் ...ரக்கு வருகின்றது. ஆனந்தா பிலிம்ஸ் சுரேஷ் தயாரிக்க, இயக்குநர் ...கவண்ணத்தில், ரஜனியின் பில்லா ரீமேக் ஆகியுள்ளது. அஜித் ...ல் நடித்துள்ளார். ஸ்ரீபிரியா வேடத்தில் நயன்தாராவும், பிரவீணா ...தாவும் நடித்துள்ளார். படம் நல்லமுறையில் வந்திருப்பதாக திரைத் ... மத்தியில் பேசப்படுகின்றது. படத் தொடக்க விழாவின்போது இந் ... ரஜினிக்கு அர்ப்பணிப்பதாக கூறியிருந்தார் அஜித். தற்போது ...ற்காமல் உண்மையிலேயே ரஜினிக்கு இப்படத்தை அர்ப்பணம் ... அதாவது, ரஜினி பிறந்த நாளான டிசம்பர் மாதம் 12ஆம் திகதி ...ரைக்குக் கொண்டுவருகிறார்கள். தீபாவளிக்கே பில்லா வருவதாக ..., பின்னர் தள்ளி வைக்கப்பட்டது. தற்போது ரஜினிக்கு இப்படத்தை ...பில் அவரது பிறந்தநாளின்போது திரைக்குக் கொண்டுவருகிறார்




பூஜா

# நிர்வாணம்

"பிலோமி... என்னுடைய ஆசையை நீ நிறைவேற்ற மாட்டாயா? எத்தனைநாள் கெஞ்சுகிறேன். ஒரு நாளாவது நீ சம்மதிக்கிறாயில்லை. நீ என்னுடைய மனைவி பிலோமி... நான் உன்னிடம் கேட்காது, வேறு யாரரிடம் கேட்பது?..."

"நீங்கள் எதை வேணுமெண்டாலும் கேளுங்கோ அத்தான் ஆனால், இதை மட்டும் என்னட்டைக் கேளாதையுங்கோ.... நினைச்சுப் பார்த்தாலே உயிர் போற மாதிரி இருக்கு.. என்னாலை ஏலாது...."

"பிலோமி... என்னுடைய உயிரே நீ தானே அம்மா?.... திருமணம் என்கிற பந்தத்தில நாம் இணைஞ்சிருக்கோம்... முதலிரவு தொடக்கம் இந்த மூன்று மாதமாக கெஞ்சுறன்... நீ ஒரேயடியாக மாட்டன் என்கிறாய்... நான் இதுக்கெல்லாம் உன்னிடம் தானே கேட்கவேண்டும்?... நீயோ ஒரேயடியாக பிடிவாதமாக மாட்டன் என்கிறாய். நான் நினைச்சால் பலவந்தமாக என்னுடைய ஆசையை நிறைவேற்ற முடியும். ஆனால், நான் அதை விரும்பேல்லை... மனைவியானாலும்



எல்லாமே சம்மதத்துடன் தான் நடக்கணும் எண்டு நினைக்கிறன்."

"அத்தான், ஏன் பிடிவாதம் பிடிக்கிறியள்? நான் உங்களோட பூரணமாக ஒத்துழைக்கிறன் தானே... நாங்க இரண்டுபேருமே உச்ச இன்பம் எட்டும் வரை அனுபவிக்கிறம் தானே... பிறகு ஏன் இந்தப் பிடிவாதம்?.... வெளிச்சத்தில என்னாலை ஏலாது அத்தான்.... அதிலையும் உடம்பை நிர்வாணாக்கி உறவுகொள்ள என்னாலை ஏலாது.... நான் சாகிறது உங்களுக்கு விருப்பமோ?...."

"பிலோமி ஏன் இப்படி எல்லாம் அசட்டுத்தனமாகக் கதைக்கிறாய்?... நான் ஊர் உலகத்திலை இல்லாத ஒண்டையும் கேட்கவில்லை. நாலு சுவருக்குள்ளை தான் கேட்கிறன்... ஒரு புருசனுக்கே உன்னுடைய உடம்பைக் காட்ட மறுக்கிறாய்?... தாம்பத்தியம் என்பது வெறும் புணர்தல் மட்டுமில்லை பிலோமி.... வெறும் உடற் கலவிக்கு அப்பால் இதில பல விசயம் இருக்கு... நீ ஏதோ இவை எல்லாம் தப்பான காரியங்கள் என்கிற மாதிரி நினைக்கிறாய்... அப்படி என்ன கண்டறியாத வெட்கம்?..." ஒருநாளுமில்லாதவாறு ஆனந்தனின் குரல் ஓங்கி ஒலித்தது.

"நீங்க நினைக்கிற மாதிரி வெட்கம் மாத்திரமல்ல... எனக்கு இதை மனதாலையும் நினைச்சுப்பார்க்கமுடியவில்லை.... தயவுசெய்து என்னை வற்புறுத்தாதையுங்கோ...." அவளது கண்கள் பனித்து குரல் தளதளக்கவே அவன் பதறிப்போனான். மனக்காயத்தைச் சொல்ல முடியவில்லை.

"பிலோமி... அழாதே! நீ அழுதால் நான் தாங்க மாட்டன். நான் மிருகமில்லை. ஆனால், மனிதனும் ஒரு விலங்கினம் என்பதை நீ மறந்திடாதை.... ஒரு சராசரி மனிதனுக்கு இருக்கிற ஆசாபாசங்கள் எனக்கும் இருக்கு... நான் ஞானியோ துறவியோ இல்லை..."

அவன் கெஞ்சும் போது அவளுக்கு அந்தரமாக இருக்கும் எனினும் நிர்வாணம் என்பதை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை...

அவளது மனதை மாற்ற கடந்த மூன்று மாதமாக அவனும் தான் எவ்வளவோ பிரயத்தனப்படுகின்றான். ஆனாலும், அவளால் இம்மியும் அசைய முடியவில்லை. நிர்வாணப் படங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை வாங்கிவந்து அவள் பார்வையில்படும்படி வைத்தான். தற்செயலாகப் பார்த்த அவளுக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. ஏதோ ஒரு வித ஆவேசம் வந்தவளாக எரியும் அடுப்பில் அந்தப் புத்தகத்தை வீசி பொசுக்கினாள். இன்னொருநாள் அவன் நீலப்பட பிரதி ஒன்றைக் கொண்டுவந்து தனி அறையில் தொலைக்காட்சியில் அந்த சீடியைப் போட்டான். ஒரு செக்கன் கூடப் பார்த்திருக்க மாட்டாள். ஆவேசம் வந்தவள் போல் கத்தினாள்.

"தயவுசெய்து நிப்பாட்டுங்கோ..."

அவன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாதவன் போல நிற்பாட்டாமல் இருக்கவே ஆத்திரத்துடன் கையிலிருந்த சீப்பைத் தொலைக்காட்சியை நோக்கி வீசினாள். ஆனந்தன் அதிர்ந்து போய் தொலைக்காட்சியை நிறுத்தினான். "என்ன பிலோமி இது?..."

அவளோ இன்னமும் ஆவேசம் வந்தவள் போல் மூச்சிரைக்க பத்திரகாளிபோல் நின்றுகொண்டிருந்தாள். அவனுக்கு கவலை நெஞ்சை அடைத்தது. பேசாமல் எழுந்து அறையுள் சென்று படுத்துக்கொண்டான். சிறிது நேரத்தில் அவனருகே வந்து படுத்துக்கொண்ட பிலோமினா விசித்து விசித்து அழுதாள்.. "அத்தான் என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ.... என்னால பார்க்கேலாது. நான் படுக்கிறன்... நீங்கள் வேணுமெண்டால் தனியப்போய் பாருங்கோ..." என்று கூறிய அவளது கண்களிலிருந்து பெருகிய கண்ணீரைக் கண்டு அவனும் கலங்கினான்.

"இல்லை... பிலோமி எனக்குப் பார்க்கவேணுமெண்டில்லை. உன்னுடைய பிரச்சினையை இதால தீர்க்க முடியுமோ எண்டு நினைச்சுத்தான் கொண்டுவந்தனான். ஆனால், அது இன்னமும் கூடுதலாக உன்னைக் காயப்படுத்திப்போட்டுது..." என்று ஆறுதல் சொல்லி அவளது கண்ணீரைத் தனது கைகளால் துடைத்தான். அவனை நினைக்க அவனது ஆசைகளைத் தன்னால் நிறைவேற்ற முடியாததை நினைக்க அவளது இதயம் பொருமியது.

**சுடர் ஒளி**
**சிறுகதை**

அவளை ஓர் உளவளத் துணையாளரிடம் அழைத்துச் செல்லலாமா என யோசித்தான். எனினும், இப்படியான விடயங்களை எவ்வாறு கதைப்பது என்ற மனச்சங்கடமும் அவள் ஒருவேளை சம்மதிப்பாளோ தெரியாது என்ற எண்ணமும் அவனது யோசனையைத் தடங்கவைத்தது.

எனினும் மனைவியின் மறுப்பு அவனது மனதைத் தினமும் ஆக்கிரமித்து அலைக்கழித்தது. மன உணர்வுகளை மெல்லவும் விழுங்கவும் முடியாமல் அவன் தவித்துக்கொண்டிருந்த ஒருநாள் அலுவலக நண்பனின் பிறந்தநாள் கொண்டாட்டம் வந்தது. அன்று நண்பனின் வீட்டில் இராப்போசன விருந்து. அதில மதுபானமும் பரிமாறப்பட்டது. வழமையிலேயே மது அருந்தும் பழக்கமில்லாத ஆனந்தன் நண்பர்களின் வற்புறுத்தலால் சிறிது மது அருந்தினான்...

இரவு வீட்டுக்குத் திரும்பிய அவன் மதுபோதையில் வந்ததைக் கண்டு பிலோமினா திடுக்குற்றாள். "இது என்னா வேலை?... " அவள் கைத்தாங்கலாக அவனை அழைத்துச்சென்றபோது அவன் பாடினான், "அவளை மறப்பதற்கு ஒரு மனசிருந்தால் குடித்துவிடலாம்..."

"என்னங்க... என்ன சொல்லுறீங்க?... யார் அவள்?" நீதாண்டி என்ரை பிலோமிக்குட்டி... செல்லம்.. இண்டைக்கு இரண்டிலை ஒண்டு .... ஒண்டு நீ ஒத்துக்கணும்.... இல்லாவிட்டால் நான் சாகணும்..."

"என்ன உளறுறீங்க?"

அறையுள் சென்றதும் என்றுமில்லாதவாறு அவன் பலவந்தமாக அவளது ஆடைகளைக் களைய முற்பட்டான். "ஐயோ விடுங்க... பிளீஸ்... என்னாலை ஏலாது.... நான் செத்துப் போவேன்..." அவள் கெஞ்சினாள்.

"சாவடி... இன்னிக்கு இரண்டிலை ஒண்டு..." அவன் மீண்டும் பலவந்தமாக முயற்சிக்கவே பிலோமினா ஆத்திரமுற்றாள். எங்கே இருந்து அவ்வளது தைரியம் வந்ததோ தெரியாது, பலம் கொண்ட மட்டும் அவனைத் தள்ளினாள். சுவரில அடிபடவிழுந்த ஆனந்தனின் தலையிலிருந்து குபீரென்று இரத்தம் பெருக்கெடுத்தது. அவள் பதற்றத்துடன் தடுமாறிக்கொண்டு நிற்கவே எழுந்து புறப்பட்ட ஆனந்தன், அவள் தடுத்தும் கேட்காமலேயே வெளியேறினான். அடுத்தநாளும் அவன் திரும்பவில்லை. அவளது மனம் பதைபதைத்தது. மனதிலே பிரளயம்.

நிர்வாணத்தை அவளால் என்றும் ரசிக்க முடிவதில்லை. ஏன், ஏற்றுக்கொள்ளக்கூட முடிவதில்லை. நிர்வாண, அரைநிர்வாண படங்களைக்கூட அவள் பார்க்க விரும்பமாட்டாள். அப்படிப் பார்க்க நேரிடுகின்ற வேளைகளில் முகம் சுழித்துக்கொள்வாள். கண்களை மூடிக்கொள்வாள் அல்லது அவ்விடத்தை விட்டு அகன்றுவிடுவாள்.

முதன்முதலில் நிர்வாண உடலை அவள் பார்த்த ஞாபகம் இப்பொழுதும் கசக்கும் நினைவுகளாக அவள் மனதில் உறுத்தியபடியே... ஆம் அப்பொழுது அவள்வெறும் ஐந்து வயதுக்குழந்தை. இரவு உறங்கிய பின்னர் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையிலான தகராறு ஏற்படுத்திய சத்தத்தில் கண்விழித்துப் பார்த்தபோது அறையுள் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அப்பா முழு நிர்வாணமாக நின்றிருந்தார். அம்மாவின் மறுப்பையும் நிராகரித்தபடி அவவின் ஆடைகளைப் பலவந்தமாக அகற்றி அம்மாவை நிர்வாணப்படுத்திக்கொண்டிருந்தார். 'லைற்றையெண்டாலும் நூருங்கோவன்' என்ற அம்மாவின் வேண்டுதலையும் நிராகரித்தபடி அம்மாவை முழு நிர்வாணமாக்கி...

நிர்வாண உடல்களையும், அப்பாவின் முரட்டுத்தனமான செயல்களையும் பார்த்து மிரண்டுபோய் கண்களை மூடிக்கொண்டாள். பயத்தில் 'வீல்' என்று அவள் கத்தியபோது, அம்மா ஆவேசம் கொண்டவளாக அப்பாவை எதிர்த்தாள். சீற்றமடைந்த அப்பா தான் உருவிய அம்மாவின் ஆடைகளையும் தன்னோடு எடுத்துக்கொண்டு வெளியேறி கதவைப் பூட்டினார். அம்மா எவ்வளவோ கெஞ்சியும் அவர் அறையைத் திறக்கவேயில்லை. அம்மா லைற்றை அணைத்துவிட்டு வெகுநேரம் விசும்பி விசும்பி அழுதுகொண்டிருந்தாள். பின்னர் அவளை அணைத்தபடி கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தாள். அம்மாவின் அணைப்பில் அவள் நித்திரையானாள்.

காலையில் அவள் கண்விழித்தபோது நன்றாக விடிந்துவிட்டது. காலையில் தேநீர் தந்து அவளை எழுப்பும் அம்மா ஏன் இன்று அப்படிச் செய்யவில்லை என்று யோசித்தபடி எழுந்த அவளுக்கு போர்வைத்துணியில் தொங்கிய அம்மாவைப் பார்த்ததும் "ஐயோ.... அம்மா...." என்று அதிர்ச்சியிலும் பயத்திலும் அலறினாள். எப்போதும் கச்சிதமாக உடை உடுத்திப் பவனிவரும் அம்மா உடம்பில் ஒருதுணிகூட இல்லாமல் அம்மணக் கோலத்தில் தொங்கிக்கொண்டிருந்தாள். அந்தக் காட்சி வேதனையாகவும், பீதியாகவும், கோரமாகவும் இருந்தது.

அவளது அலறலைக் கேட்ட அப்பா கதவைத் திறந்துகொண்டு ஓடிவந்தார். அம்மாவின் உடல் நிர்வாணமாகத் தொங்கிக்கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு அவர் கலங்கிக் கதறி அழுதார். அவரது கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென ஓடிக்கொண்டிருந்தது "என்ரை ராசாத்தி... என்னைவிட்டுப் போட்டியே..."

பிலோமினா இப்பொழுது வளர்ந்தவளாகி திருமணமாகி ஒருத்தனின் மனைவியாகிவிட்ட நிலையிலும் அந்தக் குரூர நினைவுகள் அவளது மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன. ஆனால், அந்த ஆழப் பதிந்த நினைவுகளோ இன்று அவளது இல்லற வாழ்வையும் பாதித்துவிட்டனவே. அவள் கண்ணீரில் மிதந்தாள். ஆனந்தன் எங்கு போயிருப்பான்?

அவளுக்குக் கணவனாக வாய்க்கப்பெற்ற ஆனந்தன் எவ்வளவு நல் இதயம் கொண்டவன். முதல் சந்திப்பிலேயே அவனது தோற்றம் அவளைக் கொள்ளைகொண்டது. "என்னை உங்களுக்குப் பிடித்திருக்கா?" என்று இதமாக அவளை மதித்துக் கேட்டபோது தனக்குக் கணவனாக வரப்போகிறவன் தனது மனம்போல அமையப் போகிறான் என்று பூரித்தாள். அந்த எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. அவளைக் கைப்பிடித்த பின்னர் அவன் அவளது இதயத்தில் இன்னும் ஒருபடி உயர்ந்தான். அவளுக்காக எல்லா விட்டுக்கொடுப்புக்களையும் செய்தான். அவளுக்கும் அவன் மீது எல்லையில்லா அன்புதான்.

ஆனாலும், அவளது மனதில் சிறுவயதில் பதிந்துவிட்ட குரூரம் நிறைந்த அம்மாவின் நிர்வாண மரணம் அவளை மிகவும் பாதித்துவிட்டது. அதனால் தான் அவளால் தாம்பத்திய உறவில் ஒருபோதும் நிர்வாணமாக ஈடுபடமுடியவில்லை. நிர்வாணத்தை அவளால் சகிக்கவே முடியாதபோது அவள் மட்டும் எவ்வாறு நிர்வாணமாவிடமுடியும்?

எனினும், இன்று அதுவே அவளிடமிருந்து ஆனந்தனைப் பிரித்துவிட்டது. அவன் அவளை விட்டுப் பிரிந்து சென்றதை அவள் பிறரிடம் காட்டிக்கொள்ளாமல் அவன் வெளியூர் சென்றுவிட்டதாக அயலவரிடம் கூறினாள். எனினும், அவள் மனதைப் பயம் பற்றிக்கொண்டது. 'ஒருவேளை, அவர் தற்கொலை புரிந்திருப்பாரோ?'

இனிமேலும் இதை மறைத்து வைத்திப்பதில் அர்த்தமில்லை என அவளது மனது தவித்தது. உறவினருக்குத் தகவல் கொடுக்கவேண்டும். எனினும், அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வரமுடியாது. பொலிஸில் முறையிடலாமா? சிங்களப் பிரதேசம் ஒன்றில் வேலை நிமித்தம் வசிக்கும் இவ்வேளையில் அயலவர்களிடம் மனம் விட்டுப்பேசிட முடியாது அவள் தவித்தாள். இருப்பதோ ஒரு சில தமிழ் குடும்பங்கள் தான்.

அன்றிரவு வானத்தில் விமானங்கள் இரையும் சத்தம், தொடர்ந்து குண்டுகள் வெடிக்கும் ஓசை, அவள் பதற்றமடைந்தாள். சாதாரணமாக சுமுகமாக இருக்கும் சிங்களவர்கள் தமது பிரதேசத்தில் தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டுவிட்டால் துவேசமாக மாறிவிடுவார்கள், அதிலும் அவள் தனிமையில் இருக்கும் வேளை. பிலோமினாவுக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

அவளது மனதிலே ஆனந்தன் எப்படியும் திரும்பிவருவான் என்ற எண்ணம் மேலோங்கியிருந்தது. 'கடவுளே நீதான் காப்பாற்றவேணும்... அவருக்கு ஏதுமெண்டால் நான் உயிரோடை இருக்கமாட்டன்'

காலையிலே எங்கும் பரபரப்பு. காதில் விழுந்த செய்திகள் நம்ப முடியாதவையாக இருந்தன. அனுராதபுரம் வான்படைத்தளம் தாக்கப்பட்ட செய்திதான் அது.

மோதலில் பலியான படையினர் பற்றியும், போராளிகள் பற்றியும் சேதமுற்ற விமானங்கள்

**-ச.முருகானந்தன்-**

பற்றியும் எங்கும் மக்கள் கூடிக்கூடிக் கதைத்தனர். பிலோமினா வீட்டை விட்டு வெளியேறவில்லை. மோதலிலே சாவடைந்தவர்களின் சடலங்களை நிர்வாணமாக வைத்தியசாலைக்குக் கொண்டுவந்த சேதியை பக்கத்துவீட்டு சுசீலா கூறினாள். பிலோமினாவின் மனது பதைபதைத்தது. 'இது என்ன கொடூரம்' என்று நினைத்தாள். மறுநாள் பத்திரிகையில் நிர்வாணச் சடலங்களைப் பார்த்ததும் அவள் மனது கொதித்தது. 'இது என்ன காட்டுமிராண்டித்தனம்?' என எண்ணிக் குமுறினாள். 'தமது மக்களின் விடுதலைக்காகத் தம் இன்னுயிரைப் பறிகொடுத்த தியாகிகளுக்கா இந்தக் கொடுமை?' அவளது மனதிலே ஆயிரம் கேள்விகள்.

ஒன்றுமட்டும் அவளுக்குப் புரிந்தது. இறுதியிலே நாம் எல்லோரும் ஒருநாள் மண்ணோடு மண்ணாகப்

(24ஆம் பக்கம் பார்க்க)

**05.** வெற்றிடங்களை நிரப்புக.

1) 438 + ▭ = 986
2) ▭ + 748 = 1036
3) 786 + 21▭ = 999
4) 436 + 726 = 11▭▭


**06.** வித்தியாசமான உருவின்கீழ் கோடிடுக.


1)



2)




3)




4)




**07.** கீழே தரப்பட்ட உருக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைச் சரியாக எழுதுக.


A)



B)



C)



D)



E)



**08.** A பகுதிக்குப் பொருத்தமான விடையை B பகுதியிலிருந்து தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1) 7.5kg | 49 நாட்கள் |
| 2) 1m | 7500g |
| 3) 1L | 100cm |
| 4) 5km | 1000ml |
| 5) 7 வாரம் | 5000m |

**09.** பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடை தருக.

1) ஆதவன் 10 தோடம்பழங்களை 400/=க்கு வாங்கினான். அதில் 4 பழங்கள் பழுதடைந்ததால், அவன் அடைந்த நட்டம் எவ்வளவு? ....................

2) 1kg சீனியின் விலை 50/= எனின், 3.5kg சீனியின் விலை யாது? ....................

3) 4*l* நீரில் 750*ml* நீர் எடுக்கப்பட்டால் மீதியாக உள்ள நீரின் அளவு யாது? ....................

4) 9 முட்டைகளின் விலை 108/= எனின், 20 முட்டைகளின் விலை யாது? ....................

5) 50cm துணியின் விலை 40/= எனின், 8m துணியின் விலை யாது? ....................

**10.** கீழுள்ள அட்டவணையை நன்கு அவதானித்து தரப்பட்டுள்ள வினாக் களுக்கு விடையளிக்க.

| பாடசாலை | மாணவர் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| இந்துக்கல்லூரி | 106 | 204 |
| புனித ஜோன் பொஸ்கோ | 168 | 206 |
| சாகிராக்கல்லூரி | 100 | 102 |
| நாவலர் | 80 | 90 |

1) இந்துக்கல்லூரி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ....................

2) புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ....................

3) நான்கு பாடசாலைகளிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ....................

4) நான்கு பாடசாலைகளிலும் உள்ள ஆண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? ....................

**11.** கீழே தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து அவற்றின் பெயர்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தருக.

1)


த : ............................
ஆ : ............................

2)


த : ............................
ஆ : ............................

3)


த : ............................
ஆ : ............................

4)


த : ............................
ஆ : ............................

**12.** பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1) சூரியன் : ............................
2) தச்சன் : ............................

**13.** பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Factory : ............................
2) Sky : ............................

**14.** தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து திருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் கருத்துள்ள பொருத்தமான வசனப்பிழைகளற்ற ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



1) ........................................................
2) ........................................................
3) ........................................................
4) ........................................................
5) ........................................................

முற்றும்

தரம்-04 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்



**படிமுறைப் பரீட்சை 11 - 2007**

ஆசிரியர்:- திரு.எஸ்.கபிலன்
(வவுனியா மாவட்ட பிரபல ஆசிரியர்)



# ஆசை 60 நாள் மோகம் 30 நாள்

**உண்மைக் கதை**

ஆண்- பெண் இருபாலருக்கும் 'ரீன் ஏஜ்' என்பது அலைபாயத் தூண்டும் பருவம். அந்த இரசாயன மாற்றத்துக்கு நானும் விதிவிலக்கல்ல.

காதல் என்னும் பள்ளத்தில் விழுந்தேன்; கைப்பிடித்த காதலனால் கலங்கினேன். அந்த வயதில் ஏற்படும் காதல், உடல் இச்சைக்கானது. அதை அறிந்து ஒதுங்கிக் கொள்ளாவிட்டால், எனக்கு ஏற்பட்ட அவமானங்களைத் தான் சந்திக்க வேண்டி வரும். எந்த இளம்பெண்ணும் அதுபோன்ற படுகுழியில் விழுந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதை எழுதுகிறேன்.

நான் பிறந்தது, வளர்ந்தது அழகிய சிற்றூர். அப்போது எனக்கு பதினான்கு வயது. பெற்றோருக்கு என்னையும் சேர்த்து மூன்று பிள்ளைகள். நான்தான் மூத்தவள். அப்பா குடிகாரர். குடும்பப் பொறுப்புகள் பற்றி கவலையில்லாதவர். ஊர் சுற்றிக்கொண்டு இருந்தார். அம்மாதான் தோட்டத்தில் வேலை பார்த்து, எங்களை காப்பாற்றி வந்தார்.

நான் பேரழகி இல்லை என்றாலும், ஒரு முறைக்கு இருமுறை பார்க்கத் தூண்டும் அழகுடையவள்தான். என்னையும் ஒருவன் காதல் வலையில் வீழ்த்தினான். அவனின் ஆசை வார்த்தையில் மயங்கினேன். அவனே உலகம் என்று நினைத்தேன். அவன் மீது உயிரையே வைத்திருந்தேன். ஆனால், அவனோ என் உடம்பை பதம் பார்க்க ஆசைப்பட்டான் என்பதை பின்வந்த காலங்களில்தான் அறி முடிந்தது.

முதலில் அவன் அருகில் இருப்பது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஒருநாள் இரவு யாருக்கும் தெரியாமல், என் தங்கைகளின் எதிர்கால வாழ்க்கை பற்றி கவலைப்படாமல், பெற்றோருக்கு ஏற்படும் அவமானத்தை நினைத்துப் பார்க்காமல் அவனுடன் ஊரைவிட்டு ஓடினேன்.

அங்கு அவரின் நண்பரைச் சந்தித்தோம். அவர் எனக்கு தூரத்து உறவுக்காரர்தான். எப்போது எங்கள் ஊருக்கு வந்தாலும், எங்களுடைய வீட்டுக்கும் வருவார். என்னுடன் பாசமாகப் பழகுவார். அவர்தான் எங்களுக்கு உதவி செய்தார். அம்மன் கோயிலில் வைத்து திருமணம் செய்து வைத்தார். எங்கள் திருமணத்துக்கு அவரும், அந்த அம்மனும்தான் சாட்சி. நண்பரின் உதவியை மட்டும் நம்பி வாழ்க்கை நடத்திய என் கணவர், வேலைக்கு செல்லத் தயங்கினார். முதல் இரண்டு மாதங்கள் இன்பமாகச் சென்ற எங்கள் இல்லற வாழ்க்கை, பின்னர் கசக்கத் தொடங்கியது. என்னவருக்கு எனது உடல் மட்டுமே தேவையாக இருந்தது. அள்ளி அணைத்தார். முத்தமழை பொழிந்தார். பாடாய்படுத்தினார். எனக்கு உடம்பு வலித்தது.

அப்புறம், ஆளே மாறிவிட்டார். 'அசை அறுபதுநாள், மோகம் முப்பதுநாள்' என்பது போல் என்னை வெறுக்கத் தொடங்கினார். என்னுடன் இருப்பது, அவருக்கு திகட்டத் தொடங்கியது.

ஒருநாள், 'வெளியே சென்று வருகிறேன்' என்று சொல்லிச் சென்றவர்தான்... பின்னர் வரவே இல்லை.

என் உறவினரிடம் சொல்லி தேடிப் பார்க்கச் சொன்னேன். ஏமாற்றமே மிஞ்சியது.

அதனால், எமக்கு உதவிய உறவுக்காரர் என்னை அழைத்துக் கொண்டு என் பெற்றோர் வீட்டில் விட வந்தார். இரவு பதினொரு மணி இருக்கும். வீட்டின் கதவை தட்டினேன்.

கதவைத் திறந்தார், என் தந்தை. என்னைக் கண்டதும் ஆத்திரமடைந்தார். "காலையில் இந்த ஊரில் உன்னைப் பார்த்தால் கொலையே பண்ணிடுவேன்" என்று எச்சரித்துவிட்டு, கதவை ஓங்கி சாத்திக்கொண்டார். அம்மாவால் எதையும் பேசமுடியவில்லை. கண்ணீர்விடத்தான் முடிந்தது. நான் பண்ணிய தப்பு அன்றுதான் என்னுள் பெரிய பயத்தை ஏற்படுத்தியது.

என்னை நடுத்தெருவில் நிற்க வைத்து வேடிக்கை பார்க்க விரும்பாத என் உறவினர், அவருடைய பெரியம்மா வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பெரியம்மா பயந்ததால், தன் சித்தி வீட்டுக்கு அழைத்துச் சென்று, " இவள் என் மனைவி. இரு குடும்பத்தாருடைய எதிர்ப்புக்களுக்கு இடையே திருமணம் செய்துகொண்டோம்" என்று பொய் கூறி, தங்க வைத்தார். அவர்களும் அடைக்கலம் கொடுத்தனர்.

இதற்கிடையில் அவருடைய அப்பா சில பெரியவர்களுடன் நியாயம் பேச எங்களைத் தேடி வந்துவிட்டார்.

"என் மகனுக்கு எதுவும் தெரியாது. இவள் வேறொருவனின் மனைவி" என்று ஆத்திரப்பட்டு , கத்தியால் என்னை குத்த வந்தார்.

"இவள் என் மனைவிதான். நாங்கள் காதலித்தோம், திருமணம் செய்துகொண்டோம்" என்று கூற- அவரது அப்பா தலைகவிழ்ந்தபடி வேறு எந்த வார்த்தையும் கூறாமல், சகபாடிகளுடன் சென்றுவிட்டார்.

என்னால், என் தவறால் எனது உறவினரின் அப்பா அவ்வாறு தலை கவிழ்ந்து சென்ற காட்சி என்னை சங்கடப்படுத்தியது. சில பெரியவர்களின் முன்னிலையில் எனக்கு மறுதாலி கட்டப்பட்டது. அனைவரிடமும் கையெழுத்து வாங்கப்பட்டது.

காதலித்து திருமணம் செய்துகொண்டு நயவஞ்சமாக என்னை தவிக்கவிட்டு ஓடியவனுக்கு மத்தியில், உதவி செய்து என்னை மறுவாழ்வு வாழவைக்க வந்த அவர், நான் பழுதுபோனவள் என்ற கருதாமல் எனக்கு வாழ்க்கை தந்தார்.

அன்று இரவு அவர் என்னிடம் மனம் விட்டுப் பேசினார்.

"எப்போது உனக்கு குடும்ப வாழ்வில் நம்பிக்கை வருகிறதோ, அன்று நாம் சேர்ந்து குடும்பம் நடத்துவோம். அதுவரை நல்ல நண்பர் களாக இருப்போம்" என்று கூறினார்.

அவரிடம் நான், "என்னங்க... என்னால் இங்கு இருக்க முடிய வில்லை. பழைய சம்பவம் மனதில் தோன்றி வாட்டி வதைக்கிறது. வேறு எங்காவது போவோம்" என்றேன்.

அவரும் என் மனம் நோகாமல் நடந்து கொண்டார். தூரத்து கிராமம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். மூன்று மாதங்களுக்குப் பிறகு கட்டிலில் ஒன்று சேர்ந்து , குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டோம்.

இப்போது நாங்கள் ஆடம்பரமாக வாழவில்லை என்றாலும் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். அவரது பெற்றோரும் மன்னித்து எங்களை ஏற்றுக்கொண்டனர்.

அன்று காதல் என்ற போர்வையில் என்னை அழைத்துப்போன காமுக காதலன் கைவிட்டுச் சென்ற வேளையில் இவர் கைகொடுத்து அழைத்து வந்திருக்காவிட்டால், என் கதி என்னவாகி இருக்கும்?

தற்கொலை போன்ற கோர முடிவுக்கு ஆளாகி, மண்ணுக்குத்தான் இரையாகி இருப்பேன்.

'களங்கப்பட்டவள்' என்று கருதாமல், வாழ்க்கை வரம் தந்த தெய்வமாக அவர் காட்சியளிக்கின்றார். தெய்வத்தை எல்லோரும் நான்கு சட்டம் போட்ட படமாகவோ, சிலையாகவோதான் பார்ப்பார்கள். நானோ... என் கணவர் உருவத்தில் உயிரோட்டமாக பார்க்கிறேன். என் தவறுகளை மன்னித்து ஏற்றுக்கொண்ட மகா தெய்வம், அவர்.

காதலிக்க வயது உண்டு. அதை விட்டு விட்டு அறியாத வயதில், புரியாத பருவத்தில் வரும் காதல் பொய்யானது.

அத்தகைய அவசர காதலர்களே, காதலை கைவிடுங்கள். வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

## மியாமி கரைதனில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்தேன். இதுகளைப் பற்றி எனக்கு அவ்வளவாக தெரியாது. இதன் மூலம் நான் இருக்கும் இடத்தை அவன் கண்டுபிடிப்பான் என்று பயந்துதான் அப்படிச் செய்தேன்." என்ற அவன் கூறியதைக் கேட்டதும் ரீட்டாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

'அவன் ப்யங்கரமானவனாவும் தோன்றுகிறான். சின்ன குழந்தை போலவும் பேசுகிறான்' என்று நினைத்தாள்.

அது நல்ல ரகமான போன்தான். அதில் இன்னொரு தகவல் வழங்கலும் அமைந்திருப்பதையும் அவள் அவதானித்தாள்.

எந்த இடத்திலிருந்து பேசுகிறார்களோ அதனை அது காண்பிக்கின்றது.

'ஓ!' மனதிற்குள் மெச்சிக்கொண்டாள்.

அதனை செயல்படுத்தினாள். அப்போது அவளுடைய போனில் ஒலி சைகை எழுந்தது. அது இயங்கத் தொடங்கிவிட்டது. சட்டென அவதானித்தாள்.

"ஆராதனை முடிந்துவிட்டது. வெளியில் வருகிறேன். எங்கே நிற்கிறாய்"

"நீ பைக்கில் காத்திரு. சட்டென வந்து விடுகிறேன்" தகவல் பறிமாறப்பட்டுவிட்டது.

சொசிமோவின் இருகரங்களையும் பற்றிக் கொண்ட ரீட்டா அவற்றை முத்தமிட்டாள்.

"டா...ட் வருகிறேன்!" என்று நா தளதளக்கச் சொன்னாள்.

"உங்கள் இலக்கத்தை பதிவு செய்துவிட்டேன். சீக்கிரம் தொடர்பு கொள்கிறேன். வருகிறேன்! வருகிறேன்!"

அவள் முன்பக்கத்துக்கு ஓடி தேவாலயத்திலிருந்து வெளியேறுபவர்களுடன் கலந்துவிட்டாள். சொசிமோ சில நிமிடங்கள் சிலையைபோல் நின்றிருந்தான். கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. சூரியன் கடலுக்குள் முழுமையாக மூழ்கி விட்டான். இருள் கனத்து வருகிறது. வீதி விளக்குகள் எரியத்தொடங்கியிருந்தன.

பனிமூட்டமும் இல்லாது, முகில் கூட்டம் இல்லாது வானம் தெளிவாக இருந்தது. ரீட்டா ஜோன்சனின் மோட்டார் பைக்கில் ஏறிவிட்டாள். சொசிமோ வேகமாக ஓடத்தொடங்கியிருந்தான். 'பாவம் டுமாச்சி.அவள் பரண்மீது தனியாக இருப்பாள்.' என்று மனம் கவலைப்படுகிறது. வேகமாக ஓடுகிறான். அப்போது- அவனுடைய தொலைபேசி ஒலிக்கிறது. சட்டென எடுத்தான். காதில் பொருத்தினான்.

"ஹலோ!" என்றான். "ஓ! இங்குதான் இருக்கிறாயா?" மறுமுனையில் மக்டொனாலின் ஏளனக்குரல் ஒலிக்கின்றது. (தொடரும்)

## அடிமை...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நீ சொல்வது, பேசுவது எல்லாவற்றிலும் மனிதத்தன்மை தொனிக்கிறது. உருவம்தான் இல்லை. அதுகூட அஸ்ட்ரா அடுத்த மொடலில் கொண்டு வந்துவிடுவார்கள்..."

"இருந்தும் நான் மனிதன் இல்லை..."

"ஏன் மனிதன் இல்லை..."

" நான் மனிதனில்லை" குரலில் சற்றுக் கோபம்கூட ஒலித்ததோ?

"சேகர்! கதவைத் திற" என்ற நித்யாவின் குரல் கேட்டது.

"நித்யா வந்துவிட்டார்" இப்போது நிச்சயம் அந்தக் குரலில் கொஞ்ச சந்தோஷமும் தொனித்தது. கதவு விலகிக்கொள்ள நித்யாவும் பாபுவும் உள்ளே நுழைந்தார்கள். நித்யா ஆத்மாவைப் பார்த்து,

"வந்துவிட்டாயா கணவா? எப்படி இருக்கிறாய்?" என்றாள். பாபு,"சேகர், நான் யானை பார்த்தேன்" என்றான்.

"யானையா? யானை ஏது இப்போது?" என்றான் ஆத்மா.

"யூரோவிஷனில் யானை வந்தது. சேகர் எனக்கு ஒரு யானை வேண்டும்."

"நிஜ யானை இந்த நூற்றாண்டில் கிடையாது" என்றான் சேகர்.

"எனக்கு யானை வேண்டும்" என்று பாபு அழ ஆரம்பித்தான்.

"யானை 20ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே அழிக்கப்பட்டு அந்த ஜாதியே...."

"போதும் நிறுத்து சேகர்! குழந்தையிடம்கூடப் பொய் சொல்ல மாட்டாய் நீ! பாபு! நீ உள்ளே போடா கண்ணு. நான் நாளைக்கு யானை வாங்கித் தருகிறேன்."

பாபு கண்ணைக் கசக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

"பொய்சொல்லத் தெரியாது சேகருக்கு. சேகர், எனக்கு வெந்நீர் போட்டாயா?"

"தயாரித்துவிட்டேன் எஜமானி."

"இருபத்து எட்டு டிகிரி! அதையும் சொல்லேன்"

" சேகர் நீ எனக்கு தேர்தெடுத்த உடை அபாரம். நிஷா அப்படியே மயங்கிவிட்டாள். உங்கள் சேகரை எனக்கு தருவாயா என்று கேட்டாள்."

"விற்று விடலாமோ!"

"சேகரையா? விற்பதா? ம்ஹூம். சேகர் வா. குளிக்கப்போகலாம்."

"என்னது?"

"நான் சாயங்காலம்தான் இப்போதெல்லாம் குளிக்கிறேன்."

"அதற்கு சேகர் எதற்கு?"

(27ஆம் பக்கம் பார்க்க)





# ஜீன்ஸ் வாங்கும் முன்பு...

பெண்

என்னதான் ஃபாஷன் மாறினாலும் மாறாத ஒன்று ஜீன்ஸ். அதன் வடிவம் வேண்டுமானால் மாறலாம். ஆனால், ஜீன்ஸைப் பொறுத்தவரை எப்போதும் பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உண்டு. இளம் பெண்களோ, வேலைக்குச் செல்லும் பெண்களோ ஜீன்ஸ் அணிவதை வசதியாக எண்ணுகின்றனர். புடைவை, சல்வார், சுடிதார் என்றால் அவை தைப்பதற்கு ஆகும் கூலியும் அதிகமாகிறது.

அதனால், பல பெண்கள் ஜீன்ஸ், டொப்ஸ் அணிவதையே வசதியாக எண்ணுகின்றனர். சிலர் சுடிதார் டொப்ஸுடன் ஜீன்ஸ் அணிகின்றனர்.

ஜீன்ஸ் வாங்கும்போது...

ஜீன்ஸ் வாங்கும்போது கடைகளில் எத்தனை வகை ஜீன்ஸ்கள் விற்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இதனால் நேரம் மிச்சமாகும்.

இதோ ஜீன்ஸின் சில முக்கிய வகைகள்.

**லோ ரைஸ் ஜீன்ஸ்:** இத்தகைய ஜீன்ஸ் இடுப்புக்கு சற்று கீழே அணியப்படும். ( நடிகை சிம்ரன் அணிவதுபோல!)

**பூட் கட் ஜீன்ஸ்:** ஜீன்ஸ், கால் வரை தொளதொள என்றும் கீழே அகலமாக இருக்கும்.

**ஃபிளேர் லெக் ஜீன்ஸ்:** இது பாதம் வரை இருக்கும். இந்த ஜீன்ஸ் சற்று ஆடம்பரமாக காட்சி தரும். கீழே தொள தொளவென்று கட் செய்யப்பட்டது போன்றும் இருக்கும்.

**ஸ்டோன்வாஷ்ட் ஜீன்ஸ்:** இது சற்று லேசாக இருப்பதோடு, ஆங்காங்கே கீறப்பட்டது போன்று இருக்கும். சிலவற்றில் கீறப்பட்டது போன்ற இடத்தில் பூவேலைப்பாடு செய்யப்பட்டும் இருக்கும்.

**டிஸ்ட்ரெஸ்ட் ஜீன்ஸ்:** இந்த வகை ஜீன்ஸில் ஓட்டைகள் இருக்கும். அதாவது, கட் - மார்க் அல்லது கீறல் போல கோடுகள் இருக்கும்.

**அடர் நிற ஜீன்ஸ்:** இது இரவு நேர விருந்துகளில் அணிந்து கொள்ள பொருத்தமானதாக இருக்கும்.

**அத்லெட்டிக் டைப் ஜீன்ஸ்:** இது தடகள வகை ஜீன்ஸ். இடுப்புக்கு அருகில் குறுக்கலாகவும் ஆனால், கால்களில் அகலமாகவும் இருக்கும். அதாவது, தடகள வீரர்களுக்கு பொருத்தமானதாக இருக்கும்.

சிலர் ஜீன்ஸை விசேஷங்களுக்கு அணிவதோடு மட்டுமல்லாமல் தினசரி உபயோகத்துக்கும் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒல்லியான உடல்வாகு கொண்ட பெண்களுக்கு லெக் ஓப்பனிங் அதாவது, கால்களுக்கு அருகில் திறந்திருக்கும் வகை ஜீன்ஸ் பொருத்தமானதாக இருக்கும். சற்று பருமனான பெண்கள், பாரம்பரிய ஐந்து பொக்கெட் வகை ஸ்டைல் ஜீன்ஸ் அணியலாம். அதுவும் இறுக்கமாக இல்லாமல் இருப்பது அவசியம்.

பூட் கட் ஜீன்ஸ் உடல் அமைப்புக்கு சீரான தோற்றம் அளிக்கும். உங்கள் உயரத்தை அதிகரித்து காட்டும்.

எப்படி ஜீன்ஸ் வகைகள் அணிந்து கொள்வது அவசியமோ, அதே போல கீழ்க் கண்ட விஷயங்களைப் பற்றியும் கவனத்தில் கொள்வது அவசியம்:

❖ஒரு ஜீன்ஸ் வாங்கும் முன்பு, அதனை கல்லூரிக்கா, வீட்டு விசேஷங்களுக்கா அல்லது அலுவலகப் பயன்பாட்டுக்கா வாங்குகிறோம் என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். எந்த விலைக்கு வாங்கலாம் என்பதையும் முடிவு செய்து கொள்ள வேண்டும். அப்படி தினசரி பயன்பாட்டுக்கு ஜீன்ஸ் வாங்கினால் அதிக பணம் கொடுத்து வாங்க வேண்டாம்.

❖மேலும் துணி எந்த நூலிழையால் உருவாக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்வதும் அவசியம். அதாவது பருத்தி ஜீன்ஸ் எல்லாக் காலங்களுக்கும் தகுந்ததாகும். ஜீன்ஸின் தரத்தையும் பார்ப்பது அவசியம். ஏனெனில், சில வகை ஜீன்ஸ்கள் ஒரு சலவைக்குப் பிறகு சுருங்கவும் வாய்ப்பு உள்ளது.

❖ஜீன்ஸின் நிறத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். அடர் நிறத்திலான ஜீன்ஸில் தூசி, அழுக்கு ஆகியவை பட்டால் தெரியாது. அதே சமயம் நிறம்சாயம் போகாது என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

❖தரமான கொம்பனிகள் என்று பணத்தை வாரி இறைக்காதீர்கள். ஏனெனில், அவை உங்கள் உடல் அமைப்புக்கு பொருந்தும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது.

---

# முப்பது வயதிலேயே மெனோபஸ்



வேலைக்குப் போகும் பெண்களில் 4% பேருக்கு விரைவாகவே... அதாவது, முப்பது வயதிலேயே மொனோபஸ் ஏற்பட்டு விடுகிறது என்று தேசிய அளவில் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வு தெரிவிக்கிறது! அலுவலகத்தில் ஏற்படும் டென்ஷன், நிம்மதியின்மை போன்றவற்றைதான் அதற்கான காரணங்களாம்!

சென்னையைச் சேர்ந்த மகப்பேற்று மருத்துவ நிபுணர் வி.ஆர்.கனகவல்லி கூறுவதாவது,

‘‘மெனோபஸ் என்பது நீங்கள் நினைப்பது போல வேலை பார்க்கும் பெண்களை குறிவைத்துத் தாக்கும் வியாதி அல்ல.’’

ஆனால், ‘ப்ரீ மொனோபஸ்’... அதாவது, குறித்த காலத்துக்கு முன்பேயே மொனோபஸ் ஏற்படுவது.. என்றொரு பிரச்சினை இருக்கிறதுதான். சமீபகாலமாக இந்தப் பிரச்சினை அதிகரித்து வருவதும் உண்மைதான்.

இதற்கு, சரியான விகிதத்தில் உணவு உட்கொள்ளாதது, நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற வியாதிகள் இருப்பது, மரபு.. என்று பல காரணங்கள் இருக்கின்றன. டென்ஷன் என்பதும் இந்த காரணங்களில் ஒன்றாக இருக்கலாமே தவிர, அது மட்டும் காரணம் அல்ல.

ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதா மாதம் கிரமமாக மாதவிடாய் ஏற்படுவது தான் அவள் இனப் பெருக்கத்தின் பருவத்தில் இருக்கிறாள் என்பதன் அடையாளம். வயதாக ஆக, உடலில் ஏற்படும் சில ஹோர்மோன் மாற்றங்களால், மாதவிடாய் ஏற்படுவதும் படிப்படியாக குறைந்து ஒரு கட்டத்தில் நின்றே போய்விடும். இதைத்தான் ‘மொனோபஸ் நிலை’ என்று சொல்கிறோம்.

டென்ஷன் அதிகம் இருப்பவர்களுக்கோ, வேலை பார்க்கும் பெண்களுக்கோ இந்த நிலை விரைவாகவே ஏற்பட்டு விடுகிறது என்றெல்லாம் பொதுவாகச் சொல்லி விட முடியாது.

இந்தக் காலத்தில் யாருக்குத்தான் டென்ஷன் இல்லை சொல்லுங்கள்? குடும்பத்தில் ஆயிரம் பூசல்கள், வாட்டி எடுக்கும் வீட்டு வேலைகள் என்று இல்லத்தை மட்டுமே நிர்வகிக்கும் பெண்களுக்கும் தான் ஆயிரம் டென்ஷன்கள். அப்படிப் பார்த்தால் எல்லாருக்குமே இந்தப் பிரச்சினை வரவேண்டும்.

அவ்வளவு ஏன், டென்ஷன் இல்லாதவருக்கும் கூட ‘ப்ரீ மொனோபஸ்’ என்று சொல்லப்படும் இந்தப் பிரச்சினை ஏற்படுவதை நான் பார்த்திருக்கிறேன்...’’ என்று உறுதியாக கூறியவர் இன்னொருவாதத்தையும் முன்வைத்தவர்.

‘‘இந்த கணிப்பீட்டை செய்தவர்கள், வேலைக்குப் போகும் பெண்களில் 4% பேருக்குத்தானே இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்படுவதாக சொல்லி இருக்கிறார்கள். அது ஒன்றும் பயமுறுத்தும்படியான விகிதம் இல்லையே! அதுவே 40% என்றால், கவலைப்படலாம்’’ என்றார்.

---

# சமைப்போம் சுவைப்போம்

## மசாலா சோளம்



**தேவையான பொருட்கள்:**

2 கப் சோளம், 1 பெரிய தேக்கரண்டி வெண்ணெய், 1எலுமிச்சம் பழச்சாறு, ஒரு சிட்டிகை மிளகாய்த்தூள், உப்பு அளவுக்கேற்ப, வெங்காயம் (நறுக்கியது.),1தக்காளி (நறுக்கியது), 1சிறிய தேக்கரண்டி அரைத்தபூண்டு , குடை மிளகாய் (நறுக்கியது), சிறிதளவு அஜினோமோட்டோ,1 சிறிய் தேக்கரண்டி சோயா சோஸ்.

**செய்முறை:**

வெண்ணெயைச் சூடாக்கி, அதில் அரைத்த பூண்டை போடவும். பிறகு காய்கறிகளைச் சேர்த்து 2 நிமிடங்கள் வதக்கவும். சோளம் மற்றும் பிற பொருட்களையும் சேர்த்துக் கலக்கி சூடாகவோ அல்லது ஆறிய பிறகோ பரிமாறவும்.



# கலக்கல்

கவிஞான சம்பந்தர்



## அழகிய தங்க மகள்!

டோக்கியோவில் நடைபெற்ற பெசன்ஷோவில் ஜொலிக்கும் தங்கத்தில் ஆடை அணிந்து கலக்கிய மொடல் அழகி.



## 2 இன் 1

## 18 "யார் இவர் தெரிகிறதா?"



### இந்த வாரம் பிரசுரமாகி இருக்கும் உருவம் யாருடையது?

இந்திய கிரிக்கெட் அணியின் மிக முக்கிய துடுப்பாட்டவீரர். இவர் யாரெனக் கண்டு பிடித்து இவர் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் ஐவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
"யார் இவர் தெரியுமா?"
85, ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14.

★ "யார் இவர் தெரிகிறதா?" இல.16 இற்கான சரியான விடை: இந்தியாவின் பெருந்தலைவர் காமராஜர். சரியான விடைகளை அனுப்பியோரில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:

1. எஸ்.கண்ணன், கொட்டாஞ்சேனை. 2. சிபானியா.முகைதீன், வெல்லம்பிட்டிய.
3. எல்.வைஷ்ணவி, கல்முனை. 4. எஸ்.கௌரி, திருகோணமலை. 5. சூ.திலீபன், வவுனியா.

## தத்துவம்

எழுத்து : ஆண்டவனின் எழுத்து தலையெழுத்து - உன் ஆழ்மனதை காட்டுவது கையெழுத்து.

பலகை : வீட்டுக்கு தேவை பலகை - இன்று நாட்டுக்கு தேவை பலகை.

பொறுப்பு : விலை உயர்ந்திருக்கிறது பருப்பு- எங்கள் விரக்திக்கு நாங்கள்தான பொறுப்பு.

கள் : மதுவை விட போதை தரும் கண்'கள்' மாற்றங்களின் ஆரம்பம் பெண்கள்.

சட்டம் : முட்டாளுக்கு உத்தரவிடுகிறது புத்திசாலிக்கு வழிகாட்டுகிறது.



## சிலையோ சிலை!

சீனாவின் சிசுவான் மாகாணத்தில் லெஸ்ஷன் நகரில் 220 அடி உயரத்திலும், 87 அடி அகலத்திலும் அமைந்துள்ள பிரமாண்டமான புத்தர்சிலை இது. உலகின் மிக உயரமானதும் பழமையானதுமாக இது கருதப்படுகின்றது.

## குறும்பு



"இந்த ஊரிலேதான் ஆம்பிளையள் இதுபோல வேஷ்டியை தூக்கிக் கட்டிக்கொண்டு.... கொஞ்சம்கூட 'டீசென்சியே' கிடையாது."



## நாற்பது வருடங்களுக்கு முன்பு

ஓர் அமெரிக்கர் முதல் முறையாக இந்தியா போயிருந்தார். ஒரு டாக்சியை அமர்த்திக் கொண்டு தலை நகரைச் சுற்றிப் பார்த்தார். ஒரு ரொட்டிக் கடைகக்கு முன் ஏகக் கூட்டம். மக்கள் முண்டியடித்துக் கொண்டிருப்பதைக் கண்ட அமெரிக்கர் "அங்கே என்ன நடக்கிறது?" என்று கேட்டார்.

தேசபக்தி மிக்க அந்த டிரைவர் எமது நாட்டைப் பற்றி அவர் மட்டமாக நினைத்து விடக் கூடாதே என்பதற்காக "சினிமா ஷூட்டிங் நடக்கிறது?" என்றார்.

மேலும் கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு கூப்பன் கடை முன்பு பெரும்கூட்டம் - இரைச்சல்.


"இங்கே என்ன நடக்கிறது?" என்று கேட்டார் அமெரிக்கர்.

"அதே படத்தின் ஷூட்டிங்தான் இரண்டாம் பாகம்" என்று கூறினார் டிரைவர். இன்னோரிடத்திலும் இதே அனுபவம்.

"அதே படம் மூன்றாவது பாகம்" என்று சமாளித்தார் டிரைவர்.

"இந்தப் படத்தின் பெயர் என்ன?" என்று கேட்டார் அமெரிக்கர்.

"நாற்பது வருடங்களுக்கு முன்பு" என்று டிரைவரிடம் இருந்து பதில் வந்தது.



# கவிதைப் பூங்கா

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா

## உன்னைத் தேடும் மேகம்...

வாழ்வதற்கு வரைவிலக்கணம் சொன்னவளே....!
நான் தோல்வியின் பக்கம் குடைசாய்ந்தபோது....
தலை தடவி தோள் கொடுத்து துணை நின்றவளே!
என் வெற்றிகளின் போது மட்டும்
வெளிச்சத்திற்கு வராமல்
வெகுதூரமாய் எங்குபோனாய்...?

கைதட்டல்களும், பாராட்டுக்களும்
ஏன் சில முகஸ்துதிகளும்
சில வேளைகளில் என்னை
ஆசுவாசப்படுத்தலாம் ஆனாலும்
நீ இல்லாமல் நான் மட்டும் வாழ்வது ஒரு வாழ்வா?

உனக்குத் தெரியுமா?
இப்போதெல்லாம் என்னால் மேடைகளேறி
காதல் கவிதைகள் பாடமுடிவதேயில்லை
ஏனெனில்
குறை மாதத்து குழந்தையாய்
உன்னை உச்சரிக்காத
கவிதை வரிகள் இடையிலேயே.....
உயிரிழந்து போவதால்....
நாம் வாழ்தல் இல்லையெனில் சாதல் என்பாயே....
இப்போது நீ என்னவானாய்...?

நீ உயிரிழந்து போனால்
நான் வாழ்வதைப் போல்
உயிர் துறக்கவும் முடியும்.
இல்லையேல்....
உனைப்போல் மறைந்து நின்று...
மறந்து போனதாய் பாசாங்கு செய்யவும் முடியும்.

■ அட்டாளைச்சேனை நவாஸ்



அழகிய குருவிக்கூடொன்று
கொடிய வேடனின் அம்புபட்டு
மண்ணிலே விழுந்ததால்
உயிரினை தொலைத்து போனது ஒரு குருவி
அதைஉயிரென நினைத்த குருவியோ
தேடிப்போனது வேறொரு கூடு....
குயில் கூட்டில் ஒரு காகமாய்...
சாயம் வெளுத்து... முகவரி இன்றி
பறந்தது ஒரு குருவி... உயிர் தொலைத்த
குருவியின் குஞ்சுகளிற்காய்
இரைதேடப்போன குருவிகள் இரண்டோ
கூண்டுக்குள்
தனியே குஞ்சுகளை தன் சிறகுகளுக்குள்
வைத்து காத்திடும் ஒரு பறவை...
இந்த வேதனைகளை மொத்தமாக
இதயத்தில் தாங்கி அணு அணுவாய்த்
துடிக்குது ஒரு தாய்ப்பறவை....
வேடனே... நீ அம்பால்
அடித்ததைவிட
தீ கொண்டு எரித்திருக்கலாம்..
ஒன்றாகவேனும்
நாங்கள் இறந்திருப்போம்.

■ புளியங்குளம் சுதர்சனா

## கிணற்றுக்குள் வீழ்ந்த நிலா



அறியா வயதில் அகமதிலே
ஆழமாய் பதிந்தது உன்முகமே...
புரியா தென்னை இருக்கின்றாய்; என்
பூமிக்கு இறங்கி வருவாயோ!

காதலை நெஞ்சில் விதைத்தாயே?
கனவுகள் தந்து நீ மறைந்தாயேன்?
இரவுப் பொழுதின் இம்சையில்தீ
இதயத்தில் எரிவதை அறியாயோ...?

உள்ளத்தை மௌனத்தா லறுக்கின்றாய்
ஊமையாய் ஏனடா இருக்கின்றாய்?
இல்லானாய் உனைநான் அடைவதற்காய்
இறக்கும் வரைக்கும் காத்திருப்பேன்...

வெண்ணெயை கையிலே வைத்துக்கொண்டு-நீ
'வெளியி லலைவதை' நானறிந்தேன்!
என்னை மறந்துநீ திரிந்தாலும்
என்றும் உன்னுள் பூப்பறிப்பேன்!

'பட்டம்' பலநான் பெற்றாலும்-என்
பட்டம் உனக்குள்தான் பறக்குமடா!
வட்டம் போட்டு உனக்குள்நீ
வாடா தெனக்குள் வந்துவிடு!

கிணற்றுக்குள் விழமனம் நினைக்கையிலே-உன்
கிரணமுகம் வந்து கொல்கிறது!
கீற்றோலைக் கூந்தலை அசைக்கும் தென்றல்
கீதமிசைத்துச் செல்கிறது...!

காதலை ஊற்றிய அன்புநிலா! - உனை
காணாமல் வாடுதென் அல்லிநிலா!
பிரிந்தென்னை வதைக்கின்ற வண்ணநிலா!
பிரியமாய் வந்திடு வாழ்க்கைநிலா!

■ எம்.எஸ்.நர்ஜிஸ், அக்கரைப்பற்று - 06.

## உயிர்த்துடிப்பு

நிசப்தங்களுக்கடியில்
மரணத்தின் பிரசவம்
சுவாசித்துக்கிடக்கும்.
துப்பாக்கி வேட்டுக்களில்
விடிகின்ற பகல் பொழுதுகள்
இருள் விலகியும்
இருட்டடிப்பின் சோகங்களுக்குள்...

நீ அறிவாயோ... என்னவோ
எம் ஆத்ம ஆழத்தில்
கனன்று கிடக்கிறது
விடுதலைச் தீச்சுவாலைகள்...

நீ வந்தபோது
எம் சந்தோஷிப்புகளிலிருந்து
கரகோஷம்
களவாடப்பட்டிருக்கலாம்.
ஒரு வேளை
உணர்வின் உயிர்த்துடிப்பு
உறைந்திருக்கலாம்....

என்றோ ஒருநாள்
எனதெல்லைகளில் நீ
திரையிடப்படுவாய் என்ற
எதிர்பார்ப்புகளில்
முற்றத்தின் பழைய
ஞாபகங்களை
அப்புறப்படுத்துகிறது.
உயிர்தெழுந்த கனவுகள்...

■ கொடிகாமம் ந.மைதிலி



## காதலும் சீதனமும்



அன்றைய நாளில்
இருவரும் சந்தித்தோம்.
பின்னைய நாட்களில்
புன்முறுவல் பூத்தோம்.
ஓரிரு நாட்களில்
பேசிப் பழகினோம்.
காதலெனும் படர் கொடி
நம்மைப் பிணைத்தது.
விளைவு
இன்றைய நாட்களில்
எம்முள் பிரிவு.
ஏன் அன்பே?
காதலிக்கும்போதே
சொல்லியிருக்கலாமே?
எவ்வளவு சீதனம் வேண்டுமென..
அப்போதே உன்னை
மறுத்திருப்பேனே...
இத்தனை நேசத்தை
எதிர்காலக் கனவுகளை
என்னுள்ளே வளர்த்துவிட்டு
அம்மா சொன்னாள் என்று
லகரத்தில் கேட்கிறாயே
ஏழை என்னிடம்.
என் பெற்றோர் தரும்
காசிலே எனை நீ
காப்பாற்றப் போவதென்றால்
அது என்வீட்டிலே இருக்கட்டும்
நானும் அங்கேயே இருக்கிறேன்.
அப்பணத்தை வட்டிக்கனுப்பி
உன் நினைவுகளை நினைத்து
வாழ்ந்துவிட்டுப் போகிறேன்
ஒரு ஊமைப்பெண்ணாய்....

■ புதுக்குடியிருப்பு வி.சாமந்தி

## தமிழ்த் தாய்

எத்தனையோ கவிவரிகள்
வடித்துவிட்ட போதும், தமிழனாய்
எனை பிரசவித்த உனக்காய்
ஒருவரி எழுத
என் பேனைக்கருவிக்கோ
பேசத் தெரியவில்லை.

என்தாய் எனைமட்டும்
ஒற்றையாய் தாங்கி
பிரசவிக்கும்போதே
உயிர் போகும் வேதனை
அடைந்ததாய்,
ஊர் சொல்லிக்
கேட்டிருக்கிறேன்.

எத்தனைக் கவிஞர்களை,
எத்தனை எழுத்தாளர்களை,
எத்தனை கதாசிரியர்களை,
ஒரே பிரசவத்தில் ஈன்றவள் நீ
உன் பிரசவத்தின்
வேதனைதான்
எப்படி இருந்திருக்கும்?

உன் இரத்தத்தைப்
பாலாக வார்த்து,
பருகிய ஒரு துளியே
ஒரு தமிழனை
உருவாக்கியதென்றால்,
உன் ஒட்டு மொத்தப் பாலையும்
நீ சுரந்தால் அதைத்தாங்க
இப் பூமிக்கெங்கே
வலுவிருக்கிறது?

■ பொகவந்தலாவ சோ.சுதர்ஷினி

## ஏன்?

என் கருணை
விழிகளில்
ஊஞ்சலாகும்
கண்ணே- நீ ஏன்
என்னைத் தேடவில்லை.

■ வெலிகம ரிம்ஸா முஹம்மத்

## சந்திப்போம்



தோட்டாக்களும்
குண்டுகளும்
எம்மை உயிருடன்
விட்டு வைத்தால்
மலரப்போகும்
தமிழீழத்தில்
மீண்டும் சந்திப்போம்

■ முல்லைத்தீவு குணதீபா

## நினைவில் நிறுத்துவோம்



காலங்களால் கரைக்கமுடியாத
கமலங்கள்- எங்கள்
நினைவுகள் நீங்காதென்றும்
ஒளிரும் நந்தா விளக்குகள்!
உதிக்கின்ற கதிருக்கும்
மேலானவர்கள்- எம்
உணர்வுகளுள் என்றென்றும்
உயிரானவர்கள் இவர்கள்
வீரங்கண்டு
கரைகின்ற கடலும்
உறைந்திடும் பாசங்கண்டு
உதிர்ந்திட்ட மலரும்
மகிழ்வுடன் மலர்ந்திடும்!- எம்
விடியல் வேண்டி
விதையானவர்கள்- தமிழை
தாங்கும் விழுதானவர்கள்!
கந்தகம் சுமந்து
களமாடி- செந்தமிழ் வாழ
விழிமூடி
கல்லறைக்குள்
துயில்கிறார்கள்!
வாருங்கள்,
மணியொலித்து ஒளியேற்றி
அதில் தளிர் முகங்கண்டு
மலர்தூவி வணங்கிடுவோம்!
நினைவில் நிறுத்திடுவோம்!

■ வல்லவை நெற்கொழுதாசன்

## உணர்வுகள்

ஈழநிலா 33

# இளைய தலைமுறையின் கலைஞர்! இறந்தும் இறவாத கவிஞர்!

■ கவிஞர் சு.வில்வரத்தினம்



யாழ்ப்பாணம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட மறைந்தும் மறையாத கவிஞர் சு.வில்வரத்தினம், வேலாயுதம் சுப்பிரமணியம் மாணிக்கம் தம்பதியினருக்கு 1950-08-07இல் பிறந்தவர். அவர் ஈழத்தின் இலக்கிய சிந்தனையாளராகிய மு.தளையசிங்கத்தின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். அவரது கவிதைகள் மொத்தமாக 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்ற தொகுதியாக 2001இல் வெளியாகின. 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுதியிலும் அவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. 'Lute song and lament: Tamil writing from Sri Lanka' தொகுதியிலே அவரது கவிதை ஆங்கில வடிவிலே வெளிவந்துள்ளது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உறுதியான பற்றுக் கொண்ட கவிஞரான அவர் தனது கவிதைகளில் அதற்கே முதன்மை வழங்கி வந்தார். அவரது 'காற்று வழிக் கிராமம்' எனும் கவிதைத் தொகுதி விபவி சுதந்திர அமைப்பின் 1995 ஆம் ஆண்டுக்கான சிறந்த கவிதைத் தொகுதிக்கான விருதினைப் பெற்றுக் கொண்டது. அவர் கவிதைகளையும், பாடல்களையும் சிறப்பாகப் பாடும் வல்லமை கொண்டவர். ஏராளமான பாடல்களும் எழுதியுள்ளார்.

விவசாயத் திணைக்களத்திலும் அதன் பின்னர் கல்வி கலாசார பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராக திருகோணமலையிலும் பணியாற்றியுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான சு.வி. சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்து 2006-12-09இல் தனது 56ஆவது வயதில் கொழும்பில் காலமானார். தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்த படைப்பாளர் கவிஞர் சு.வி. அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் 'நாட்டுப்பற்றாளர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அவரது நூல்களாவன: அகங்களும் முகங்களும் (கவிதைத் தொகுதி-1985),காற்றுவழிக் கிராமம் (கவிதைத் தொகுதி- 1995 ),காலத்துயர் (கவிதைத் தொகுதி-1995), நெற்றிமண் (2000), உயிர்த்தெழும் காலத்துக்காக (கவிதைத் தொகுதி-2001), வாசிகம் (2005).

அவரது 'உயிர்த்தெழும் காலத்துக்காக' தொகுப்பு தமிழ் நாட்டிலும் அவரைப் பற்றிப் பேச வைத்தன. அவரது கவிதைகளால் ஆட்கொள்ளப்பட்ட தமிழ் நாட்டின் புத்திஜீவிகளான எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா, பேராசிரியர் வி.அரசு, மங்கை, கவிஞர் இன்குலாப், புதுச்சேரிக் கண்ணன் ஆகியோர் அவர் இறந்த செய்தி கேட்டு பின்வருமாறு இரங்கல் செய்தி அனுப்பினர்.

''இதோ எங்களிடம் மீண்டும் ஒரு பாரதி, மீண்டும் பாப்லோ நேருடா, மீண்டும் ஒரு வால்ட் விட்மன் பிறந்திருக்கிறான். எங்கள் தமிழ்ச் சமூகத்துக்குள்ளும் ஒரு மஹமூத் தார்வீஷ் இருக்கிறார் என்று நாங்கள் பெருமைப்பட்டுக் கொள்ளச் செய்த மாபெரும் கவிஞர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். அவர் கவிஞர் மட்டுமா, கலைஞர் மட்டுமா? உண்மையான ஆன்மீகவாதியாக, பிரபஞ்சவாதியாக, கள்ளங்கபடமற்ற மனித நேயராக வாழ்ந்து காட்டியவர்... அவர் பாடிய பாடல்கள் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறன.''இப்படி அவர்கள் கூறியவை வெற்றுப் புகழ்ச்சியல்ல. அவர் பற்றி நன்கறிந்த, நிதானித்த அவதானிப்பில் வெளி வந்தவை என்பதை நாம் இச்சந்தர்ப்பத்தில் தெரிந்து வைத்திருப்பது ஆரோக்கியமானது.

'இளைய பரம்பரையின் கலைஞன்' என்று மு.தளையசிங்கத்தினால் விளிக்கப்பட்ட கவிஞர் சு.வி., சங்கீதம், நாட்டுக்கூத்து கற்றவர். பல நாடகங்களையும் யாத்துள்ளார். கவிதையை கூத்து வடிவத்திலும் பண்ணிசைக் கட்டாகவும் தொன்மைப் பொலிவாகவும் தந்தவர். புங்குடுதீவில் தாழ்த்தப்பட்ட மக்களும் நன்னீர்க் கிணறுகளில் தண்ணீர் அள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்று மு.தளையசிங்கத்தினால் நடத்தப்பட்ட போராட்டத்தில் உண்ணாவிரதம் இருந்து பொலிஸாரால் தாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர். 1970களில் எழுத ஆரம்பித்த அவர் 1980களில் முக்கியமான படைப்பாளராக பரிணமித்தார். அவர் கவிதைகள் பற்றி செ.யோகராசா அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:

''சு.வி.யின் புதுமைப் பண்புகளில் ஒன்று ஏறத்தாழ 2000 ஆண்டு கால தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தை சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், தேவார, திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், தனிப்பாடல்கள், பாரதியார் , பாரதி தாசன் கவிதைகள், வாய்மொழிப் பாடல்கள் முதலானவற்றைப் பயன்படுத்துவதாகும். அவர் கவிதைகளூடாக வெளிப்படுகின்ற புதிய சொற்றொடர்கள் நவீன தமிழ் கவிதைக்கு தந்துள்ளவர்கள் அரிதென்றே கூறத் தோன்றுகின்றது.காலப்புற்று, உறவென்னும் ஒளிக்கயிறு, கிராம தேவதா, உயிர்த்துவம், ஒளிக் கனி, தளிரீ, மூன்றாம் பிறை நகை, சிறுவம், உயிர்தண்ணி, கொட்டு மேகம், காலத்தின் உதடுகள், ஒளிவிரல்கள், இருளின் கூச்சல், புன்னகையின் சுடர், பீதியின் காடு, ஆலைக்கனல், மொட்டைக்கனவு, குருவிக்காடு, அசோக வனத் துயர், சருகுதிர்ந்த நினைவுகள், அந்தரத்தில் தொங்கும் அவலங்கள், உயிர்த்தளம் என்பவற்றை குறிப்பிடலாம்.

கோயம் புத்தூரில் காலச்சுவடு ஏற்பாட்டில் அண்மையில் நிகழ்ந்தேறிய 'பாரதி 125, புதுமைப்பித்தன் 100, சு.ரா. 75' உலக இலக்கியக் கருத்தரங்கின்போது சு.வி.யின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்திருந்தது முக்கியமான விடயம்தான். கு.ப.ரா. தொடக்கம் புதுமைப்பித்தன் வரை படைப்பாளர்கள் பலரும் முடிவுறாத படைப்புக்கள் பலவற்றை விட்டுச் சென்றுள்ளமையை நாம் அறிவோம். இன்று சு.வி.யும் இத்தகையதோர் பரம்பரையில் இணைந்துள்ளார் எனலாம். சு.வி.யும் 'சிலுவையில் அறையப்பட்ட தீவுகள்' (காவியம்), 'விடுதலை ஆற்றுப்படை' ஆகிய இருபடைப்புக்களை அவ்வாறு விட்டுச் சென்றுள்ளதாக அறியப்பட்டுள்ளது. அவ்வப்போது சு.வி. எழுதிய இசைப் பாடல்கள், கட்டுரைகள், முன்னுரைகள் என்பனவும் நூலுருப் பெறும்போதுதான் சு.வி.யை மேலும் புரிந்து கொள்ள வியலும்.''




இரா.ரஜனிகலா,
ஆண்டிமுனை, உடப்பு.

*கேள்வி:* பித்தா! எந்த ஆணையும் ஒரு பெண் நினைத்தால் வீழ்த்தமுடியும் என்பது உண்மையா?



*பதில்:* வெள்ளை ஏகாதிபத்தியமே அசைக்கமுடியாமல் போன காந்தியை, சரளாதேவி அசைத்துவிடவில்லையா?

கே.சிந்துஜா,
நல்லூர்.

*கேள்வி:* மாணவர்கள் மாணவிகளை 'வாடீ, போடீ' என்றும், மாணவிகள் மாணவர்களை 'வாடா, போடா' என்றும் அழைக்கின்றார்களே பித்தா?

*பதில்:* கணவன்- மனைவி கூட அப்படி அழைப்பது தான் இப்ப நாகரிகம் என்பது உங்களுக்குத் தெரியாதோ?

பி.சாந்தன்,
செங்கலடி.

*கேள்வி:* உலகம் எப்போது அழகாய்த் தெரியும் பித்தா?

*பதில்:* காதலி அருகில் இருக்கும் போது.



எஸ்.இம்றாஸ்,
தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

*கேள்வி:* பெண்ணுக்குப் பெருமை எது? ஆணுக்குப் பெருமை எது என்று கூறுங்கள் பித்தா?

*பதில்:* பெண்ணுக்குப் பெருமை - தாய்மை.

ஆணுக்குப் பெருமை - தாய்மை ஆக்குவது.

சாந்தினி,
கொழும்பு - 14.

*கேள்வி:* கணவனுக்கு மனைவி எப்போது கசக்கிறாள் பித்து மாம்ஸ்?

*பதில்:* அந்த சில நாட்களில்.

எம்.எஸ்.சாஜிதா,
அக்கரைப்பற்று-06.

*கேள்வி:* எமது நாட்டில் அழிக்க முடியாதவை எவை பித்தா?

*பதில்:* லஞ்சம், கொசு.

திலீபன்,
வவுனியா.



*கேள்வி:* டியர் பித்தா! மதுவா, மாதுவா அதிகம் போதை தருவது?

*பதில்:* அருந்தினால் போதை தருவது மது. அருந்தாமலேயே போதை தருவது மாது.

எஸ்.மயூரி,
தெல்தெனிய.

*கேள்வி:* பித்தா! நல்ல செய்தி ஒன்றும் கெட்ட செய்தி ஒன்றும் சொல்லுங்கள் பிளீஸ்?

*பதில்:* கெட்ட செய்தி- எங்களுடைய மாடியிலே குடியிருந்த பிகர் மோகனா வீடு மாறிவிட்டா.

நல்ல செய்தி- அவர் இப்போ எங்களோட வீட்டுக்குப் பக்கத்திலே குடிவந்திட்டா.

வே.சசிகரன்,
திருமுறிகண்டி.

*கேள்வி:* கவர்ச்சிப் புயல் நமீதா கனவில் வருகிறார். நேரில் வர என்ன செய்யவேண்டும்?



*பதில்:* தா...தா...தா...நமீதா தாகம் எடுக்குதடி தண்ணி தா.. என்று பாடிக்கொண்டே தூங்குங்கோ சிலவேளை, வந்தாலும் வருவா.

எஸ்.சாந்தீபன்,
கொழும்பு-05.

*கேள்வி:* மூன்று இலட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு, மனிதர்களில் 'ஆண்' இனம் இருக்காதாமே. பெண்கள் மட்டும்தான் இருப்பார்களாம் பித்தா?

*பதில்:* பண்டைக் காலத்தில் இமயமலைச் சாரலில் ராஜ்ஜியம் அமைத்த பெண்களைப் போலவே, எதிர்காலத்தில் பெண்கள் ஆட்சிவந்தால் என்ன ஆகும்? ஆண் இனம் அடியோடு அடக்கி ஒடுக்கப்பட்டு, அடிமைகள் போல வளர்க்கப்படுவார்கள். அழகிய, வீரியம் மிகுந்த ஆண்களைத் தேர்ந்தெடுத்து அந்தப்புரத்தில் சிறைப்படுத்தி, குழந்தைகள் பிறப்புக்கு மட்டும் பயன்படுத்திக்கொள்வார்கள். இதையெல்லாம்விட பெண்கள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள். குழந்தை வேண்டும் என்றால், விந்து வங்கியில் இருக்கும் ஆணின் போட்டோ, பயோடேட்டாவைப் பார்த்து விந்தினை தேர்ந்தெடுப்பார்கள். புடவை செலக்‌ஷன் மாதிரி அதிக நேரம் எடுத்துக்கொள்வர் என்பது வேறு விடயம்.

## தோட்டப்பாடசாலை

அரைமதில்; உச்சிக் கூரை
  அகலநீள் கூடம்; பள்ளி
விரைகுவர் சிறாரும்; பாவம்
  வெகுதூரம்; கால்க ளோட்டம்!
தரைமீது அமர்வு பாலர்
  தளிர்விரல் எழுது கோலம்!
வரைகுவர் மணலின் மீது
  அரிவரி; எங்கள் காலம்!

மணியோசை கொள்ளும்; தள்ளும்
  மாணாக்கர் முதலில்; ஈற்றில்!
கணிதம்நல் பாக்கள், பாடம்
  காதைகள் புகட்டும் கூடம்!
பணியிவோர் ஆசான்; மேசை
  நாற்காலி மட்டும்; இடாப்பு
மணிக்கூடு, பிரம்பு, மாலை
  மனைசேரும்; மீளும் காலை!

வகுப்புகள் ஐந்து பாலர்
  வகுப்பினை ஒதுக்கி; ஒன்றாம்
வகுப்பினர் தொட்டு ஐந்தாம்
  வகுப்பினர் அமர்வு வாங்கில்!
புகுவர்கற் பலகை கற்கூர்
  பாடநூல் சகிதம்; பெற்றார்
தகுதிகள்; புராண காதை
  தடையின்றி படிப்பார்; விரிப்பார்!

காணாமல் ஒளிவர் சில்லோர்
  கருத்திலார்; பள்ளி வாழ்வை.
வீணாக்கும் சிறுவர்; புதர்க்குள்
  வேலிக்குள் பதுங்கல்; தேடி
கோணாமல் பிடிப்பார் பள்ளிக்
  கங்காணி; பதுங்கல் காட்டில்
மாணாக்கர் படையைக் கூட்டி
  மேற்கொள்வார் வேட்டை; வெற்றி!

*ஸி.எஸ். காந்தி*

# சமஷ்டி சுயநிர்ணய ...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

*உரிமையின் உள்ளக, வெளியக கூறுகள் இரண்டிற்கும் உரித்துடையவர்கள். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்,அந்நியத் தலையீடு எதுவுமின்றித் தமது அரசியல் தகைமையைத் தாமே சுதந்திரமாக நிர்ணயித்துக் கொள்ளவும் தமது சமூக, பொருளாதார, கலாசார வாழ்வைத் தாமே மேம்பாடு செய்யவும் தமிழ் மக்களுக்கு உரிமையுண்டு.*

*அரச அடக்குமுறைக்கும், அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் எதிரான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் எமது விடுதலை இயக்கம், தனது அரசியல் கொள்கை நிலைப்பாட்டை, உள்ளக - வெளியகக் கூறுகள் இணைந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே நெறிப்படுத்தியிருந்தது. சாராம்சத்தில் இந்தக் கொள்கை நிலைப்பாடு ஐ.நா.பிரகடனங்களுக்கும் சர்வதேச சட்ட நியமங்களுக்கும் இசைவாகக் சுட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.*

- என்று முத்தாய்ப்பு வைக்கிறார் பாலசிங்கம்.

* * *

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எனக்கு விசேட செவ்வி அளித்து, அது குறித்து பாலா அண்ணன் சீற்றமாகக் கருத்து வெளியிட்ட பின்னர் - சில வாரங்கள் கழித்து - ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

கொழும்பில் உள்ள தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்களை இரவு விருந்துடனான ஒரு சந்திப்புக்காக ஜனாதிபதி மாளிகைக்கு ஜனாதிபதி குமாரதுங்க அழைத்திருந்தார்.

சுமார் இருபத்தியைந்து மூத்த பத்திரிகையாளர்கள் அதில் கலந்துகொண்டனர். பல்வேறு பானங்களோடு உரையாடல் நீண்டநேரம் தொடர்ந்தது. அதன் பின்னரே இரவு விருந்து.

தனித்தனியாகவும், கூட்டம் கூட்டமாகவும் நின்று உரையாடினோம். ஜனாதிபதியுடனும் அவரது கட்சியின் மூத்த உறுப்பினர்களோடும் பேச்சும், வாக்குவாதமும், விவாதமுமாக சந்திப்புத் தொடர்ந்தது. (அச்சமயத்தில் பிரதமர் ரணிலின் அரசு ஆட்சியிலிருந்ததையும் சரத் அமுனுகம, கதிர்காமர் போன்றோர் எதிர்க்கட்சி எம்.பிக்கள் என்ற அந்தஸ்தோடும் இருந்ததையும் நினைவில் கொள்க.)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்யும் முயற்சியை இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகா, கதிர்காமர் போன்றோர் கடுமையாக வைதனர். தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்கள் ரணிலின் அந்த முயற்சிக்கு வரவேற்புத் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகாவுடனும் கதிர்காமருடனும் தர்க்கிக்கவும் தவறவில்லை.

அச்சமயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் சில நிமிடங்கள் தனியே பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

சில வாரங்களுக்கு முன்னர் எனக்கு அவர் அளித்த பிரத்தியேகப் பேட்டியில் அவர் குறிப்பிட்ட கருத்துக்களை அச்சமயம் அவருக்கு நினைவுபடுத்தினேன்.

''உள்ளக சுயநிர்ணய உரிமை என்று ஏதும் இல்லை என நீங்கள் கூறினீர்கள். ஐ.நா. பிரகடனங்களின் அடிப்படையில் அதனைத் தெளிவாகத் தங்களுக்கு விளக்கத் தாம் தயாராக இருக்கிறார் என பாலசிங்கம் கூறுகின்றாரே?'' எனச் சிரித்துக்கொண்டு குறிப்பிட்டேன்.

ஒரு கணம் என்னை உற்றுநோக்கினார் ஜனாதிபதி சந்திரிகா. பின்னர் சுதாரித்துக்கொண்டு ''அப்படியா?'', ''Is it so....?'' என்றார். ''உங்கள் நண்பர் அப்படியா கூறுகின்றார்....? '' எனக் கேட்டார்.

நான் ஆம் என்பது போல தலையசைத்து அவரது பதிலுக்குப் பார்த்திருந்தேன்.

''இன்று தர்க்கத்தை விடுத்து நல்ல இரவு உணவை அருந்துவோம். பிறிதொரு நாள் விவாதிப்போம்'' என்ற சாரப்பட அவரது பதில் தொடர்ந்தது.

இரவு உணவுக்கான சாப்பாட்டுத் தட்டை எனது கையில் தந்து, அடுத்த தட்டை எனக்குப் பக்கத்தில் இருந்த மற்றொரு பத்திரிகை ஆசிரியருக்குக் கொடுத்தபடி எனது கேள்விக்கு சரியான விடை தராமல் நழுவினார் - நகர்ந்தார் - இரவு விருந்தின் அழைப்பாளரான ஜனாதிபதி சந்திரிகா.

நானும் இன்னும் மூன்று பத்திரிகை ஆசிரியர்களும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் சேர்ந்து வட்டமேசை ஒன்றில் எதிரும் புதிருமாக அமர்ந்து, ஆற அமர இரவு விருந்துண்டோம். அச்சமயம் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் தலைவர்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா அடித்த 'கொமண்ட்' இந்தச் சந்தர்ப்பத்தில் - இக்கட்டுரைக்கு - பொருத்தமற்றது. பிறிதொரு சந்தர்ப்பத்தில் வாசகர்களுடன் அவற்றைப் பகிர்ந்துகொள்வேன். அரியாசனத்தில் உயரத்தில் இருக்கும் அரசியல் தலைவர்களின் போக்கும் பண்பும் பேச்சும் எத்தகையவை என்பதை மதிப்பிட - உரைத்துப் பார்க்க - அந்த அனுபவம் எனக்கு உதவியது. ஒரு வகையில் நான் அதிர்ச்சியடைந்தேன் என்பது உண்மை.

இந்த இரவு விருந்தில்தான் நான் முக்கிய பிரமுகர் ஒருவரை முதன்முதலில் சந்தித்தேன்.

அவர் வேறு யாருமல்லர். இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷதான் அவர்.

அப்போது அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதனால் அவருக்கும் அந்த நிகழ்ச்சிக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது போலும்.

ஆனால், ஜனாதிபதி மாளிகையில் அவருக்கு அப்போது முக்கியத்துவம் அதிகம் அளிக்கப்படாமல் - அவர் ஒதுக்கப்பட்டவர் போல அல்லது ஒதுங்கி நடப்பவர் போல - காணப்பட்டார். சரத் அமுனுகம, கதிர்காமர் போன்ற எம்.பிக்களுக்கு இருந்த முக்கியத்துவம் கூட எதிர்க்கட்சித்தலைவரான மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு இருக்கவில்லை.

விருந்துக்கு வந்திருந்த பத்திரிகை ஆசிரியர்கள் கூட அவருக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது போல எனக்குப் பட்டது.

நானே வலியச் சென்று என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு பேச்சுக்கொடுத்தேன். சுமார் 45 நிமிட நேரத்துக்கு மேல் இருவரும் தனித்து உரையாடினோம். ஜனாதிபதி மாளிகையின் நடு முற்றத்தில் அந்த பாரிய ஆலமரத்தின் கீழ் - அந்த முன்னிரவு நேரத்தில் - நாலாபுறமும் ஏனையோர் தங்களுக்குள் ஆரவாரமாக உரையாட, நாங்கள் மட்டும் தனித்து விடப்பட்டவர்களாக சம்பாஷனையைத் தொடர்ந்தோம். 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளையும் என்னையும் அவர் பரிவோடு அரவணைப்பதாக அவரது பேச்சு எனது மனதில் பதிந்தது. சரளமாக அரசியல் விடயங்களை அவர் என்னோடு பகிர்ந்துகொண்டார்.

இது நடந்து சுமார் இரண்டரை ஆண்டுகள் கடந்து, மஹிந்த ராஜபக்‌ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று சுமார் இரண்டு மாத காலத்தில், அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவை இரண்டாவது தடவையாக - நேரடியாக - இம்முறை தனியாகச் சந்திக்கவேண்டிய நிலை எனக்கு ஏற்பட்ட அந்தச் சந்திப்பு, அதை ஒட்டி விரிந்த அடுதத சந்திப்புகள் - அரசியல் விவகாரங்கள் எல்லாம் பிறிதொரு சந்தர்ப்பத்தில் - தேவை எழுந்தால் - வாசகர்களுடன் பகிர்வேன். சுவையான சம்பவங்கள் அதில் அதிகம் பொதிந்துள்ளன. வரலாற்றுத் தேவை எழும் போது அவற்றைப் பார்ப்போம்.

இவ்வாறு அலரி மாளிகையில் நாம் இரண்டாம் முறை ஜனாதிபதி மஹிந்தரைச் சந்தித்தபோது, முதல் தடவை ஜனாதிபதி மாளிகையில் - அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது - நாம் சந்தித்துக்கொண்டமையை அவரே குறிப்பிட்டு நினைவுபடுத்தினார். அந்தச் சந்திப்பு, அப்போது நாங்கள் பரிமாறிய கருத்துக்கள் என்பன மஹிந்த ராஜபக்‌ஷவின் மனதிலும் ஆழமாகப் பதிந்திருந்தமையை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

அந்த முதல் சந்திப்பின்போது - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைத்த அந்த இரவு விருந்தின்போது - ஜனாதிபதி மாளிகையில் வைத்து - எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்‌ஷ ஒரு கருத்தை என்னிடம் கூறினார். அவர் கூறிய வசனங்கள் என் காதில் இன்னும் மீள ஒலிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாடு குறித்தும், ஜே.வி.பி. குறித்தும் அவர் கூறிய அந்தக் கருத்துக்களை இப்போதும் நினைத்துப் பார்க்கின்றேன். இன்று ஜே.வி.பி. தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ இப்படி நடந்துகொள்வதற்கு அதுதான் முக்கிய காரணம் என நான் உறுதியாக நம்புகிறேன்.

அப்படி என்னதான் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்‌ஷ அப்போது எனக்குக் கூறினார்? அதை அடுத்த வாரம் பார்ப்போமா?

# சரியாது நடைபோடும் 'சரிநிகர்'

'சரிநிகர்' பத்திரிகை நீண்டகால அஞ்ஞாதவாசத்தின் பின்னர் சஞ்சிகை வடிவில் வெளிவரத்தொடங்கியிருக்கிறது.

அதனை வரவேற்று கலைஞர்களும், எழுத்தாளர்களும், இலக்கிய, அரசியல் ஆர்வலர்களும் கடிதப் பகுதியை நிறைத்துள்ளார்கள். அவர்களின் கணிப்பு சரிநிகரின் கனதியை வெளிப்படுத்துகின்றன.

'சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்ற பாரதியின் பிரகடனம் சஞ்சிகையின் தாரக மந்திரமாக அமைந்திருக்கின்றது.

அரசியல், கவிதைகள், சிறுகதை, சினிமா, கருத்தாடல், நேர்காணல், மதிப்பீடு, நிகழ்வுகள், நினைவுகள் என ஆக்கங்கள் அமைந்துள்ளன.

ஏ.எம்.றஷ்மியும், கோ.கைலாசநாதனும் [illegible]யப் [illegible]களிப்பினை ஆற்றியுள்ளார்கள்.

சுதாவின் 'கண்ணீரும் காத்திருப்பும், நாசமறுப்பானின் 'மக்கள் முன்னுள்ள கேள்வி இது' ஜே.எஸ்.திசநாயகத்தின் 'பந்தாடப்படும் இலங்கையின் சமாதானம்' ச.பா.நிர்மானுஷனின் '2007 வரலாற்றின் திருப்புமுனையா?' சிராஜ் மஷ்ஹூரின் 'எமது தாயகமும் வடக்கே' இடையனின் 'மலையகத் தமிழரின் வாழ்வுரிமையும் இலங்கை இந்திய ஆட்சியாளரின் பொறுப்பீனமும்', [illegible]சனம் - ராவய ஆக்கங்கள் எனவும் [illegible]சியல் கருத்தோட்டத்தையும், நடப்புக்களையும் வெளிக்கொணரும் பத்திமனுடன், சினிமா மற்றும் இலக்கியம், பெண்ணிலைவாத, பிரதிவாத ஆக்கங்களும் நிறைந்தனவாக சஞ்சிகை நிகழ்கின்றது. மனிதர்ஷா, [illegible]ரி.கேதாரநாதன், கே.எஸ்.சிவகுமாரன், அரவிந்தன், சிவமோகன் சுமதி, திசேரா (சிறுகதை) ஏ.ஜே.கனகரட்ணா, எஸ்.கே.விக்னேஸ்வரன் ஆகியோரின் ஆக்கங்களும், கவிதைகளும் நூல் அறிமுகங் களும் தாராள மாகவே சஞ்சி கையில் இடம் பெற்றிருக்கின்றன.

நம் நாட்டில் தமிழ் சினிமா அரிதாகவே தயாரிக்கப் படுகின்றதைப் போன்றே நல்ல சினிமா பற்றிய ஆக்கபூர்வமான கட்டுரைகளும், அறிமுகங்களும் அரிதாகவே இடம்பெறுகின்றன. நல்ல சினிமாவின் அறிமுகத்திற்கு சரிநிகர் நல்லதளம் அமைந்திருக்கின்றது.

மனிதர்ஷாவின் Provoked ஐ முன்நிறுத்தி, பெண்கள் மீதான வன்முறை குறித்து சில குறிப்புகள், லுமும்பா ஒரு துன்பியல், வரலாற்று நிலைக்கக்கூடிய படிமங்களின் சிருஷ்டியாளர் மகாஜன் ஆகிய கே.ரி.கேதாரநாதனின் ஆக்கங்களும், 'காலம் உதிர்ந்த கலைஞன்' மைக்கலஞ்சலோ அன்டோனியோனி பற்றி கே.எஸ்.சிவகுமாரனின் ஆக்கமும் நல்ல சினிமா சார்ந்த வேர்களின் ஆழ அகலங்களை அறிமுகஞ் செய்கின்றன. தமிழர் சினிமா ரசிகர்களிடையே நல்ல தெளிவானதொரு பார்வைக்கு இத்தகைய ஆக்கபூர்வமான பத்திகள் வாய்க்காலாகின்றன. இத்தகைய அறிமுகங்களினூடே அத்தகைய சினிமாக்கள் பற்றி எதிரும் புதிருமான விமர்சனங்கள் மேற்குலகில் எவ்வாறு




அமைந்தன என்ற ஆக்கங்களும் புதிய விழிப்புணர்வுக்கு வடிகால்களாக அமையவல்லன.

அறிமுகங்கள் வேறு, ஆக்கபூர்வ மான விமர்சனங்கள் வேறு. சிறுகதை, கவிதைத் தொகுதிகளையோ அல்லது புதினங்களையோ தேசிய செய்தி இதழ்களில் அறிமுகஞ்செய்கின்றபோது வாசகர் மத்தியில் குறித்த நூலைப்பற்றி அறிமுகம் செய்தலே பிரதான கடப்பாடாக அமைகின்றது. எனினும் காத்திரமான சிற்றேடு களிலும், கருத்தாடல் களிலும் அவ்வடித் தளத்தை புறம் தள் ளல் தவிர்க்க முடியாதது. உட்கூறுகளை மேலும் நயங் காணலும், செழுமை யறித லும், செம்மைப்படுத்த லும் வரலாற்று பின்புலத்தின் வலிமையும், பலவீனமும் அறிந்து சுட்டுதலும் பாரிய கடமைகளாகின்றன.




ரவியின் 'வன்னியின் நிறங்கள்', நீபி அருளானந்தத்தின் 'நிறங்கள்' நாவல்கள் குறித்த விமர்சனமும் தேவ அபிராவின் கவிதைகள் குறித்த விக்னேஷ்வரனின் வாழ்க்கை மீதான காதல் எனும் கண்ணோட்டமும் சிறந்த அறிமுகங்க ளானபோதும் காத்திரமான சிற்றேடுக ளுக்குரித்தான வலிமையான விமர்சன கூறுகளை இழந்தவைகளாக நிற்கின் றன. 90 களுக்குப் பின்னர் வெளியான நாவல்கள் குறித்த போதுமான பின்புல தெளிவினை அறியத்தரத் தவறியமையும், கவிஞரின் மனவுணர்வுகளை அதீதமாக இழுத்தெடுத்து முன்வைப்பதும் நல்ல விமர்சனங்களுக்கான வலிமைகளாக இல்லை. குறிப்பாகச் சொல்வதானால், அறிமுகங்கள் நன்றாகவே இருக்கின்றன. எனினும், காத்திரமான சஞ்சிகைக் குரித்தானவையாக இல்லை என்பதே தர்க்கமாகும்.

'பருகுவோம் ஒரு கிண்ணம் மது' பலஸ்தீனக் கவிஞர் மஹ்மூத் தர்வீஸின் நேர்காணல் வாசிப் பிற்கு நல்லதொரு ஆக்கம். கேள்வி களும் பதில்களும் பின்புலத்தை மீள் நினைவிற்குட்படுத் துவதற்கு ஒளிவீச்சுகளாக திகழ்கின்றன. சுவையான மொழியாக்கம்.

'அவர் சொல்லுவது சரிதான்' 'இருட்டும் தொடரும்', 'கொஞ்சம் யோசியுங்கள்' , 'கை கொடுத்த தெய்வம்' என்பவை நல்ல அரசியல் நையாண்டிகளாகும், அரசியல் பத்திகள் வாசிப்பிற்கு கடூரமாகவும், கொடூரமாகவும் நாளேடுகளிலும், வாரேடுகளிலும் வெளிவருகின்ற ஒரு நிலையில் தகவல்களை துல்லியமாகவும் நையாண்டியாகவும் வழங்கும் இத்தகைய ஆக்கங்கள் அதிகளவில் வெளிவரவேண்டும். இவை சாதாரண வாசகர்களின் வாசிப்புத் திறனை முதிர்ச்சியடையச் செய்யவல்லன.

நமது சிற்றேடுகள் எப்போதுமே 'குண்டுச் சட்டிக்குள் குதிரையோட் டுவது' போல ஒருசில புத்திஜீவிக ளுக்கு விளங்கக்கூடிய வகையிலே மொழி நடையை பின்பற்றிவருகின் றன. அதன் காரணமாகவே சாதா ரண வாசகர்கள் சிற்றேடுகளை தவிர்த்துவருகின்றனர் என்ற ஒரு வாதமும் உண்டு. சிற்றேடுகள் தரும் காத்திரமான இலக்கியச் சமாச்சாரங் கள் பெரும்பாலான இலக்கிய ஆர்வ லர்களை எட்டாமல் போகின்றன.

ஓவியங்களும், நிழல்படங்களும் தவிர்க்க முடியாதவை. அவை தாரா ளமாகவே இடம்பெற்றுள்ளன. ஓவி யங்களும், நிழல்படங்களும் மனத் தைக் கவர்வன மட்டுமல்லாது நுணுக்கமான விசயங்களை துல்லிய மாக சொல்லவல்லன. சட்டம் யார் கையில் என்ற தலைப்புடன் நிகழும் பின்னட்டை பாராட்டக்கூடியது.

கட்டுரைகளின் மீதான முரண் பாட்டுக் கருத்துக்கள் சஞ்சிகை குறித்த எதிர்மறையான விமர்சனங் களும் இடமளிக்கப்பட்டி ருக்கின்றது. பாராட்டுக்குரியது.

**கே.வி.**

நமது இதழ்கள் ஒன்றுக்கொன்று எதிர்மறையான கருத்தோட்டங் களை ஈர்த்தெடுப்பதற்கும் தர்க்கரீதி யான சமூக உரையாடலுக்கும் வழிவகுத்தல் வேண்டும். அரசியல் முதல் இலக்கியம் வரை இப்பணி தொடர சரிநிகர் போன்ற சஞ்சிகைகள் களம் அமைக்க வல்லன என்பதை நம்பலாம்.




## நாரதர் கலகம் நன்மையில்...

''நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்று சொல்லுவார்கள் தானே.''

''நல்ல பகிடி, கலகம் என்றால் அடிதடி தானே. அது எங்கே நன்மையிலே முடியப்போகுது. கூடிப்போனால் மண்டை உடைப்புத் தான்.''

''இல்லையப்பு எங்களின்ட புராணங்கள் இதைத்தான் சொல்லுது நெஞ்சடைப்பென்றால் பைபாஸ் சேர்ஜரி, அப்பெண்டிக்ஸ் என்றால் வயித்துலே அறுவை, இப்பிடி எதை எடுத்தாலும் கலகம்தானே தலைதூக்குது.''

''அது கிடக்கட்டும் விசயத்தைச் சொல்லுங்கோவன்.''

''நூல் வெளியீடாகட்டும், கருத்தரங்காகட்டும் அதை பத்திரிகையிலே கொஞ்சம் நெளிவு சுழிவோட முரண்பாடான கருத்துக்களை எடுத்துச் சொல்லி ஒரு விவாதத்தை ஆரம்பித்து வைக்கலாம் என்று பார்த்தால், யாரடா அவன் எடடா தடியை முடியடா ஆளை என்றல்லோ எகிறிப்பாஞ்சு குதிக்கிறாங்கள்.''

''அடடா இது கூடாது கண்டியோ. முரண்பாடுகள் தான் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். சும்மா அலம்பலால் ஒன்றும் பிரயோசனம் கிடையாது. முரண்பாடா? பிடிக்கேயில்லியா? அதை ஒரு சமூக உரையாடலாக மாத்திப் போடக்கூடியவங்கள் தான் கல்விமான்கள் என்று பாராட்டவேண்டும்.''

''அப்பிடிப் போடுங்கோ''

''ஆனால் என்ன பரிதாபம் கண்டியோ எங்களிண்ட கல்விமான்களிலே ஒன்றிரண்டுபேர் எங்களிண்ட பத்திரிகைகளையும், ஏடுகளையும், மஞ்சள் பத்திரிகைகள் என்று அர்ச்சனையும் செய்துபோட்டு, அவுங்களுக்கு பிடிக்காத ஏதோ விசயத்தை சொல்லிப்போட்டான் என்று தப்பா அர்த்தம் செய்து கொண்டு, ஏழைப் பத்திரிகையளன்ட வயிற்றுலே அடிக்க நிர்வாகத்துக்கு கள்ளக் கடதாசியும் எழுதிப் போடுறாங்கள்.''

''எண்ட தம்புரானே''

''இதுல பகிடி என்னென்றால் கடுதாசி போட்ட கல்விமான், தான் செய்ததையும் ஏத்துக்கொண்டு ஏதோ அவர் பெரிய புண்ணிய காரியம் செய்தாப்போல புரட்சிக்குரல் எழுப்புகிறார்.''

''என்னவாம்''

''அவர் எழுதுன புரளிக்கடுதாசி ஒன்றும்பாரதூரமானதில்லையாம். இவர் போட்ட கடுதாசிக்காக நிர்வாகம் பத்திரிகைக்காரரை மன்னாபின்னாவென்று திட்டிப்போட்டுதாம். அதுகூடாதாம்.''

''கிழிஞ்சுதுபோ, இவரென்ன பத்திரிகையாளருக்கு இன்கிரிமெண்ட் கொடுங்கோவென்றே சிபாரிசுக் கடிதம் போட்டவர்.''

''நல்ல பகிடி''

## படம் காட்டும் பச்சோந்திகள்

''கதை, உள்ளடக்கம் , பாத்திரம் இதுகளைப் பத்தி கதை கதையா பேசுவாங்க எல்லாம் அதுக நன்னா மனசுலே பதியனும்னு சொல்லுறாங்களே அது எப்புடி?''

''அடடா எத்தனை சுவைன்னு சொன்னா அது நல்ல கதை. சா! என்ன ஒரு அர்த்தம்ன்னா அது நல்ல உள்ளடக்கம், அடப் பாவி உன்னை மறக்க முடியலியேன்னா அது நல்ல பாத்திரம்''

''அப்படியா சொல்லுறியே அதுதான் நம்ம பயாஸ்கோப் காரங்க எல்லாம் மக்கள் மனசுலே 'கப்'புன்னு ஒட்டிக்கிட்டு இருக்காங்களே. அப்ப அவுக எல்லாம் நல்ல பாத்திரங்க தானா?''

''அது வேற சமாச்சாரம். தமிழ்ப் படங்கள்லே வீரப்பாவும், நம்பியாரும் சதா கொடுமைக்காரரா வருவாங்க. அவுக எந்த அளவுக்கு மக்கள் மனசுலே கொடுமைக்காரர்களாக பதிஞ்சி இருந்தாங்கன்னா, இவுக ஒரு சமயம் படப்பிடிப்புக்காக ஒரு கிராமத்துக்கு போயிருந்தப்போ,அந்த கிராமத்து பொம்மனாட்டிகளெல்லாம் துண்டக்காணோம், துணியைக்காணோம்முன்னு வயல் பரப்பையெல்லாம் துவம்சம் பண்ணிட்டு ஓடி ஒளிஞ்சிட்டாங்களாம்''

''அடப்பாவிகளா''

'' 'நகர்வு' ன்னு ஒரு சிறுகதை. ஓய்வு பெற்ற டொக்ரர் கயிலாயர் எழுதுன கதை. மனுஷன் நெஞ்சு வலிக்காரர். யுத்தம் நடக்கிற வடக்கைவிட்டு தென்னிலங்கையிலே சீவியம் பண்ணிக்கிட்டிருக்கார். அவர் எழுதுன கதைதான் நகர்வு.''

''ஆமா! அதுக்கு என்ன இப்போ''

''இந்த கதைக்கு அவரு பச்சோந்தின்னு தான் பேர் போட்டிருந்தாராம்''

''அது எப்புடி நகர்வுன்னு மாறிடிச்சு''

''அதுதான் உள்ளடக்கச் சிறப்பு''

''என்ன சொல்ரியே?''

''ஏலே இந்க கதை என்ன சொல்லுதின்னா. போர் நடக்கிற பூமியிலே வைத்திய வசதி கூட இல்லாமல் சனம் கஷ்டப்பட்டுக்கிட்டு கெடக்கு. ஆனால் அந்த ஊரைச் சேர்ந்த டொக்ரர்மாரும்வசதியானவங்களும் கொழும்புலே கன்னாபின்னான்னு ஆடம்பரமாக சீவிச்சிக்கிட்டிருக்காங்களாம்.''

''அடப்பாவமே''

''இதைப் படிச்சிட்ட இன்னொரு யாழ்ப்பாண டாக்டருக் [illegible] சுருக்குன்னு பட்டிரிச்சாம். ஏ என்னவே எழுதுரே, பேரைப் [illegible] பேரே பச்சோந்தியாம். அதை மாத்துன்னு முரண்டு பிடிச்ச[illegible]

''மனசைத் தொட்டுச் சொல்லுங்கோ. நீர் ஒரு டொக்ர[illegible] எங்களிண்ட சனம் அங்கே கஷ்டப்படுது. நீங்கள் எங்கே [illegible] போனீர்கள் என்றால்....'' என்று இவர் இழுக்க.

''ஏன் நீரும் போகலாம் தானே''

''ஐயோ நான் நெஞ்சு வருத்தக்காரன்''

''ஓகோ நானும் நெஞ்சு வருத்தக்காரன் தான்'' என்று [illegible] போட பச்சோந்தி நகர்வாக மாறிவிட்டது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 289

சொற்சிலம்பம் 289 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் நவம்பர் 24ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 09 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.287 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 287

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 க | 3 வ | ல் | ■ | 4 க | 5 மு | 6 கு |
| 7 மு | தி | ர் | ■ | 8 து | ரு | த் | தி |
| 9 த | ர் | க் | 10 க | ம் | ■ | 11 த | ரை |
| ம் | ■ | 12 க | ற் | பி | 13 த | ம் | ■ |
| ■ | 14 ந | ம் | ப | ■ | க | ■ | 15 சி |
| 16 அ | லி | ■ | 17 க | ர் | ப் | ப | ம் |
| 18 ச | த | 19 க | ம் | ■ | ப | ■ | ம |
| 20 தி | ல் | லை | ■ | 21 து | ன் | ப | ம் |

### சொற்சிலம்பம் போட்டி இல. 287

1. சி.ரவிக்குமார், இல: 55/20 மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை.
2. சி.சிந்துளா, இல.24,கோவில்வீதி, குருமண்காடு, வவுனியா.
3. செல்வி உருத்திரமூர்த்தி அஜீர்த்தனா, சாஹிரா தேசிய பாடசாலை, 35, ஹம்பாந்தோட்டை.

### பாராட்டுப் பெறுவோர்

1. செல்வி பாத்திமா முஹூசாஸ், புத்தளம்.
2. எஸ்.ஜெனிலி பெர்னாண்டோ, பேசாலை.
3. செல்வன் இ.வியாகரன், வவுனியா.
4. திருமதி பாலசரஸ்வதி தங்கவேலு, கொழும்பு -05.
5. எம்.என்.ரிஸ்னியா மாவனல்லை.
6. சி.இராஜேந்திரா, கொழும்பு 06.
7. எம்.ஏ அத்தாஸ், மாத்தறை.
8. வே.மார்க்கண்டு, கிளிநொச்சி.
9. எம்.ஐ.எம்.ஹூஸைன், தலவில.
10. திருமதி.ப.நாகேஸ்வரி, கல்கிசை.
11. க. அமானி, கம்பளை சாஹிரா கல்லூரி.
12. திருமதி ந.பரமேஸ்வர நாதன், ஹட்டன்.
13. ஏ.எஸ்.இசட் முனவ்வறா, புத்தளம்.
14. செல்வி . ஏ.சி.அஸீறா, பொலன்னறுவை.
15. செல்வி பஸ்லினா இஸ்ஸடீன், கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 289

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | | ■ |
| ■ | 13 | | 14 | | ■ | 15 | 16 |
| 17 | | | | ■ | 18 | | |
| 19 | | | ■ | 20 | | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

### சொற்சிலம்பம் போட்டி இல.289

**இடமிருந்து வலம்**

1. இலங்கையின் புனித தலங்களில் ஒன்று.
6. மரம்.
7. சோறுடன் சேர்த்து உண்பது.
8. இது சிற்றுயிர்.நம் உடல் அழுக அதில் இது பிறக்கும்.
9. மடல்/திருமுகம்.
11. வெட்டுவது இதனால்.
12. விருந்தினர்.
13. தகுந்தது/ உரியது.
15. தாய்/அன்னை.
17. இது வந்தால் குடல் பெருக்கும் என்பர் .
18. அரசுப் படைகளின் கண் இப்போது இதன் மீது.
19. வேள்வி .
20. ஒரு திசையைக் குறிக்கும் சுருக்கச் சொல்.
21. சாப்பிடு.
22. தாய்-தந்தை-பிள்ளைகள் ஒன்று சேர...

**மேலிருந்து கீழ்**

1. ஒரு நாட்டிய வகை.
2. களவு செய்யும் பெண்.
3. கறுப்பு நிறத் தோட்டி/ஒரு பறவை.
4. ஆடு, குதிரை போன்றவற்றின் பெண் குட்டி/தடு.
5. மண் காய்ந்து, காற்றுவீசக் கிளம்புவது.
8. இவன் பலவான்.
10. விவாதம்.
11. வேகம்.
12. சுட்டும் சொல்/ஆறாவது ஒருமை உருபு.
13. உமாதேவியின் பிதா.சிவனின் எதிரியும் கூட.
14. படி/சிலை வடிப்பது இதில்
16. நெல் முதலிய மணிவகைகள்.
17. நோய்.
18. தேர் இழுக்கும் கயிறு.
20. காயத்தின்அடையாளம்.

# நிர்வாணம்....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

போகவேண்டியவர்கள்தான். அவள் பலவாறாக யோசனையில் ஆழ்ந்திருந்தபோது கதவு தட்டப்பட்டது. பதற்றத்துடன் திறந்தாள் வெளியே ஆனந்தன். ஓடிச்சென்ற பிலோமினா அவனை அணைத்துக்கொண்டாள்.

"அத்தான் என்னை மன்னிச்சிடுங்கோ"

விசும்பி விசும்பி அழும் அவளைத் தேற்றியபடி ஆனந்தன் அவளது கேசங்களைத் தடவினான். இன்னமும் அவள் விசும்பிக்கொண்டிருந்தாள்.

"பிலோமி... நீதான் என்னை மன்னிக்கணும்... அண்டைக்கு மதுபோதையில நான் தவறாக நடந்திட்டன். நான் பிடிவாதமாக, பலவந்தமாக நடந்ததால தான் நீ என்னை எதிர்த்து தள்ளிவிட்டாய். எதிர்பாராத விதமாக என் தலை சுவரிலை அடிபட்டு காயம் ஏற்பட்டுவிட்டது. அப்போதிருந்த மனநிலையிலை ஆத்திரத்துடன் வீட்டைவிட்டு வெளியேறினன்... எங்கையாவது போய் சகவேணும் போல இருந்தது..."

"ஐயோ... அத்தான்... என்னை விட்டுப் போக உங்களுக்கு எப்படி மனம் வந்தது? " பிலோமி கதறி அழுதாள்.

"அழாதே பிலோமி... அதுதான் உன் கடவுளுக்கே பிடிக்கவில்லைபோலும்... வழியில மயங்கி விழுந்திட்டன்... கண்முழிச்சுப் பார்த்தால் ஆஸ்பத்திரியில தலையிலை கட்டோட படுத்திருக்கிறன்... அப்பதான் உன்நினைவு வரவே துடிதுடித்துப்போனன்... ...கிடையிலை ஆஸ்பத்திரி எல்லாம் ...பாக இருந்தது. ... பிறகுதான் ...ப்பட்டன்.... போராளியள் ...புரம் விமானப் படை முகாமைத் ...ராளமான விமானங்களைச் ...டுத்தினதை, சா.... எவ்வளவு ...லான தாக்குதல்.... ...மயிலேயே தங்கட உயிரை ...னைத்து தாய் மண்ணின் ...லக்காக அவர்கள் செய்த ...தை எதற்கும் ஒப்பிடேலாது... ...வர் மத்தியில் படுத்திருக்க எனக்குப் பயமாக இருந்தது. எங்கேயும் துவேசமான பேச்சுக்கள். எங்கட பிரதேசங்களிலே தினம் தினம் இப்படியான இன்னும் மோசமான பொதுமக்களை, சிறுவர்களை எல்லாம் அரச படையள் பள்ளிக்கூடங்களிலையும் ஆலயங்களிலையும் அகதிமுகாம்களிலையும் வழிதெருவிலையும் அழிக்கிறபோது எங்கட மனம் எவ்வளவு துடிதுடிச்சிருக்கும் எண்டதை அவங்கள் உணரேல்லை..."

"ஓம் அத்தான்.... மக்களுக்கு எல்லாமே மறைக்கப்படுகுது. இல்லாட்டில் திரிபுபடுத்திச் சொல்லப்படுகுது... முல்லைத்தீவில அனாதைச் சிறுவர் இல்லத்தைத் தாக்கி அழிச்சுப்போட்டு பயிற்சிமுகாம் எண்டு பிரசாரம் செய்த மாதிரி... அது சரி அத்தான் உங்கட காயம் மாறியிட்டுதே?" என்றபடி கட்டுப்போட்டிருந்த ஆனந்தனின் தலையைத் தடவினாள் பிலோமினா.

"எங்கட பொடியள் செய்யுற உயிர்த்தியாகத்துக்கு முன்னால இதெல்லாம் தூசு பிலோமி... நான் வைத்தியசாலையில இருந்தபொழுது விமானப்படை முகாம் தாக்குதலில் சாவடைந்த தற்கொலைப்படைப் போராளிகளுடைய வித்துடல்களைக் கொண்டு வந்தாங்கள்.... அந்தக் கொடுமையை அநாகரிகத்தை எப்படி என்ர வாயால சொல்லுறதெண்டு தெரியேல்லை. எல்லா உடல்களையும் நிர்வாணமாக ட்ரரக்டர் பெட்டியிலை கொண்டு வந்தவங்கள். சில சிங்களச் சனமே இதைக் கண்டு கண்டிச்சுக் கதைச்சதுகள்... என்ன மோசமான மிருகத்தனமான செயல். இரத்தம் எல்லாம் கொதிச்சுது. நிர்வாணம் என்பது எவ்வளவு கொடூரமெண்டு புரிஞ்சுது பிலோமி..."

"அத்தான்... என்னுடைய மனது குரூரப்பட்டுப் போனதற்கும் அம்மாவின்ர நிர்வாண மரணம் தான் காரணம். உங்களோட இதனால தான் பலதடவை முரண்பட்டன்... சின்ன வயதில நடந்த அந்தக் குரூரமான இறப்பை என்னாலை சொல்ல முடியாமலிருந்தது... மனதிலை அவ்வளவு தாக்கம்... இப்ப என்னால சொல்ல முடியுது... வாங்க முதல்ல சாப்பிட்டு விட்டு எல்லாத்தையும் விவரமாகச் சொல்லுறன்" என ஆறுதலாக அவனை அணைத்தபடி சென்றாள் பிலோமினா. அவர்களிடையே இருந்த திரை விலகியது போல் தோன்றியதால் மனது நிம்மதியடைந்தது.

இந்தக் குதூகலத்தினிடையேயும், தாய் மண்ணுக்காக நிச்சயிக்கப்பட்ட மரணத்துடன் வந்து உயிராயுதமாகப் போராடி உலங்கு வானூர்திகளையும், விமானங்களையும் அழித்து, உலகை வியப்பில் ஆழ்த்தி வீரகாவியம் படைத்த மறவர்களை நினைக்க நினைக்க பெருமிதமும் கூட பெருந்துயரும் அவர்கள் இருவரின் மனதையும் ஆக்கிரமித்திருந்தது. கூடவே, மண்ணுக்காக தம் இன்னுயிரை ஈந்த பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் தியாகம் மனதை நிறைத்தது.

"மண்ணிற்காய் ஒரு மைந்தனைப் பெற்றுத்தருவாயா பிலோமி?" என்று அன்போடு அவளை நோக்கினான் ஆனந்தன். "போங்க" என செல்லமாக நாணத்துடன் தலையைத் தாழ்த்திக்கொண்டாள் பிலோமினா.

★

# இரட்டை வேடத்தில்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தளபாடங்களையும் இந்தியா வழங்குகின்றது.

அதாவது, பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பது போல் இந்தியா இரட்டை முகம் காட்டுகின்றது. இதற்கான அடிப்படைக் காரணம் அண்டை நாடுகளான சீனாவும், பாகிஸ்தானும் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கிவிட்டால் அது இந்தியாவிற்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும். இதனால்தான் இந்தியா முந்திக்கொண்டு இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கியது என்றும் கூறப்படுகின்றது.

நேபாளிகள் எப்படி இந்தியாவின் தலையீட்டை விரும்பவில்லையோ, அப்படியே இங்கு வாழும் தமிழர்களும் இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுதங்களை வழங்குவதை வரவேற்கவில்லை.

நோபாளத்தில் நாம் தங்கியிருந்த நாட்களில் அரசியல் தலைவர்கள், போராளிகள், இராணுவம், சட்டமேதைகள், பத்திரிகை ஆசிரியர்கள், தொண்டர் நிறுவனத் தலைவர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள், மாணவர்கள், வர்த்தகர்கள் என பலதரப்பட்டவர்களையும் சந்தித்து திரட்டிய விவரங்களின் அடிப்படையில் உற்றுநோக்கினால் வெளியே இருந்து நோக்கும்போது மாவோயிஸ்ட்டுகளினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஆயுதப் போராட்டம் ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும், அவற்றின் நோக்கமும், சிந்தனைகளும், எதிர்பார்ப்புக்களும் பெரிதும் வித்தியாசமானவை.

நோபாளத்தில் மன்னர் தன் அதிகாரங்களை தாரைவார்க்க முன்வந்தது போல், இங்கு ஜனாதிபதி ஒருபோதும் தனது அதிகாரங்களை விட்டுக்கொடுக்கப்போவதில்லை.

ஒரு நாட்டின் ஜனநாயகமும் சுதந்திரமும், அந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினர் சுயகௌரவத்துடன் பெரும்பான்மை இனத்திற்கு சமமாக வாழும் நிலை உருவாகும்போதுதான் உண்மையாக உணரப்படும்.


நேபாளத்தில் மன்னர் ஆட்சியிலும் சரி, நாடாளுமன்ற ஆட்சியிலும் சரி இன ஒடுக்கல்கள் இடம்பெறவே இல்லை.

நேபாள மண்ணில் ஒரு இந்துவாகப் பிறந்த போதிமாதவனையே தமது இன தெய்வமாக ஏற்றுக்கொண்டு வழிபடும் பெரும்பான்மை இனத்தவர்கள், இதேமண்ணில் பிறந்து இந்த நாட்டின் இனமாக சுதந்திரத்திற்குப் போராடிய தமிழர் பரம்பரையை மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நோக்குவது ஏன் என்ற ஏக்கத்துடன் நேபாள மண்ணில் இருந்து விடைபெற்றோம்.



# அறிவியல்

ரி.கே.ஆர்



## சனிக்கோள்



பதினெட்டுச் சந்திரன்களை உடைய சனிக்கோளின் மத்தியரேகைப் பகுதியைச் சுற்றி விநோதமான வளையங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் மூன்று பிரதான வளையங்கள். பிரதான வளையங்கள் ஒவ்வொன்றும் பற்பல சிறுவளை யங்களின் கூட்டினால் ஆனது ஆகும். வளையத் தொகுதியின் விட்டம் 283,900கி.மீ. ஆகும். இந்த வளையங்கள் 66,800கி.மீ.அகலமும், .65கி.மீ. தடிப்பும் உடையன. இவை சனிக்கோளின் மேற் பரப்பில் இருந்து 10,000 கி.மீ. உயரத்தில் அமைந்துள்ளன. இந்த வளையங்கள் பாறைக் கற்களாலும் பனிக்கட்டிக ளாலும் ஆனவை.


## புதிய விமானம்



கனடா நாட்டிற்கு ஏ 380 ரக எயார்பஸ் விமானங்களை தயாரித்து எயார்பஸ் நிறுவனம் வழங்கியுள்ளது. இப்போது இராணுவ பயன்பாட்டுக்காக ஏ 400 ரக விமானங்களை எயார்பஸ் நிறுவனம் வடிவமைத்து வருகின்றது. படத்தில் காண்பது அந்த விமானத்தின் மாதிரி படம்தான். இந்த விமானத்தின் விலை எமது நாட்டு மதிப்பில் ரூ.20ஆயிரம் கோடி ஆகும்.

## மரண நாற்காலி

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு முறையில் மரண தண்டனை கைதிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்படுகின்றது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் 1924ஆம் ஆண்டு முதல் 1964ஆம் ஆண்டுவரை மரணதண்டனை நிறைவேற்ற மின்சார நாற்காலியைத்தான் பயன்படுத்தினார்கள். அங்கு 361 கைதிகள் மின்சார நாற்காலி மூலம் உயிரை விட்டிருக்கின்றனர். 'ஓல்ட் ஸ்பார்க்கி' என்ற பெயர்கொண்ட மின்சார நாற்காலிக்கு தற்போது ஓய்வு கொடுக்கப்பட்டதால் சிறைச்சாலை அருங்காட்சியகத்தில் அமைதியாக அமர்ந்திருக்கின்றது. கைதியை நாற்காலியோடு அதிகாரி பிணைத்திருக்கும் காட்சியிலிருந்து, கைதியின் கடைசி நொடிகள் என்று அனைத்தையும் பார்த்திருக்கிறது இந்த நாற்காலி.



## பிரமிட்டுக்கள்



எகிப்தின் தலைநகர் கொய்ரோவிற்கு வெளியேயுள்ள ஜீஸாவிலுள்ள மூன்று பிரமிட்கள் அதிசயமாக கொள்ளப்படுகின்றன. இதில் 4ஆவது வம்சத்தை சேர்ந்து அரசர் குபு (khupu) வினால் கட்டப்பட்ட பிரமிட் மிகப் பெரியது. இதன் ஆரம்ப உயரம் 482 அடிகளாகும். தற்போது இதன் அண்ணளவான உயரம் 450 அடிகளாகும். இதன் அடித்தளம் 755 அடி நீளமுடையது. ஒவ்வொன்றும் சராசரியாக 2.5 தொன்களை கொண்ட 2,300,000 கற்களை கொண்டு இந்த பிரமிட் கட்டப்பட்டுள்ளது. கி.மு. 2680 இல் இது கட்டி முடிக்கப்பட்டது.


## இரத்த உருவாக்கத்தில் பக்டீரியாக்கள்



இரத்தத்தின் தேவை சார்ந்த சிக்கல்களுக்கு தற்போது புதிய தீர்வு ஏற்பட்டுள்ளது. B, AB போன்ற இரத்த வகைகளை மாற்றும் புதிய முறையினை டென்மார்க் விஞ்ஞானிகள் ஹென்றிக், கிளாசன் ஆகியோர் கண்டறிந்துள்ளனர். பக்டீரியாக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட இரு புதிய வகை அணுக்கள் இரத்தத்தில் இந்த அற்புதமான செயலைச் செய்கின்றன. இரத்த தானத்திலும் சில வகை இரத்தங்கள் மட்டுமே அதிக அளவில் கிடைக்கின்றன. இதனால், தேவையான நேரத்தில் தேவைப்படும் இரத்தத்தின் வகைகள் கிடைக்காமல் போகிறது. எனவே, அனைவருக்கும் பொருந்தும் வகையிலான வகை இரத்தத்தை உரு வாக்க இந்தப் பக்டீரியா அணுக்கள் உதவுகின்றன.

## சூடான தகவல்கள்

சூரியனின் விட்டம் 13,88,925 கி.மீ. ஆகும். பூமிக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரம் சூரியன்தான். அருகில் என்றால் எவ்வளவு தூரம் தெரியுமா? 14.97 கோடி கிலோ மீட்டர்கள். ஏனைய நட்சத்திரங்களைப் போல சூரியனும் பயங்கர வெப்பம் உள்ள ஒரு வாயு உருண்டை ஆகும். சூரியனின் அடிவயிற்றில் ஹைட்ரஜன் வாயு எப்போதும் ஹீலியம் (Helium) வாயுவாக மாற்றப்பட் டுக்கொண்டே இருக்கின்றது. இந்த இரசாயன மாற்றம், சக்தியை ஒளி வடிவிலும் வெப்ப வடிவிலும் எப்போதும் பிறப்பித்துக்கொண்டே இருக்கின்றது. பல நூறு கோடி ஆண்டு களாக ஒரு சீரான ரீதியில் உலகிற்கு ஒளியை அள்ளி வீசி வந்துள்ளது. சூரிய ஒளி சில நாட் களுக்கு மங்கலாகப் போனாலே பூமியில் உள்ள பல உயிரின வகைகள் இறக்க நேரிடும். சூரியனின் அடிவயிற்றின் வெப்பநிலை 1.4 கோடி செண்டி கிரேட் என்றும், அதன் மேற்பரப்பின் வெப்பநிலை 6,000° செண்டிகிரேட் என்றும் நம்பப்படுகின்றது. தண்ணீர் கொதித்து ஆவியாகும் வெப்பநிலை 100° செண்டிகிரேட். சூரியனின் வெப்பத்தை இதனோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.



சூரியன் பூமியைவிடப் பிரமாண்டமானது. ஒரு சூரியனுக் குள் பத்து இலட்சம் பூமிகளை அடுக்கலாம். ஒவ்வொரு வினாடியும் சூரியனின் அகத்தில் உள்ள 40 இலட்சம் தொன் எடையுள்ள பொருட்கள் சக்தியாக மாற்றப்படுகின்றன. ஒளியின் வேகம் வினாடிக்கு 310,620 கிலோமீட்டர். இந்தக் கணக்குப்படி பார்த்தால், சூரியனில் இருந்து புறப்படும் ஒரு ஒளிக் கீற்றுக்குப் பூமியை வந்தடைய எட்டு நிமிடங்கள் பிடிக்கும். அதாவது, சூரியனை நாம் கண்களால் பார்க்கும்போது நமக்குத் தெரிவது, சூரியனது எட்டு நிமிடங்களுக்கு முந்திய தோற்றமே ஆகும்.

# சிறுவர் பக்கம்

## சிறுவர் கைவண்ணம்



ரேணுஜன்,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



கொட்வின்,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



சகானா,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.




இராமசாமி ரமேஷ்,
உடுப்புக்குளம் அளம்பில்,
முல்லைத்தீவு.



மேலே உள்ள இரண்டு படங்களில் குறைந்தது ஆறு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

## உண்மை சாட்சி



(சென்ற வாரத் தொடர்ச்சி)

"இல்லை"

"யாரது, இல்லை என்பது?" சிங்கம் கோபத்தில் பற்களை கடித்தது.

பீட்டர் முயல் முன்னே வந்த நின்று "நான்தான்" என்றது.

"உனக்கு துணிச்சல் எப்படி வந்தது...?" சிங்கராஜா அதட்டலாகக் கேட்டது.

பீட்டர் முயல் சிரித்தது, "சிங்கராஜா, நான் சொல்லுவதுதான் உண்மை. எனக்கும் சிறுத்தையைப் பிடிக்காது. ஆனால் அதற்காக என்னால் உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியாது. கல் விழும் போது, சிறுத்தை அந்த இடத்தைவிட்டு நகர்ந்து போய்விட்டிருந்தது. மேலே உள்ள பாறைக்கருகில் மரம் ஒன்று இருக்கிறது.

அதன் காய்ந்துபோன கிளை கீழேயுள்ள பாறையின் மீதிருந்த கல்லில் மோதியதால் கல் உருண்டு நேராக ராணியின் மீது விழுந்தது. ஆனால் கழுதைப் புலியும் மற்றவர்களும் சிறுத்தைக்கு கடுமையான தண்டனை கொடுக்கவே விரும்புகின்றன."

அப்போது பருந்து பறவை சொல்லியது, "என்னுடைய கூடும் அதே மரத்தின் மீதுதான் இருக்கிறது. நான் தான் கண்ணால் பார்த்த சாட்சி. பீட்டர் முயல் சொல்வதனைத்தும் உண்மை.கல் கீழே விழும்போது சிறுத்தை அங்கேயிருந்து போய் விட்டிருந்தது, கழுதைப்புலிக்கும் இதுபற்றி எதுவும் தெரியாது. அது பொய்சாட்சி சொல்கிறது."

சிங்கராஜா சிறுத்தையை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டது. சிறுத்தை மீது பொய் வழக்கு தொடர்ந்த காரணத்தால் அதற்கு வெட்கமாக இருந்தது.

"நன்றி பீட்டர்" என்ற சிங்கராஜா, பொய் சாட்சியால் நிரபராதி விலங்கு, எவ்வளவு பாதிக்கப்படுகிறது என்பதை நான் அறிந்து கொண்டேன். உண்மை சொல்வதற்கு நிறைய துணிச்சல் வேண்டும்" என்றது.

"பீட்டர் வாழ்க" விலங்குகள் கோஷமிட்டன. ஒவ்வொன்றாக வந்து முயலுக்கு வாழ்த்துத் தெரிவித்தன. சிறுத்தை தன் நன்றியை ரொம்பவே தெரிவித்துக் கொண்டது.

(முற்றும்..)

## மருந்துத் தட்டுப்பாடு இல்லை என்கிறார் பணிப்பாளர்

நவம்பர் 11ஆம் திகதிய சுடர் ஒளி வார மலரில் 'குடாநாட்டு வைத்திய சாலைகளில் தொடரும் மருந்துத் தட்டுப்பாடு' என்ற கட்டுரையில், குடாநாட்டு வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் ஆனால் குடாநாட்டு தனியார் மருந்தகங்களில் தாராளமாக மருந்துகள் கிடைக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் யாழ் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் யாழ். மாவட்டத்தில் வட மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் 38 வைத்தியசாலைகளிலும் எதுவித மருந்துத் தட்டுப்பாடும் இல்லை என்கிறார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி உள்ள மறுப்பறிக்கையில் ,

''தங்களது வாரப்பத்திரிகையில் 'குடாநாட்டு வைத்திய சாலைகளில் தொடரும் மருந்துத் தட்டுப்பாடு' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை சம்பந்தமாக உண்மை நிலையை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

யாழ் . மாவட்டத்தில் வட மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் 38வைத்திய சாலைகளில் எவ்வித மருந்துத் தட்டுப்பாடும் இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தரைவழிப்பாதை மூடப்பட்ட பின்னர் பல்வேறு சிரமங்களின் மத்தியில் கப்பல் மூலம் எமது வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துப் பொருட்களை கிரமமாக எடுத்து வந்து விநியோகித்து வருகிறோம்.

சுகாதார அமைச்சின் மத்திய மருந்துக் களஞ்சியத்தில் இல்லாத பல மருந்து வகைகளை பல அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பெற்றுக் கொள்கிறோம்.

தற்போது யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் (மத்திய மருந்தகங்கள் உட்பட) சலரோகம், உயர்குருதி அழுத்தம் போன்ற நோய்களுக்கான சிகிச்சை நிலையங்கள் (கிளினிக்) நடைபெற்று வருகின்றன. இந்நோய்களுக்கான இருவார காலத்துக்கு தேவையான மருந்துகளை சகல வைத்தியசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். மக்கள் வாழும் பகுதிகளுக்கே சேவைகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்குடன் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தரைவழிப்பாதை மூடப்பட்ட பின்னர், மக்களுக்கு அரச வைத்தியசாலைகளில் மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்காக எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் உண்மையாக உழைத்த உத்தியோகத்தர்களுக்கு இக்கட்டுரை பலத்த மனவேதனையையும், ஏமாற்றத்தையும் அளித்துள்ளது''- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அழகாக நிறம் தீட்டுங்கள் 26



தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 23



★பெயர் - வே.கொலஸ்ரிகா ★ தரம் 4
★'வெற்றியின் நல்நம்பிக்கை இல்லம்', மன்னார்.

### பாராட்டுப் பெறுவோர்...

1. ஆர்.தேவஷாலினி,
   தரம் 4,
   ஸ்ரீ கதிரேசன் த.ம.வித்தியாலயம்,
   தெரணியகலை- 02.
2. வை.சப்னா,
   தரம் 5,
   ப/ கோணமுட்டாவ தமிழ் மகா வித்தியால
3. அஸ்கா பானுன்,
   தரம் 4 சி,
   கைரியா எம்.பி.எம்.வி.,
   கொழும்பு- 09.
4. ஜே.எம்.பர்ஸாத்,
   தரம் 5 ஏ,
   லாபிர் வித்தியாலயம், நற்பிட்டிமுனை,
   கல்முனை.

# அடிமை...

*(18ஆம் பக்கத் தொடர்ச்சி)*

“சேகருடன் பேசிக்கொண்டுதான் குளிக்கிறேன்.”

“சேகர், என்ன இது?”

“எஜமானியின் கட்டளை.”

“எஜமானரின் கட்டளை. நீ குளியல் அறைக்குப் போகக்கூடாது.”

நித்யா நிதானமாக சிரித்தாள்.

“நானும் சிரிக்க அனுமதி உண்டா?” என்றான் சேகர்.

“அனுமதித்தேன்” என்றாள் நித்யா.

“ஹ ஹ ஹ!” என்று கச்சிதமாகச் சிரித்தான் சேகர்.

ஆத்மா பல்லை நறநறத்தான்.

“என்ன இது ஆத்மா? சேகர் என்ன ஓர் ஆளா? அவன் ஒரு குரல். நம் வீடெங்கும் இருக்கும். ஒரு குரல். வாம்மா சேகர், நன்றாகத் தேய்த்துக் குளிக்கலாம்.”

அவள் சென்றதும் “சேகர்?” என்று இரைந்தான.

“எஜமானரே!” என்று பதில் ஒலித்தது.

“கேலியா?”

“இங்கேயே இரு.”

“இங்கேயும் இருக்கிறேன்.”

“குளியல் அறையில்?”

“அங்கேயும் இருக்கிறேன்.”

“அவள் என்ன செய்கிறாள்?”

“உடைகளைக் களைந்துகொண்டிருக்கிறார்.”

“உடைகளை....? அடப்பாவி! எப்படித் தெரியும் உனக்கு?”

“குளியல் அறையில் இருக்கும் என் சென்ஸார் சொல்லும் செய்தி இது.”

“இப்போது அவளுடனும் பேசிக்கொண்டிருக்கிறாயா?”

“ஆம்.”

“என்ன பேசுகிறாய்? எனக்குக் கேட்க வேண்டும்.”

“கேளுங்கள்.”

‘க்ளக், க்ளக்’ என்ற தண்ணீர் ஒலி கேட்டது.

“சேகர் கண்ணா! தண்ணீர் கொஞ்சம் சூடாக இருக்கிறதே!”

“எஜமானி, உடனே குறைக்கின்றேன்.”

“இப்போது?”

“சரியாக இருக்கிறது!” மறுபடியும் க்ளக்!

“சேகர், நான் இளைத்திருக்கிறேனா?”

“சென்ற வெள்ளிக்கிழமை 55கிலோ இருந்தீர்கள். இன்றுகாலை 54.5. உங்கள் உயரத்துக்கு ஏற்ற எடை 52.”

“என் எடை?”

“நிறுத்து போதும்! மேலே வேண்டாம்! சேகர் என்ன இது ஆபாசம்! அடுத்தது துடைத்துவிடுவாயா?”

“துடைத்துவிட வேண்டுமா?”

“வேண்டாம்! வேண்டாம்! ஏய், உனக்கு வெட்கமாக இல்லை! ஒரு பெண்ணின் குளியல் அறையில் வயது வந்த நீ....”

“வெட்கம் என்ற சொல்லுக்கு அர்த்தம் தேவை. என் ஞாபக அடுக்கில் அந்த வார்த்தை கிடைக்கவில்லை.!”

“சேகர் அது தப்பு தெரியுமா?”

“வெட்கம் என்பது தப்பா?”

“ஐயோ உன் மெஷின் மூளைக்கு எப்படிச் சொல்வேன்?” ஆத்மாவுக்குத் தன் அர்த்தமற்ற பொறாமையில் வெறுப்பு ஏற்பட்டது. கோபம் வந்தது. அவன் ஒரு குரல்தான், தெரியும். இருந்தாலும் குளியல் அறைக்கு அருகே சென்றான்.

குளியல் அறையிலிருந்து நித்யாவின் சிரிப்பு மிதந்து வந்தது.

“சேகர் நீ ஒரு குறும்புக்காரன்!”

என்னுடன் இவள் எப்பொழுது இப்படிச் சிரித்துப் பேசியிருக்கிறாள்...? “சேகர், நான் அழகாக இருக்கிறேனா?”

“நீங்கள் நல்ல பெண் எஜமானி.” குரலில் எவ்வளவு மாற்றம், கனிவு! என்னுடன் பேசும் போது இவன் குரலில் கேலி தொனிக்கின்றதே! இதெல்லாம் என் மனப்பிரமையா? ஓர் எல்லைக்குமேல் கொம்பியூட்டர்களுக்கு சலுகை கொடுத்தால் இப்படித்தான் ஆகும்.

“சேகர், இன்றைக்கு என்ன சமையல் செய்திருக்கிறாய்?”

“உங்களுக்கு பிடித்த சமையல் எஜமானி.”

“என்ன?”

“அல்கா, தொட்டுக்கொள்ள துலா, மொர்ஸி, அப்புறம் தித்திப்புக்கு ஷீம்!”

“அபாரம்! சேகர் , நீ ஒரு மேதை.” மேதை! எல்லாம் எனக்குப் பிடிக்காத சமையல்! ஆத்மாவின் கோபம் எல்லை மீறிவிட்டது. “டேய் சேகர்” என்று இடிபோல் முழங்கினான்.

“என் எஜமானரே!” என்று பணிவுடன் பதில் வந்தது.

“இனிமேல் நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும். வேறு எவருக்கும் உன்மேல் பாத்தியதை இல்லை. தெரிகிறதா? புரிகிறதா?”

“அது சாத்தியமில்லை. எஜமானரே!”

“என்ன!”

“உங்கள் ஆரம்ப ஒப்பந்தத்தின்படி ஆணைகள் பிறபிக்க மூன்று பெயர்களை நியமித்து அஸ்ட்ரா கொம்பெனிக்குச் சொல்லி இருக்கிறீர்கள்.”

“அதன்படி என் ஞாபக இதயத்தில் அழிக்க முடியாதவாறு பதிய வைக்கப்பட்டுவிட்டது. ஆத்மா, நித்யா, பாபு மூவரின் கேள்விகளுக்கும் ஆணைகளுக்கும் கட்டுப்படுவது என் அழிக்க முடியாத கடமை.”

“அப்படியானால் நீ வேண்டாம்! உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன். உன் வீட்டுக்குபோ!”

“இதுதான் என் வீடு. நான் உங்கள் அடிமை. அஸ்ட்ரா கொம்பெனி ஒப்பந்தத்தின்படி நான் இந்த வீட்டின் பகுதி.”

“என்ன ஒரே இரைச்சல்!” என்று மெலிதாக நனைந்த நித்யா குளியல் அறையிலிருந்து வெளிப்பட்டாள்.

“என்ன சேகர்?”

“ என்னை வேண்டாம் எண்கிறார் எஜமானர்.”

“ என்ன இது ஆத்மா?”

“ஆமாம் வேண்டாம்! நாம் பழையபடி இருப்போம்.இந்த மாதிரி புத்திசாலி அடிமை எனக்குத் தேவை இல்லை!”

“திடீரென்று என்ன ஆயிற்று? சேகர், எஜமானருடன் சண்டை போட்டாயா?”

“அப்படி ஒன்றும் நிகழவில்லை.”

“ஆத்மா , ஏதாவது காரணம் இருக்க வேண்டும். சொல்லேன்!”

“அவன் பாத்ரூமில் உன்னுடன் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை.”

“அவ்வளவுதானே!”

“இல்லை இன்னும் இருக்கிறது. அவன் செய்யும் சமையல் எனக்குப் பிடிக்கவில்லை. அவன் என் மகனை எனக்கு எதிராகச் சதுரங்கம் ஆடி ஜெயிக்க வைப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அவன் உன்னுடன் பேசுவதே எனக்கு பிடிக்கவில்லை.”

“ஏன்?”

“ஆபாசமாக இருக்கிறது. குளிப்பதையும் உடை மாற்றுவதையும், இடுப்பளவையும் ஒரு வேலைக்காரனிடம் பேசுவார்களா?”

நித்யா சிரித்தாள்.

“எனக்கும் சிரிக்க அனுமதி இருக்கிறதா?”

“வாயை மூடு, அடிமை நாயே!”

“ஆத்மா, நீ கொஞ்சம் பைத்தியமாகிக் கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன்.”

“இன்னும் ஒரு வாரம் சேகருடன் இருந்தால் முழுப் பைத்தியாகி விடுவேன்!”

“இது பைத்தியம் இல்லை. செருக்கு! ஆணவம்! உனக்குத்தான் எல்லாச் சௌகரியங்களும் வேண்டும். அடிமை என்றால் உனக்கு மட்டும்தான் அடிமை மற்றவர்களுக்கு இல்லை. உன் மனைவிக்கு இல்லை. மகனுக்கு இல்லை. அப்படித்தானே!”

“அப்படித்தான்!”

“ஆத்மா, ஏன் இப்படி மரமண்டையாய் இருக்கிறாய்? சேகர் மனிதனில்லை, ஒரு குரல். இயந்திரம். ஒரு சாதனம். ஒரு சௌகரியம்! அவ்வளவுதான்!”

“எனக்கு சேகர் வேண்டாம்.”

“எனக்கு சேகர் வேண்டாம்.”

ஆத்மா தீர்மானமாகச் சொன்னான். “சரி! இரண்டில் ஒன்று தீர்த்துவிடலாம். உனக்கு நான் வேண்டுமா? சேகர் வேண்டுமா?....”

“ உளறாதே! ஆத்மா, உனக்கு மனம் சரியாக இல்லை. நாளைக் காலை இதைப்பற்றி பேசலாம், என்ன?”

“இல்லை, இப்பொழுதே பேசி முடிவுகட்ட வேண்டும்.”

நித்யா சிரித்துக்கொண்டே நிதானமாகச் சொன்னாள். “நாளைக் காலை ஆத்மா! நாளைக்காலை. உன் மூளை சரியாக இல்லை...” தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தித் தாளிட்டாள்.

ஆத்மா மூடின கதவை வெறித்து நோக்கினான். அவன் உடல் நடுங்கியது. மன ஓரத்தில் குற்ற உணர்ச்சியும் அவமான்மும் தெரிந்தன. ஆதாரமாக அவன் பிடிவாதம் தப்பு என்பது தெரிந்தது. மூளை சரியாக இல்லையாம்! பெண்களுக்கு இந்த நூற்றாண்டில் எவ்வளவு சலுகைகள்! அது இந்த நூற்றாண்டில் மகத்தான தப்பு. மற்றொரு தப்பு இந்த கொம்பியூட்டர்கள்!

“எஜமானரே, தூங்க உத்தேசமா.....? எலெக்ட்ரோ ஸ்வீப் அமைக்கட்டுமா?”

“இல்லை, சேகர் உன்னுடன் பேச வேண்டும்.”

“சரி எஜமானரே!” மறுபடியும் கேலி! வா வா.

“சேகர் உனக்கு உயிர் இருக்கிறதா?”

“உயிர் என்பது எந்த அர்த்தத்தில்?”

“ நீ எப்படி இயங்குகிறாய்?”

“என் கொம்பியூட்டரினால்.”

“உன் கொம்பியூட்டர் எப்படி இயங்குகிறது?”

“ஸோலார் பனல்களிலிருந்து சக்தி கிடைக்கிறது. சூரிய சக்தியைச் சேர்த்து வைத்து மின்சாரமாக்கி...”

“கொம்பியூட்டர் எங்கே இருக்கிறது?”

“மாடிப்படிகளுக்குக் கீழ், சுவரில் பதிந்திருக்கின்றது.”

“அதை திறக்க முடியுமா?”

“முடியாது.”

“அதற்குச் சக்தி தரும் இணைப்புகள்?”

“மேலேயிருந்து கம்பிகள் வழியாக வருகின்றன.”

“எத்தனை கம்பிகள்?”

“இருபத்திரண்டு.”

“அவைகளை வெட்டுவதற்கு என்ன செய்ய வேண்டும்?”

“வெட்டுக்கத்தி வேண்டும்.”

“நம் வீட்டில் அந்தக் கத்தி இருக்கின்றதா?”

“இருக்கிறது, எஜமானரே. சமையல் அறையில் மைக்ரோ அவனுக்கு மேலே இடது அலமாரியில்.”

சமையல் அறைக்குள் சென்று கத்தியை எடுத்துக்கொண்டான்.

“இந்தக் கத்தியைக் கொண்டு அந்த இருபத்திரண்டு இணைப்புக் கம்பிகளையும் வெட்டிவிட்டால் என்ன ஆகும்?”

“என் சகல சக்திகளும் மடிந்துவிடும்.”

“அந்த இணைப்புக் கம்பிகள் எங்கே இருக்கின்றன காட்டுகிறாயா?”

“நல்லது, எஜமானரே. மாடிப்படிக்கு வாருங்கள். காட்டுகிறேன்.”

ஆத்மா மெதுவாக மாடிப்படியை நோக்கி நடந்தான்.

-நன்றி சுஜாதா-

# ராசி பலன்

**19-11-2007 முதல் 25-11-2007**

**பொ.சந்திரலிங்கம்**

## மேஷம்

**அஸ்வினி, பரணி, கார்த்திகை1.**



காரியசித்தியுண்டு. குறுந்தூரப் பிரயாணம் அமையும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவருக்கு உதவ முடியும். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம் . புதிய முதலீடுகளுக்கான வாய்ப்புண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறும்.

## ரிஷபம்

**கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம்1, 2**



காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய் வர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல இருப் பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக பக்தி உண்டு. தொழில் துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர். குரு வழிபாடு செய்வது சிறப்பு.

## மிதுனம்

**மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1,2,3**



காரிய தடை மெல்ல மெல்ல விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். வீட்டில் ஓரளவு அமைதி இருக்கும். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கடகம்

**புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்**



காசிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும் . உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தைநலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முத லீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## சிம்மம்

**மகம், பூரம், உத்தராடம் 1**



காரிய தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பண விசயமாகபகை கொள்ளகூடும். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம்அமையலாம். மாணர்வ கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர் உடல் நலம் பாதிக்கலாம்பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடு களுக்கான வாய்ப்பு உண்டு. அதிஷ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## கன்னி

**உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**



காரிய தடை இருக்கும். பணப்பாற்றாக்குறை நிலவும் உறவினர்அயலவர்உதவி செய்வர். பெற் றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள்கல்வி யில் அதிக அக்கறைகாட்டார். உடல் நல முண்டு. பகை விலகும். வழக்குகளில் வெற்றி கிட்டும். திருமணவாய்ப்பு காலதா்மதமாகலம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் புதிய சிக்கல் நிலை தோன்றலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது.

## துலாம்

**சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3**



காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புஉண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ள கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறைகாட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீகள் அமையலாம். அதிஷ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வே றும். நண் பர்கள் உதவி செய்வர்.

## விருச்சிகம்

**விசாகம் 4, அனுசம், கேட்டை**



கரிய தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினருக்கும் அயலவருக்கும் உதவ வேண்டி வரும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. முதலீகளில் அவதானம் வேண்டும். அதிஷ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1**



காரியத் தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட் டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல் லை யுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்ட்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

## மகரம்

**உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2**



காரியத் தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர் உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்ட்டம் உண்டு. தெய்வீக எண்ணம் இரு க் கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## கும்பம்

**அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**



காரியதடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். உடல்நலமுண்டு. பகை விலகும். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளில் அவதானம் வேண்டும். அதிஷ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில் துறை யில் முன் னேற்றம் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.


## மீனம்

**பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி**



காரித் தடை இருக்கும். புதிய பொறுப்புகள் வரும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர். அயலவர் பகை கொள்ள கூடும். தாய் நலம்.தந்தைநலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். • மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலண்டு. பகை வி ல கு ம் . தி ரு ம ண வு ா ய் ப் பு உண்டு. முதலீடு களில் அவதானம் வேண்டும். அதிஷ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை மெதுவாக முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# தமிழகத்தில் 3ஆவது அணியை அமைக்கும் ராமதாஸின் முயற்சி!



தமிழகத்தில் இரு பெரிய திராவிடக் கட்சிகளுக்கும் மாற்றாக 3ஆவது அணி ஒன்றை அமைக்கப்போவதாக பா.ம.க. தலைவர் ராமதாஸ் அறிவித்துள்ளார். சமீப காலமாகவே இத்தகைய ஒரு முயற்சி குறித்த எதிர்பார்ப்புகள் இருந்து வருகின்றன. சிறிய கட்சிகள் யாவும் ஏதோ ஒரு பெரிய திராவிட கட்சியுடன் ஒட்டி வாழ்வது ஒரு நிர்ப்பந்தமாகவே கடந்த காலங்களில் இருந்துள்ளது. ஒரு திராவிடக் கட்சியுடன் பகைத்தால் கட்டாயமாக மற்றைய திராவிடக் கட்சியுடன் இணைந்தே தீரவேண்டியுள்ளது. உதாரணமாக ம.தி.மு.க. கடந்த சட்டசபை தேர்தலுக்கு தி.மு.க. வுடன் முரண்பட்டதால் அ.தி.மு.க. விடம் சரண்புக நேர்ந்தது. ஏற்கனவே, 'பொடா' வழக்கில் வைகோவை அம்மா சிறையிட்டுத் துன்புறுத்தியவர். எனினும், தி.மு.க.வுடன் பகைத்தால் அ.தி.மு.க. வுடன் சேரவேண்டும் என்ற விதி பின்பற்றப்பட வேண்டியதாயிற்று. அவ்வாறன்றி வைகோ தனித்து நின்றிருந்தால் இப்போதிருக்கும் 6 ஆசனங்களில் ஒன்று கூட கிடைத்திருக்காது. அவ்வாறே இரு பெரிய திராவிடக்கட்சிகளும், வெளியே தனித்து போட்டியிட்ட பி.ஜே.பி.யும் ஒரு ஆசனத்தையும் பெறமுடியவில்லை. ஆக, இரு திராவிடக் கட்சிகளையும் அண்டிப்பிழைப்பது அவசியமே என்றாகியது. எனினும், ஒரு விதிவிலக்காக விஜயகாந்த் உருவெடுத்ததும் குறிப்பிடத்தக்கது. அவர் ஒரு ஆசனத்தை வென்றது மட்டுமின்றி பல இடங்களில் அ.தி.மு.க. வினதும் சில இடங்களில் திமு.க. வினதும் வெற்றி வாய்ப்பை பாதித்தார். எனவே, 3ஆவது அணி என்பதற்கான பரீட்சார்த்தம் வெற்றி பெற்றுள்ளது என்றே கொள்ளவேண்டும். ராமதாஸும் இதை மனதிற் கொண்டே காய்களை நகர்த்தி வருகிறார். 3ஆவது அணிக்கு தலைமை வகிக்கும் நப்பாசையும் அவரிடம் உள்ளது. ம.தி.மு.க., பிஜே.பி. ஆகிய கட்சிகளை இணைத்து 3ஆவது அணியை அமைக்கலாம் என்பதே அவரது திட்டம். ஆனால், பி.ஜே.பி.யும் அ.தி.மு.க.வும் மீண்டுய நட்பு பாராட்டத் தயாராகி வருகின்றன. எதிர்வரும் லோக்சபா தேர்தலில் பி.ஜே.பி. , திமு.க.வுடன் கூட்டணிவைக்கும் வாய்ப்பு மிகக் குறைவு. காரணம் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி தொடர காங்கிரஸ் ஆதரவு தேவை. இதனால், விரும்பியோ விரும்பாமலோ தி.மு.க., காங்கிரஸ் உறவு தொடரும். எனவே, பி.ஜே.பி. ஒன்றில் அ.தி.மு.க. அணியில் அல்லது ராமதாஸின் 3ஆவது அணியில் சேர்ந்தே தீரவேண்டும். அ.தி.மு.க. வா, ராமதாஸா என்று தெரிவு செய்ய நேர்ந்தால், பி.ஜே.பி., அ.தி.மு.க.வையே தெரிவு செய்யும். காரணம், பி.ஜே.பி.க்கு அதிக லோக்சபா இடங்களை இயலுமானவரை வெல்வது அவசியம். தமிழகம் முழுவதும் பரவலாக செல்வாக்குள்ள அ.தி.மு.க.வுடன் சேர்வதை விட்டு குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டும் செல்வாக்குள்ள பா.ம.க.வுடன் சேர்வது சாத்தியப்படாது. ராமதாஸின் 3ஆவது அணியில் சேரக்கூடிய சாத்தியம் அதிகம் உள்ள கட்சி ம.தி.மு.க. ஜெயலலிதாவின் அணியில் இப்போதைக்கு வைகோ இருந்தாலும் சங்கடத்துடனேயே அவர் அங்கு உள்ளார். தி.மு.க.வுக்கு திரும்புவதும் சாத்தியமல்ல. எனவே, ராமதாஸின் 3ஆவது அணிக்கு வைகோ செல்லலாம். ராமதாஸின் 3ஆவது அணிக்கு இணங்கும் மற்றொரு கட்சி விஜயகாந்தின் கட்சியாகலாம்.

ஆனால், சினிமாவை பா.ம.க. கடுமையாக விமர்சிப்பதால் விஜயகாந்துடன் இணைவது சிக்கலே. அதிலும் விஜயகாந்தின் வெற்றிகள் பா.மக. கோட்டையிலேயே சாதிக்கப்பட்டுள்ளன.எனவே, சித்தாந்த அடிப்படையிலும் நடைமுறையிலும் இவ்விரு தரப்பும் கைகோர்ப்பது நடக்க முடியாது. எனினும் தமிழக அரசியலில் எதிரி, நண்பன் என்ற நிலை இன்றி எந்தக் யட்சியும் எந்தக் கட்சியுடனும் சேரும் என்ற நிலைதான் உள்ளது. ஆகவே நடக்கமுடியாததும் நடக்கலாம். அப்படி விஜயகாந்தும் இணைந்தால்

## பக்கத்து வீடு

மூன்றாம் அணி வலுவானதாகவே இருக்கும். அப்போது இரு பெரிய திராவிடக் கட்சிகளுக்கும் பல நிர்ப்பந்தங்கள் எழலாம். 3ஆவது அணியில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் வளைத்து பிடிக்கவும் ராமதாஸ் திட்டமிட்டு வருகிறார். அதுவும் நிறைவேறினால் 3ஆவது அணி இன்னும் வலுப்பெறும். தமிழக அரசியலில் இது காலமும் நடக்காத பல சம்பவங்கள் புதிதாக நடந்தேறிவரு காலம் இது. எனவே ராமதாஸின் கனவு நனவாகினாலும் வியப்பில்லை. அவ்வாறு நடந்தால் திராவிடக் கட்சிகளின் ஆதிக்கம் தமிழக அரசியலில் முற்றுப் பெறும். அதிலும் வலுவான சித்தாந்தம் உடைய தி.மு.க.வுக்கு அன்றி அ.தி.மு.க.வுக்கே 3ஆவது அணி பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

# அறிவு



சக்தி ரி.வி.யால் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படும் 'அறிவு' நிகழ்ச்சி கடந்த 2004ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒளிபரப்பாகி வருகின்றது. அகில இலங்கை ரீதியாக உள்ள தமிழ் பேசும் மாணவர்களின் பொது அறிவுத்திறனை வளர்க்கும் களமாக அறிவு விளங்குகின்றது. அறிவு நிகழ்ச்சியின் இரண்டாவது தொடர் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 17.11.2007 சனிக்கிழமை காலை 9 மணிக்கு சக்தி ரி.வி.யில் ஒளிபரப்பாகும். இந்த நிகழ்ச்சிக்கு நடுவராக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். சக்தி ரி.வி.யின் 9ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற சிறப்பு நிகழ்ச்சியில், கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரமும் நடுவராக கலந்துகொண்டு சிறப்பித்தார். பாடசாலை மாணவர்களின் அறிவுத் திறனை வளர்க்கும் இந்நிகழ்ச்சி இளையவர்கள், பெற்றோர், ஆசிரியர்களிடத்திலும் மிகுந்த வரவேற்பைப் பெற்ற நிகழ்ச்சியாகத் திகழ்கின்றது.


முதல் 1 kg 1,950/-
அடுத்து 1 kg 1,050/-

கொழும்பு வாழ் மக்களின் நன்மைகருதி பொதிகள் ஆவணங்கள் மிகவும் குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பாக வெளிநாடுகளுக்கு 4 வேலை நாட்களிலும் அனுப்பி வைக்கப்படும். பொதிகள் கட்டணமின்றி வீடுவந்து சேகரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
Tel: 0112 458424
Hotline: 0777 680914 ,0773 564294







HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518485
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteen.com
Webxite:www.hotelwesteen.com